www.tamilarangam.net



# எரிமலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெப்ரவரி 1995



# அக்கறைப்பூக்கள்

**அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,**

கார்த்திகை மாத இதழ் படித்தேன். எரிமலை இதழின் முன் அட்டைப் படமே என்னை அளவில்லா மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. ஏன் தெரியுமா? நான் யாழில் காணவிரும்புவது, ஏன் முடிந்தால் துயில விரும்புவது மாவீரர் துயிலும் இல்லம்தான்,

'பிறப்பும் இறப்பும் விடுதலைக்காக' படித்தவுடன், எல்லோரும் இப்படி நினைத்தால் நாம் ஏன் அடிமையாய் வாழவேண்டும். இன்னும் பலர் அடிமை மோகத்தில் இனிமை கொள்வது ஏனோ எனக்குப் புரியவில்லை.

வேவுப் பிரிவினரின் துன்பம் மிக்க பணியையும், நாட்டின் விடுதலையை எண்ணி இன்பத்துடன் பணி செய்யும் இலட்சிய மனிதர்களின் உள்ளத்து உறுதியையும் பார்க்கும் போது இதை ஏற்படுத்திய எம் தலைவனை எப்படிப் புகழ்வது என எனக்குத் தெரியவில்லை.

புதுவைத் தமிழ் நெஞ்சனின் கவிதை கவிதையல்ல, அது எமது நிலையை வளர்க்கும் அழகான ஓர் செப்பேடு. வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் உரிமைக் குரல்களையும் அவர்களின் தமிழ்ப்போராட்டம் சார்ந்த நிகழ்ச்சிகளையும் வெளியிடும் போது வேதனையாய் உள்ளது. வெளிநாட்டில் பிழைப்பதற்காகப் போன இடத்திலும் நம்முடைய உரிமைக் குரலை உயர்த்திப் பேசமுடிகிறது. ஆனால் தமிழரின் தாயகமாம் தமிழ்நாட்டில் தமிழ் என்று பேசினாலே சிறைக் கதவுகளை முத்தமிட வேண்டியுள்ளது. இனித் தமிழை வெளிநாட்டில்தான் வளர்க்க முடியும் போல் இருக்கிறது. வியாசனின் கவிதை நம்முடைய நிலையை தெளிவாக விளக்குகின்றது. 'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' அருமையான பதில்.

www.tamilarangam.net

தீவிர தேசியவாதம் ஐரோப்பாவில் வளருமாயின் அதிகம் பாதிப்படைவது இன்றை நிலையில் நாமாகத்தான் இருக்கும். ஏன் தெரியுமா? இப்போது, தமிழகத்தில் உதைபட்டால் கேட்பதற்கு யாருமில்லை. நாம் தமிழகத்தில் பல இடங்களில் உதைபட்டும் நாம் இந்தியத் தேசியவாதம் பேசிக்கொண்டுள்ளோம்.

நண்பர் ஒருவர் அக்கறைப் பூக்களில் எழுதியிருந்தார், 'எரிமலை பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று' என. நானும் அத்தனைத்தான் நினைத்தேன். இதனைத் தமிழகம் எடுத்துச் செல்ல மிகவும் ஆசையுடன் உள்ளேன். ஆனால் என்ன செய்வது? அங்கே ஆள்வது எமது எதிரிகள். ஆகையால் மிகவும் வேதனையுடன் யோசிக்கின்றேன். புதையலை விட்டுச் செல்வது போல அதனை நினைத்துத் துன்பத்தில் உள்ளேன். ஆனாலும் அது என் மனதில் பதிந்துவிட்டது. அறிவு தெளிவு உண்டாக்கிவிட்டது. வாழ்க எரிமலை! வாழ்க தமிழ்! வாழ்க புலிகள்! வாழ்க அண்ணன் பிரபாகரன்! வாழ்க தமிழீழம்!

**என்றும் எம்மின மக்களின் நினைவில்**
**வாழும் தங்களின் இனியமாசிலா**

**எரிமலை ஆசிரியருக்கு வணக்கம்!**

எரிமலை புரட்டாதி திங்கள் இதழ் கண்ணுற்றேன். பெரும் மகிழ்ச்சி.

தொடர்ச்சியாக எரிமலை படித்து வந்ததினால் தெளிவுற்றேன்; செயல்படுகிறேன்.

இதழ் ஒட்டு மொத்தமாக எல்லா சிறப்புகளும் பெற்று இருந்தது.

இதழின் அட்டை படத்தில் திலீபனின் படம் நெஞ்சை நிமிர்த்துவதாக அமைந்திருந்தது.

தியாகி திலீபனின் வாசகங்கள் சுதந்திரம் பெறும் தமிழீழத் தாயகத்திற்கு தாரக மந்திரமாக உள்ளது.

தமிழ்நாட்டு கவிஞர்கள் எல்லாம் இன்று தமிழக இளைஞர்களை திசை திருப்பும் திரைப்படங்களுக்கு கொச்சைத் தமிழும், இரண்டு மூன்று பொருள் கொள்ளும் வசனங்களும், பாடல்களும் எழுதி, மூளைச் சலவை செய்யும் கலை, கவி வியாபாரிகளாகி வரும், இன உணர்விலிருந்து தொலைதூரம் ஒதுங்கி நிற்கும் கயவர்களின் மத்தியில் சுயநலம் இன்றி, அடக்குமுறைக்கு அஞ்சாமல், அரசியல்வாதிகளின் வலையில் வீழாமல், சிறைக்கொடுமை வந்தாலும், அதை சிரித்து ஏற்கும் நிலையில் இருந்து கொண்டு இன எதிரிகளுக்கு மத்தியில் முழு உணர்வு கொண்ட உணர்வாளர்களாக எங்கு தமிழினம் தலைகுனிந்து நிற்கிறதோ, எங்கு தமிழன் இனம் தெரியாதவனாக இருக்கின்றானோ அங்கெல்லாம் சென்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், மானக் கவிஞர் கவி பூங்குன்றன், புதுவை கவிஞர் இரத்தினதுரை ஆகியோர் எழுதிய பாடல்களை எல்லாம் வீரம் கலந்த உணர்ச்சியுடன் தமிழ் மக்கள் இடையே பாடி இளைஞர்


தொடர்ச்சி 35ம் பக்கம்

**வாசகர்களின் கடிதங்கள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கடிதங்கள் உற்சாகத்தையும் புத்தூக்கத்தையும் எமக்களிக்கின்றன. பிற நாடுகளில் வாழும் இன உணர்வாளர்களின் கடிதங்கள் எம்மோடு பேசுகின்றபோது நாம் அவற்றோடு ஒன்றித்துப் போய்விடுவதுண்டு. அத்தகைய உணர்வாளர்கள் உலகமெங்கும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடமெல்லாம் எரிமலை தவழவேண்டும் என்பதே எமது ஆவல்.**

**எழுத்தாளர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. போராட்டம் சார்ந்தும் சமூக விழிப்புணர்வு சார்ந்தும், கலை இலக்கியப் படைப்புக்களை எமக்கு அனுப்பி வையுங்கள். ஓவியங்களை வரையவல்ல ஓவியர்கள் இருப்பார்கள். அவர்களிடமிருந்தெல்லாம் ஓவியங்களைப் பெற்று அனுப்பும் வகை செய்யலாம். எரிமலை சஞ்சிகையை பலரும் படித்துப் பயன்பெறுகின்ற வண்ணம் செய்துவருகின்ற வாசகர்கள் அனைவரையும் நாம் வாழ்த்துகின்றோம். உங்களின் உயர்ந்த எண்ணத்தையும் தூர நோக்குக் கொண்ட பார்வையையும் நாங்கள் புரிந்துகொள்கின்றோம். உங்களின் ஆற்றல்களையும் ஆளுமைகளையும் எரிமலையூடாக வெளிப்படுத்துங்கள். எரிமலைக்காக சஞ்சிகைகள், புதிய நூல்கள், புதிய அறிவியல், விஞ்ஞான, சமூக வளர்ச்சி பற்றிய தகவல்களை அனுப்பிவையுங்கள். தொடர்ந்து எழுதுங்கள். உழையுங்கள். உங்களின் அக்கறையுள்ள பூக்கள் இன்னும் ஏராளமாய் மலரட்டும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாரங்களைச் சுமக்க
வலிய தோள்களை உடைய
வாலிபங்கள் வேண்டும்
"எனக்கென்னடா"
என்றிருத்தல்
யார் சொன்னது சுகமென்று?
ஒதுங்கிப் போறது, பாராது இருப்பது
கேளாதிருப்பது, பேசாது இருப்பது
போராடாது இருப்பது
எல்லாமுமே திரண்டு
உருப்பெருத்து
வாசலில் வந்து கதவுகளைத் தட்டும்
உன் வீட்டின் கதவுகளைத் தட்டும் போதுதான்
நீ விழிப்பது என்றிருக்கிறாயா?
உன் நெஞ்சக் கதவுகளைத் திற!
விசையுற எழுகிறது பார்
எங்களின் விடுதலைப் படகு.
கதிர்கள் விரிக்கின்ற எங்கள் பூமியின்
கதைகள் படிப்போம் வா.

- வாசன் -

## இதழின் உள்ளே


★ எதிரிகளை விட துரோகிகளே ஆபத்தானவர்கள் - 05
★ தந்தையின் கையில் சிலுவைச் சீவுளி ..... - 07
★ ஒரு பேரினவாதியின் அவலச்சாவு - 09
★ போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும் .... - 12
★ இனப்பிரச்சினையும் அதன் சர்வதேசப் பரிமாணமும் - 16
★ வியட்நாம் போரைப் பற்றிய பலவகையான உணர்வு - 18
★ முத்திரையிடப்பட்ட உறவுகள் - 20
★ நேர்காணல் கவிஞர் சோ. பத்மநாதன் - 26
★ தென் இந்திய சினிமா..... - 30
★ எல்லை கடந்த நேயம் - பிலிப்போ ஜிகாந்தி - 41
★ புலிகள் தடைச்சட்டம் - 43


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எரிமலை

கலை, பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம் ஆண்டு
பெப்ரவரி 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

www.tamilarangam.net

# பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில்....

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது தமிழ் மக்கள் எவ்வளவோ நம்பிக்கை வைத்தார்கள். அந்த நம்பிக்கை தற்போது தளர்ந்து வருகிறது. அவர் முற்போக்கான எண்ணப்பாங்குடையவர் என்ற கருத்து பிழைத்து வருகிறது. இறுதியில் பார்த்தால், சிறீலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறைகள் வேறுபடுகின்றனவே தவிர அடிப்படை ஒன்றுதான் என்று படுகிறது. பேச்சுவார்த்தையில் வெற்று வாக்குறுதிகளும் வளவள பேச்சுக்களுமே அதிகமாக இருக்கின்றன. தடைவிதிக்கப்பட்டிருந்த பெரும்பாலான பொருள்களின் தடையை நீக்கியமையே அரசாங்கம் செய்த உருப்படியான காரியம் என்று கூறலாம்.

பாதை திறப்பு விடயத்தில் அரசாங்கம் தக்க தருணத்தில் தமிழ் மக்களின் காலை வாரிவிட்டது. சங்குப்பிட்டிப் பாதையின் குறுக்கே வழிமறித்து நிற்கும் பூநகரி இராணுவ முகாமை அகற்ற மறுத்துவிட்டது. அரசாங்கத்தின் குடாநாட்டின் மீதான இராணுவச் சுற்றிவளைப்பும், பாரிய தாக்குதலும் என்ற திட்டத்தின் இருப்பை அது வெளிப்படுத்துகிறது. பாப்பாண்டவர் இலங்கை வரும்போது, கணிசமான கிறிஸ்தவ தமிழர்களை கொழும்புக்கு வரவிடாது தடுப்பதன் மூலம், தமிழர்களிடையே மத அடிப்படையில் கசப்பை ஏற்படுத்தும் பிரித்தாளும் தந்திரமும் இதில் அடங்குகிறது.

தீர்வுத் திட்டம் என்று அரசாங்கம் முன்வைக்க அவசரப்படும் திட்டம் அம்மையாரின் சுயரூபத்தை இன்னும் அம்பலப்படுத்துகிறது. 1957ல் கொண்டுவரப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் வரலாற்றின் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடு. புதிய அரசொன்றை அமைக்கப் போராடும் மக்களுக்குப் போடும் பிச்சை. அதனை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டது ஏற்புடைய செயலே.

பாப்பாண்டவருக்கு எதிரான சிங்கள பௌத்த இனவாத வெளிப்பாடுகளும், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களும் இடம்பெற்று வருகின்றனவாயினும், விடுதலைப் புலிகளின் வீரமிகு போராட்டத்தின் விளைவாக அவை அடக்கி வாசிக்கப்படுகின்றன என்பதே உண்மை. எப்போது விடுதலைப் புலிகள் அடக்கப்படுகிறார்களோ, அப்போது, சிங்கள அரசு முதற்கொண்டு அனைத்து இனவாத சக்திகளும், இன, மதச் சிறுபான்மைகளுக்கு எதிராகப் போராடத் தொடங்கிவிடும். ஏனோ, இன்னும், சிறுபான்மைச் சமூகங்களுக்குள்ளே உள்ள ஒரு சிலர், படித்தவர்கள்கூட இவற்றை உணரத் தவறிவிடுகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# “எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்”

**தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு விரோதமான முறையில் எதிரியோடு இணைந்து செயற்படும் இனத்துரோகிகள் மீது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்.**

“நாம் எமது விடுதலைப் பயணத்தை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. விபரிக்கமுடியாத துன்பங்களும் வியக்கத்தக்க தியாகங்களும் நிறைந்த ஒரு மகத்தான வீரகாவியமாக எமது விடுதலை வரலாறு நீண்டு செல்கிறது. இரத்தத்தால் எழுதப்படும் எமது இனத்தின் விடுதலை வரலாறு மனித குலத்தின் விடுதலை எழுச்சிக்கு ஒரு உன்னத எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

உலகில் எங்குமே நிகழாத கொடுமைகள் எம்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டன. மனித நாகரீகமே வெட்கித் தலைகுனியுமளவிற்கு எதிரி எம்மீது மிருகத்தனமாக நடந்துகொண்டான். எமது பழைய தலைமையின் துரோகத்தனம் காரணமாக, நம்பி, நம்பி ஏமாந்த வெகுளித்தனம் காரணமாக, நாம் என்றுமில்லாதபடி பாரிய அழிவுகளை சந்திக்க வேண்டியிருந்தது. தமிழின ஒழிப்பையே இலட்சியமாகக்கொண்டு செயல்படும் ஈவிரக்கமற்ற எதிரியுடன் கொஞ்சிக்குலாவி, சலுகைகள் கேட்டு, சமரச ஒப்பந்தங்கள் செய்து, சப்பாணிப் போராட்டம் நடத்தி, தமிழினத்தையே பெரிய அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற பெருமை எமது காந்தியவாத தலைவர்களையே சாரும்.

குட்டக் குட்டத் தலைகுனிந்து, அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழனை தலைநிமிர்த்தி, தன்மானத்துடன் வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும். உண்மையில் எமது வீரசுதந்திரப் போராட்டம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தோற்றத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. கடந்த பத்து ஆண்டுகால ஆயுதப் போராட்ட வரலாற்றில் எமது இயக்கம் ஒப்பற்ற சாதனைகளை நிலைநாட்டியது. எத்தனையோ இடையூறுகள் மத்தியில், எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில், எத்தனையோ சோதனைகள் மத்தியில், சலிப்படையாது, நம்பிக்கை தளராது, இரும்பை ஒத்த உறுதியுடன் தொடர்ச்சியான, தீர்க்கமாக ஆயுதப்புரட்சிப் போராட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்கவிதிகளில் நெறிப்படுத்தப்பட்டு, அஞ்சாநெஞ்சம் படைத்த இலட்சிய வீரர்களை உருவாக்கிய எமது விடுதலை இயக்கம் இன்று முழு உலகமுமே வியக்கத்தக்க முறையில் சிங்கள அரச பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு முண்டு கொடுத்துவரும் சர்வதேச நாசகார சக்திகளையும் தனித்து நின்று சமர்புரிந்து விரட்டியடித்து வருகிறது. விடுதலைப் புலிகளின் வியப்பூட்டும் இராணுவ சாதனைகள் காரணமாகவே இன்று எமது விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் மிகப்பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. சமாதானப் பேச்சு என்றும், சமரசத் திட்டம் என்றும், போர்நிறுத்தம் என்றும் சிங்கள அரசு இன்று வெள்ளைக்கொடி காட்டுவதும் எமது போராட்ட சாதனைகளின் விளைவாகத்தான். இந்தப் பத்தாண்டு கால விடுதலை யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் நெஞ்சத்தைப் பிளக்கும் தியாகங்களைப் புரிந்தனர். மக்களின் விடுதலை என்ற ஒரே நோக்கத்திற்காக, மக்களை இன அழிவிலிருந்து காப்பாற்றவேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக இளம் புலிவீரர்கள் களத்தில் தமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உயிரை அர்ப்பணம் செய்துவருகின்றனர்.

இன்று வடக்கில் பல பகுதிகள் விடுதலைப் பிரதேசங்களாக எமது கட்டுப்பாட்டில் எமது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தமிழ் மக்களை நரவேட்டை ஆடிவந்த சிங்கள இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கின்றது. மக்களின் ஒரே பாதுகாப்பு அரணாக இன்று எமது இயக்கம் தமிழீழம் எங்கும் தன்னை நிலைப்படுத்தி பலப்படுத்தி வருகின்றது.


தமிழீழத் தனியரசு என்ற எமது இலட்சிய நட்சத்திரம் அடிவானத்தில் பிரகாசிக்கத் தொடங்கியிருக்கிறது. நீண்ட, கடினமான விடுதலைப் பயணத்தின் பயனாக நாம் சுதந்திர மலையின் சிகரத்தினை அண்மித்துக்கொண்டிருக்கிறோம். எமது விடுதலை வரலாற்றின் இந்த முக்கியமான காலகட்டத்தில், எமது வெற்றிகளை நாம் நிலைப்படுத்தி விடிவை நோக்கி விரைந்து செல்லவேண்டிய இந்த நேரத்தில், எமது போராட்டத்தை முறியடிக்கவும், எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடவும், எமது எதிரி ஒருபுறமும், மற்றும் தீய சக்திகள் மறுபுறமுமாக சூழ்ச்சிகர நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. எண்ணற்ற தியாகங்கள் புரிந்து, எத்தனையோ உயிர்ப்பலிகள் கொடுத்து, இத்தனை ஆண்டுகளாக கண்ணீரும் வியர்வையுமாக நாம் கட்டி எழுப்பிய எமது வீர சுதந்திரப் போராட்டம் இந்த சதிகார சக்திகளினால் இன்று ஒரு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாம் விழிப்புடன் செயற்படத் தவறினால், இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிரிழப்புகள், பொருளிழப்புகள், எல்லாமே அர்த்தமற்றவையாய் போய்விடுவதுடன் நாம் மீண்டும் அடிமை வாழ்வில் தள்ளப்பட நேரிடும்.

★★★

www.tamilarangam.net

# தலை தெறித்த மனிதர்கள்

கருணாகரன்



என்ன நிகழந்தது?
யாரின் கைகால்களை
எந்தத் தேவதை வருடியது?
வேர்கள் பற்றி எந்தக் கவலையுமின்றி
மரங்கள் பறந்தன வானத்தில்.

இலைகளா வேர் பிடித்துக் கிடப்பது?

புராணங்களையும் இதிகாசங்களையும்
கழுகுகள், காகங்கள், நரிகள் பற்றிய கதைகளையும்
மறந்துபோன மனிதர்கள்
புன்னகை பூத்துத் திரிந்தார்கள்.
தோண்டிய கண்கள்
தானமாக வழங்கப்படுமாம்
பிடுங்கிய பற்கள்
திருப்பித் தரப்படுமாம்
இனி
தொட்டதெல்லாம் பொன்னாகும் காலமொன்று
நாற்பத்தாறாவதோ ஐம்பத்தாறாவதோ அதிசயமாக
தங்கள் ஊர்களுக்கு வந்து விடப்போகிறதென்று
கனவு கண்டார்கள் அவர்கள்.

கொன்றைமரம் பருவந்தவறியும் பூத்தது
புன்னையோ பூவரசோ எதுவோ எல்லாம் பாடத்தொடங்கின
இன்னும் ஏதோ ஆடின.

புறாவின் வருகைபற்றியும்
அதன் மகிமைபற்றியும்
மரத்தோடு மரம் பேசியது
விஷமேறிய புற்களையிட்டு இனிக்
கவலையில்லையென்று மாடுகளெல்லாம் கத்தித்திரிந்தன

மாரியா கோடையா என்றறியாக்காலத்தில்
விதைப்புப்பற்றியும் அறுப்புப் பற்றியும்
குழம்பிக் குழம்பி
தலைதெறித்துக் கிடந்தார்கள்
என் மனிதர்கள்.

நெருப்பைத் தின்னும் காலமென்ன
தீர்ந்தா போச்சுதென்று
மனம்பெருத்த மனிதன் கேட்டான்
உண்மைதான்.

சிங்கமென்ன வாளைக் கீழேயா போட்டுவிட்டது.?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தந்தையின் கையில் சிலுவைச் சீவுளி



**தந்தை இனவெறியின் பெயரால், “24 மணித்தியாலத்திற்குள் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றுவேன்” என்ற கோசத்துடன் பதவிக்கு வந்தார். மகள் இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக உறுதியளித்துப் பதவிக்கு வந்துள்ளார். தந்தையும் மகளும் இங்கு நேர் எதிர் முரணான இடங்களில் நிற்பதாகத் தோன்றுகின்றது.**



President Chandrika Kumaratunga

ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் சார்பான காவல் துறையும், இராணுவமுமே திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தபோது இருந்தன.

தொடர்ந்து 17 ஆண்டுகள் பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினால் வளர்த்தெடுக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி சார்பு காவல்துறையும் இராணுவமுமே தற்போது திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணத்துங்கா பிரதமராக பதவி ஏற்றுள்ள போதும் இருக்கின்றன. தந்தைக்கும் மகளிற்கும் இடையில் இப்படி ஓர் ஒற்றுமைக்கான சூழல்.

பண்டாரநாயக்கா பதவிக்கு வந்தபோது காவல்துறையும், இராணுவமும் மற்றும் நிர்வாக அதிகாரிகளும் பண்டாரநாயக்காவிற்குப் பணிய பெருமளவு மறுத்தனர். இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விசுவாசமாகவே செயற்பட்டனர். இதனால் பண்டாரநாயக்கா பெரும் குழப்பத்திற்கு உள்ளானார். 1947 ஆம் ஆண்டு தொடக்கம் 1956ஆம் ஆண்டு வரையான பத்து ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசப் படைப்பைவிடவும், 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி விசுவாசப் படையின் பருமன் பெரியது. எனவே பண்டாரநாயக்கா எதிர்நோக்கியதை விடவும் இதில் சந்திரிகா எதிர்நோக்க வேண்டிய நெருக்கடியின் அளவும் பெரிதாகும்.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பு ஆயுதப்படையினை எதிர்கொள்வதற்காக பண்டாரநாயக்கா ஓர் உபாயத்தை வகுத்தார். தமிழரால் ஏற்படக்கூடிய ஆபத்தினை எதிர்கொள்வதற்கு ஒரு இலட்சம் தொண்டர் படையை உருவாக்கி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது என்பதே அத்திட்டம். இத்திட்டத்தின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்ட ஜே. ஆர். இதற்கு முற்றிலும் எதிராகக் குரல் எழுப்பினார். தொண்டர் படை என்பதன் பெயரில் சுதந்திரக் கட்சிக்கான ஒரு படையை உருவாக்குவதே இதன் நோக்கமென அவர் அதனைக் கண்டித்து எதிர்த்தார். அன்று காவல்துறையும், இராணுவத்தில் ஐக்கியதேசியக்கட்சிக்கு இருந்த செல்வாக்கின் நிமித்தம் இதனை பண்டாரநாயக்காவால் செயற்படுத்த முடியாது போனது.

இவ்வாறு பண்டாரநாயக்காவின் திட்டம் குழம்பிய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் காவல் துறையும் இராணுவப் பின்னணியில் மிகவும் பலவீனமான ஒரு பிரதமராகவே அவரால் இருக்க முடிந்தது.

புதிதாகப் பெருந்தொகையில் இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதன் மூலம் ஏற்கனவே இருந்த இராணுவத்தினை சிறுபான்மையாக்க தந்தை திட்டமிட்டார். ஆனால் தமிழின எதிர்ப்பின்

# பிள்ளையின் தோளில் சிலுவைப் பாரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெயரால் நாட்டின் சக்திக்கு மீறி வளர்க்கப்பட்டுள்ள பெரியளவிலான இராணுவத்தைக் கையாளப் புதிதாக இராணுவத்திற்கு ஆள் சேர்த்தல் இயலாது என்பதே மகளின் நிலை. இங்கு தந்தையைப் போலவே மகளும் ஐக்கிய தேசியக் கட்சி இராணுவத்தைப் பலவீனப்படுத்தவேண்டிய அவசியம் உண்டாயினும் தந்தைக்கும், மகளிற்கும் ஒரேவகைத் தந்திரம் பொருந்தமுடியாது.

தமிழின எதிர்ப்பின் பெயரால் தனக்கென ஓர் இராணுவத்தைக் கட்டி எழுப்ப பண்டாரநாயக்கா முயன்றார். ஆனால் அது முடியவில்லை; ஆனால் தமிழின எதிர்ப்பின் பெயரால் பெரும் எண்ணிக்கையில் ஓர் இராணுவத்தினை ஜே. ஆர். ஆல் கட்டி எழுப்ப முடிந்தது. இனப் பிரச்சினையின் பெயராலேயே இராணுவம் வளர்ந்தது. எனவே இராணுவத்தினைப் பலப்படுத்த ஒரே ஒரு வழிதான் சந்திரிகாவிற்கு உண்டு. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம்தான் இராணுவத்தை அரசியலில் இருந்து பின்தள்ளலாம். அவ்வாறு இன்றித் தனக்கு எதிரான இராணுவத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துவது என்பது அக்கினியில் நடப்பது போன்றதாகும்.

தந்தை இனவெறியின் பெயரால், "24 மணித்தியாலத்திற்குள் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றுவேன்" என்ற கோசத்துடன் பதவிக்கு வந்தார். மகள் இனப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக உறுதியளித்துப் பதவிக்கு வந்துள்ளார். தந்தையும் மகளும் இங்கு நேர் எதிர் முரணான இடங்களில் நிற்பதாகத் தோன்றுகின்றது. உண்மையில் இவை ஒன்றிற்குப் புறம்பான மற்றொன்றல்ல. ஒன்றில் இருந்தே கருக்கொண்ட தர்க்கத்தின் வளர்ச்சியே மற்றையது. தன்னைத் தோற்றுவித்த சக்தியையும் மீறித் தர்க்கம் வளரும் தர்க்கத்திற்கு அப்படி ஒரு பலம் உண்டு. இதனைத்தான் கார்ல் மார்க்ஸின் கூரிய கண்கள் வரலாற்று விதியென அடையாளம் கண்டது. மக்களை நேசிக்கும் வரலாற்று மடியில் மார்க்ஸ் தனது கூரிய கண்களை தானமாக வழங்கிவிட்டுச் சென்றுள்ளார்.

அந்தக் கண்களின் உதவியால் கலாநிதி என். எம். பெரேரோ 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்காவைப் பார்த்து, உனது இன்றைய நடவடிக்கைகள் இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளின் பின்பு தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்தவைக்கும், நாடு இரத்தத்தில் மிதக்கும் என்ற பொருளில் கூறினார். கலாநிதி என். எம். பெரேரா தீர்க்கதரிசிதான்; சந்தேகமில்லை. ஆனால் பின்பு அபிலாசை எனும் சிவப்புத் துணியால் தனது கண்களை அவர் இறுகக் கட்டிக் கொண்டார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், பண்டாரநாயக்காவும் சேர்ந்து தமிழ் மக்களின் இரத்தத்திற் தோய்ந்தெழுந்து பெரும் பாவச் சிலுவையைக் கட்டி முடித்தனர். பின்வந்தோர் அந்தச் சிலுவைக்கு தமிழ் மக்களின் இரத்தத்தால் வர்ணம் பூசினர். ஆனால் இவர்கள் கட்டி, வர்ணம் பூசிய சிலுவையை இன்று சுமக்க முடியாமல் அவர்களின் அடுத்த தலைமுறையினர் சுமந்து செல்கின்றனர். சிலுவை கட்டி எழுப்பிய முக்கிய பொறியியலாளர்களுள் ஒருவரான ஜே. ஆரும் அதற்கு வர்ணம் பூசிய சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தமது பச்சைக் கண்களால் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அவர்களின் அடுத்த தலைமுறையினர் அந்தப் பாவச் சிலுவையைச் சுமக்க முடியாமற் சுமந்து செல்கின்றனர். இவை ஒன்றுடன் மற்றொன்று சம்பந்தமற்ற இரு வேறு கூறுகளல்ல. ஒன்றின் தவிர்க்க முடியாத வளர்ச்சியே மற்றையது. இதற்குத்தான் வரலாறு என்று பெயர். தந்தை இராணுவத்தை வளர்க்க விரும்பினார். மகள் இராணுவத்தைக் குறைக்க விரும்புகிறார். தந்தையர்கள் சிலுவையைக் கட்டினார்கள். பிள்ளைகள் சிலுவையைச் சுமக்கிறார்கள். தந்தையர்களையும் பிள்ளைகளையும் ஒரே நேர்கோட்டில் வரலாறு நிறுத்தியுள்ளது.

## மெல்ல உற்றுக்கேள்



அந்திசாய அழகுகாட்டும்
அடிவானம் இப்போது
இல்லை.
புகைவாங்கிப் போய்
மேகங்கள் உருக்குலைந்து
கலைகின்றன.
இளவேனிற்காலம் தென்றல்
மோத
புதிய பூக்கள் மலர்வதில்லை.
அமைதி உறையும்
தெருக்களும்
அலைகளடங்காத கடலும்
இன்னும் இங்கே
இதயம் பிழிந்த சோகத்தோடு
அநாதையாய்
உறவுகளின் வருகைக்காய்த்
தவிக்கின்றன.
நேற்றைய நாளில்
பொழிந்த பால்நிலவு
இன்னும் மாறாது பூத்தது.
ஆனால் அனுபவிக்க
மனிதர்கள் இல்லை.
தலைக்கறுப்பே காணாத
மரணப்படுக்கை.
அதில் ஆவேசங்
கொண்டவனாய்
இடைவரும் பச்சைப்பேய்கள்.
கோரத்தாண்டவத்தில்
ஊழி நடனத்தில்
உருமாறிப்போன என்தேசம்
உன்னிடம் எதையோ
யாசிக்கின்றது.
மெல்ல உற்றுக்கேள்
அதன் உயிர்ச்சுருளின்
உணர்வுகளை


- சுதாமதி -

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பேரினவாதியின் அவலச்சாவு!



ஜே.ஆரின் பேரினவாதப் பட்டறையில் உருவாக்கப்பட்ட, ஒரு தமிழின விரோத அரசியற் தலைவர்தான் திரு. காமினி திசாநாயக்கா. இந்தக் கருத்து, தமிழினத்தின் நோக்கு நிலையிலிருந்து மட்டும் சொல்லப்பட்ட பக்கசார்பானதொரு கருத்து என்று, எவரும் கூறமுடியாது. சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா அம்மையாரும் வெளிப்படையாக- பெயர் சுட்டிக்காட்டி கூறியுள்ளார். "ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா, காமினி திசநாயக்கா ஆகியோரது தலைமையே இனப்போரை இங்கு தோற்றுவித்தது." இது, ரூபவாகினி மூலம் (30.10.1994) அவர் தெரிவித்த கருத்து: அதுவும் காமினி திசநாயக்காவின் உடல் தகனம் செய்யப்பட்ட மறுநாளே, இந்தக் கருத்தை உலகின் செவிக்குக் கொடுத்து விட்டார்.

கொழும்பு- கிரான்ட்பாசில் நடந்த பிரசாரக்கூட்டத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பொன்றில் காமினி திசநாயக்கா கொல்லப்பட்டார் என்பது, எல்லோரும் அறிந்த செய்தி.

அவர் கொலையுண்டதும், "அதற்குக் காரணம் புலிகள் இயக்கமே" என்று ஐ. தே. கட்சியினர் கூக்குரலிட்டனர்.

தமிழின அழிப்பில் பங்கு கொண்டவர்கள் எங்கென்றாலும் கொல்லப்படும்போது - எந்தவித சாட்சிகளுமில்லாமலேயே- புலிகள் இயக்கத்தை நோக்கிச் சுட்டுவிரல் நீட்டும் ஒரு மரபு உருவாகி விட்டது. இந்த மரபின் வரலாற்றுத் தோற்றம் பற்றி இங்கு நாம் ஆராய முனையவில்லை. காமினி திசநாயக்காவின் அவலச் சாவின்போதும் அந்த மரபுக் கண்ணாடியூடாகவே அதற்கான காரணத்தை அறிய உலகம் முயல்கின்றது.

ஏன் காமினி கொல்லப்பட்டார்? அதற்கான காரணிகள் எவை, என்ற கேள்விகளுக்கு, பி.பி.சியிலிருந்து சிங்களப் பத்திரிகைகள் அனைத்துமே பதில்காண முனைந்துள்ளன. அந்த மதிப்பீடுகளில் எதுவுமே காமினியை ஒரு அப்பாவியாக, அரசியல்வாதியாக அல்லது ஒரு கனவானாக அல்லது ஈழத் தமிழினத்தின் நட்புச் சக்தியாகக் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நூல்நிலையத்தை எரித்து, தமிழினத்திற்கெதிராக ஒரு திட்டமிட்ட பண்பாட்டுப் படுகொலையாகக் காமினி நேரடியாக நடத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டு ஒன்று உள்ளது; எனவே, அவரை ஒரு இராணுவ இலக்காக புலிகள் கருதியிருக்கக்கூடும் என்ற ஒரு கருத்தை, அவை தெரிவிக்கின்றன.

அதேவேளை, 1983 யூலை தமிழினப் படுகொலை நிகழ்ந்தபோது, காமினி திசாநாயக்காவை ஏற்றியபடி பறந்த உலங்கு வானூர்தி ஒன்று நுவரெலியாவில் தரையிறங்கிய சில நிமிடங்களில், அதுவரை மயான அமைதியுடன் இருந்த மலையகம் கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. அந்த மலைத்தீயில் தமிழர்கள் வெந்து மடிந்ததும் புலிகள் இயக்கத்திற்குத் தெரிந்திருக்கும்; அதனால் புலிகளின் இராணுவ இலக்காக காமினி இருந்திருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை கூறியுள்ளன.

அத்துடன், 'மகாவலி அபிவிருத்தித் திட்டம்' என்பதன்கீழ் கிழக்கு மாகாணத்தைத் தமிழர்களது நிலங்களை அபகரித்து - அவர்களை அகதிகளாக விரட்டிவிட்டு - அங்கே சிங்களவர்களைக் குடியமர்த்தி, தமிழினத்திற்கெதிரான தாயக கபளீகரத்திற்கும் காமினி நேரடியாகத் தலைமை தாங்கியிருந்தார். அது காரணமாக புலிகளின் இராணுவ இலக்காக அவர் இருந்திருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை முன்வைத்துள்ளன.

அதுமட்டுமல்ல; தமிழரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் போரை ஒடுக்குவதற்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்றொரு அரசியல் நகர்வைச், அதன் வாயிலாக இந்தியப் படைகளைத் தமிழர் தாயகத்திற்கு அனுப்பி, அதன் விளைவாக 8000 இற்கும் மேற்பட்ட தமிழர்களது படுகொலைகள்- மற்றும் பாலியல் வன்முறை, சொத்தழிப்பு உட்பட ஒரு இன அழிப்பில் ஜே.ஆருடன் கைகோத்து காமினி செயற்பட்டிருந்தார்; அதனால், அழிக்கப்பட வேண்டிய ஒரு இராணுவ இலக்காக அவரைப் புலிகள் கருதியிருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை எழுதியுள்ளன.

அத்துடன் நின்றுவிடாது, அடுத்த ஜனாதிபதியாக காமினி திசநாயக்கா வந்தால், மீண்டும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் புதுப்பித்து, மீண்டும் மீண்டும் இந்தியப் படைகளை அழைத்துத் தமிழர்களை அழிக்க முயன்று விடுவார் என்ற ஐயமும் புலிகளுக்கு எழுந்திருக்கலாம்; அதனால் காமினியை அழித்து, தமிழினத்திற்கு வரவிருந்த பேரழிவைத் தடுத்து நிறுத்தி ஒரு முற்காப்பு நடவடிக்கை எடுக்க புலிகள் தீர்மானித்திருக்கலாம் என்றும் அவை கூறுகின்றன.

அதேவேளை. ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளின் போது காமினி திசாநாயக்கா கக்கிய பச்சை இனவாதப் பேச்சுக்களையும் புலிகள் செவிமடுத்திருப்பார்கள் என்றும், அந்தச் செய்திகள் கூறியுள்ளன. சமாதானப் பேச்சுக்களைக் குழப்ப முனையும் அவரது இனவாதப் பேச்சுக்களும், "நான் ஜனாதிபதியானால் வடக்குக் கிழக்குக் கரையோரங்களில் சிங்கள மீனவர்களைக் குடியமர்த்தி- அவர்களுக்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுத்து மீன்பிடித் தொழிலை நடாத்துவேன்" என்ற அவரது அபாயகரமான வாக்குறுதிகளும், காமினியை ஒரு இராணுவப் பூதமாக புலிகளுக்குக் காட்டியிருக்கக்கூடும் என்றும், சில ஊகங்கள் கூறப்பட்டிருந்தன.

இத்தகைய கருத்துக்கள் மற்றும் ஊகங்கள் ஈழத் தமிழினத்திற்கு - தமிழீழத் தேசியத்திற்கு விரோதமானவை என்பது வெளிப்படை. எனவே, ஈழத் தமிழினத்தின் முன்னணிப்படையான - தமிழிழத் தேசியத்தின் கவசமான - புலிகள் இயக்கம், தற்காப்பு நடவடிக்கையாக அல்லது ஒரு தண்டனையாக அந்தக் குண்டுவெடிப்பைச் செய்து காமினியை அழித்திருக்கலாம் என்றே, அந்த மதிப்பீடுகள் கூறி வருகின்றன.

ஜெயவர்த்தனாவின் பேரினவாதப் பட்டறையில் உருவாக்கப்பட்ட பிரேமதாசா, அத்துலத் முதலி போன்ற தமிழின விரோதச் சிங்களத் தலைவர்களில் ஒருவர் தான் காமினி திசநாயக்கா.

தமிழின அழிப்பில் பங்கேற்றவர்கள் எங்கென்றாலும் கொல்லப்படும்போது, உடனடியாகப் புலிகள் இயக்கத்தை நோக்கி சுட்டுவிரல் நீட்டும் ஒரு மரபு உருவாகிவிட்டது. அந்தமரபுக் கண்ணாடியூடாகவே காமினியின் மரணத்திற்கான காரணத்தையும் அறிய உலகம் முனைகிறது.




# 'இன்னொரு சுதந்திரம்!'

இதுவரை காலமும்
நாங்கள் குனிந்தோம்!
எங்களின் விடியலை
நாங்கள் இழந்தோம்!

சிங்களம் எங்களைச்
சிறுஇனம் என்றது!
உரிமைகள் வேண்டாம்
அடிமைகள் என்றது!

சிறையினில் வைத்துமே
சிரமதை அறுத்தது!
சிந்திய இரத்தத்தில்
சிங்களம் குளித்தது!

நித்தமும் எங்களைக்
கொன்றுமே குவித்தது!
நிரையினில் விட்டெமை
வதைபல செய்தது!

எங்களின் மண்ணிதை
நாங்கள் ஆழுவோம்!
இன்னொரு சுதந்திரம்
நாங்கள் காணுவோம்!

கடல்பல கடந்து
களம்பல வென்றோம்!
தடைபல கடந்து
தமிழ்மண் காப்போம்!

★★★

- துறையூரான்
யாழ்ப்பாணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓர்மம் உணர்த்திய தாக்குதல்!

## காடு!

அதில் யானை!

காட்டு மிருகங்களில் மிகப் பெரியது யானை! அது உயரத்தில் 8 அடியிலிருந்து 11 அடிவரை இருக்கும். அதன் உடல் 3 1/2 தொன்னிலிருந்து 6 தொன் பாரம். (1 தொன் = 2240 இறாத்தல்)

இரண்டு நீண்ட கூரிய கொம்புகள், அதாவது தந்தங்கள்!

யானை காட்டு மரங்களின் கொப்புக்களையெல்லாம் வளைத்து முறித்து தனது உணவாக்கிவிடும்!

காட்டில் எத்தனையோ வகையான மிருகங்கள் இருக்கும். அவற்றுள் மிகப்பெரியது யானைதான்!

ஆனால், இந்தப் பருத்த, பலம் கொண்ட யானையானது வெருண்டு பயம்கொண்டு நிற்கின்ற நிலையை, திருக்குறளின் ஒரு வரியில் வள்ளுவப் பெருந்தகையார் காட்டி நகையாடுகிறார்.

யானை ஏன் வெருண்டு தனது பலத்தையெல்லாம்இழந்து தளர்ந்தது?

புலி!

புலிக்குரிய ஓர்மம்! அதன் விரைந்து வரும் தாக்குதல்!

பாவம், யானைக்கு பாய்ச்சல் என்ற தாக்குதல் முறை வரவே வராது! அது வெருண்டு விடுகிறது! அல்லது பயம் - யானையின் பலத்தையெல்லாம் களவாடி விடுகிறது!

புலியின் ஓர்மம் இதற்கு எதிர்மாறானது! இந்த வீர உணர்வு அதன் பலத்தை ஆயிரம் மடங்கு கூட்டுகிறது. அதன் கூரிய பற்கள், கிழிக்கும் நகங்கள், அவ்வேளை சாதாரணமானவை அல்ல!

எனவே, உடலால் பருத்தும், இரு கூரிய கொம்புகளை உடையதுமான யானை, புலியின் தாக்குதலினால் வெருண்டுவிடும் காட்சியை, குறள் 599இல் காண்கின்றோம்.

**'பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலிதாக்குறின்.'**

உருவத்தால் பெரியது; கூரிய இரு கொம்புகளை, தந்தங்களை



உடையது; என்னும் யானை வெருண்டுவிடுகிறது, புலி தாக்கும் போது என்பது அக்குறள்.

இந்தக் குறளின் நினைவு, இந்த 21.09.1994 ஆம் திகதி நாளிதழைப் படித்தபோது நெஞ்சத்தில் எழுந்தது.

'சாகரவர்த்தனா' - சிங்கள அரசின் சாதாரணக் கப்பல் அல்ல; அது ஒரு போர்க்கப்பல். இதன் நீளம் 130 அடி. நிறை 330 தொன். அது ஏனைய இயந்திரத் துப்பாக்கிகளுடன் இரண்டு இரட்டைப் பீரங்கிகளையும் கொண்டது.

சிலாவத்துறைக் கடற்பரப்பில் வைத்தே இப்போர்க்கப்பல், இந்த செப்ரெம்பர் 19ம் திகதி, கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. நள்ளிரவு 11.25 இற்குத் தொடங்கிய தாக்குதல் - ஒரு மணி நேரத்தில் 12.30 இற்கு, இக்கப்பல் முற்றாக மூழ்கடிக்கப்பட்டதுடன் முடிந்தது!

குறைந்தது நான்கு அதிகாரிகள் உட்பட 25 கடற்படையினர் கொல்லப்பட்டனர்; கப்பல் தளபதி கடற்புலிகளால் கைதுசெய்யப் பட்டார்!

இத்தாக்குதலின் போது கடற் கரும்புலி லெப். கேணல் நளாயினி, கடற் கரும்புலி மேஜர் மங்கை, கடற் கரும்புலி கப்டன் லக்ஷ்மன், கடற் கரும்புலி வாமன் ஆகியோர் வீரச்சாவை வரவேற்றுக்கொண்டனர்.

சில நாட்களுக்கு முன்னர்தான், கட்டளைக் கப்பலைத் தகர்த்த கடற் கரும்புலி அங்கற்கண்ணியின் அஞ்சலிக் கூட்டத்தில், கடற்புலி மகளிர் படைப்பிரிவின் விசேட தளபதி என்ற வகையில், கடற் கரும்புலி லெப். கேணல் நளாயினி கலந்து உரையாற்றினாள்.

இவர்களே வள்ளுவர் காட்டும் புலிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும் தடைநீக்கியாகச் செயற்பட்ட தலைவனும்

**1972 - 1973 - 1974**

ஆயுதப் போராட்டம் கருவிலிருந்த காலம்.

தனியாகவும் சிறுகுழுவாகம் ஆயுதப் போராளிகள் உருவாகிக் கொண்டிருந்த நேரம்.

துப்பாக்கி, வெடிகுண்டு, புரட்சி என்பவற்றில் அனுபவமே இல்லாத ஒருபூச்சிய நிலை.

ஆயினும் அரச வன்முறையை, எதிர் வன்முறையாலேயே எதிர் கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன், இளைஞர்கள் சிலர் வீதிக்கு வரத்தொடங்கிய காலம்.

சிங்கள இனவாத அரச அடக்கு முறைக்கு முண்டுகொடுக்கும் தூண்களை, ஆயுதங்கொண்டு அப்புறப் படுத்த அவர்கள் விரும்பினர்.

அன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரிய தடையாக கோடரிக் காம்பாக - துரையப்பா விளங்கினார். சிங்கள அரசின் முகவரான இவர், யாழ் நகர மேயராகப் பதவி வகித்தபடி தமிழினத்தைக் காட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தார்.

எனவே துரையப்பாவை அழித்து, ஆயுதப் போராட்டப் பாதையைத் திறந்து வைக்க அவர்கள் விரும்பினர். இந்தப் பணியை நிறைவேற்றப் பலர், பல தடவைகள் முயன்றனர்; வெற்றி கிடைக்கவில்லை. அதேவேளை தமிழின விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்ட துரையப்பா போராட்டத்தின் பிரதான தடைக்கல்லாகவே மாறி விட்டார்.

இந்தத் தடைக்கல் அகற்றப்படா விட்டால், ஆயுதப் போராட்டப் பாதை திறக்கவே முடியாது என்ற நிலை உருவாகி விட்டது.

பலர் முயன்றனர்.

சிலர் திட்டங்களுடன் நின்று விட்டனர்.

சிலர் இலக்குவரை சென்று இயலாமையால் திட்டங்களைக் கைவிட்டனர்.

ஆனால், சிவகுமாரன் பல தடவைகள் முயற்சி செய்தார்.

கைக்குண்டு வீசி, துப்பாக்கியால் சுட்டு, காருக்குக் குண்டு வைத்து பலவாறு முயன்றார்.

இராணுவ அனுபவமின்மை, அதனால் பதற்றம், அது காரணமாக சகபாடிகளிடமிருந்து ஒத்துழைப்பின்மை, முறையான வழி நடத்தலின்மை என்பன தோல்விகளைக் கொடுத்தன.

இந்தத் தடைக்கல்லை எப்படியாவது அகற்றிவிட வேண்டுமென்று தலைவர் முடிவெடுத்தார்.

அது 1975ஆம் ஆண்டு.

அப்போது தலைவருக்கு வயது 20.

நம்பிக்கையான சிலரைத் தேர்ந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தெடுத்துக்கொண்டு, துணிவை மூலதனமாக்கினார். என்ன நடந்தாலும் இலக்கை அழித்துவிடுவது என்று உறுதி எடுத்தார். தாக்குதலணிக்குத் தலைமை ஏற்றுச் சென்று, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலடியில் வைத்து- தடைக்கல்லை உடைத்து - ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் பாதையைத் திறந்துவைத்தார்.

துரையப்பா அழிக்கப்பட்டது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

துரோகிகள் ஒழிப்புப் படலம் தொடங்கியது.

தமிழரின் ஆயுதப்போர் 'தெத்தித் தெத்தி' நடைபயிலத் தொடங்கியது. துரோகிகள் களையெடுக்கப்படத் தொடங்கியதும் சட்டம் ஒழுங்கைப் பேணல் என்ற போர்வையில், சிங்களக் காவல்துறை, போராட்டத்தைப் பின்னோக்கி இழுக்க முயன்றது.

தகவல் கொடுப்போரும் உளவுத் துறையினரும் பொலிசாரும் போராளிகளின் இலக்குகளாகத் தொடங்கினர். போராட்டப் பயணம் வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

அப்போது இராணுவம் குறுக்கே வந்து நின்றது.

இராணுவம் மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகாண முடியுமா? போராளிகளின் உள்ளத்தில் ஒரு 'மனத்தடை' எழுந்தது. இந்த மனத்தடையை உடைத்தெறியும்படி அன்றைய தாக்குதலணித் தளபதியாக இருந்த லெப். சாள்ஸ் அன்ரனியிடம் தலைவர் பணித்தார்.

லெப். சாள்ஸ் அன்ரனியின் தலைமையில் சென்ற லெப். கேணல் புலேந்தி அம்மானும் கப்டன் ரஞ்சனும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் வைத்து, முன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிலரை அழித்து, அந்தச் சாதனையைப் படைத்தனர்.

போராட்டம் புதியதொரு பரிமாணத்துக்குள் சென்றது.

ஒன்று, இரண்டு என்று உதிரிகளாக இராணுவத்தினர் கொல்லப்பட்டுக்கொண்டிருந்த போக்கிலிருந்து முன்னேறி, பெருந்தொகையில் இராணுவத்தினரை அழித்து, ஆயுதங்களைக் கைப்பற்றி, இப்புதிய பரிமாணத்தை முன்னோக்கி நகர்த்தும்படி தலைவர் ஆணையிட்டார்.

கண்ணிவெடி உபாயத்தைக் கைக்கொண்டு அதைச் சாதிக்கும்படி பணித்தார்.

போராளிகள் முயற்சிகளைத் தொடங்கினர்.

ஆரம்ப முயற்சிகள் சில அரங்கேறாமலே முடிவைச் சந்தித்தன.

உமையாள்புரத்தில் ஒரு கண்ணி புதைக்கப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டது. ஆனால் வெற்றி வரவில்லை.

பொன்னாலைப் பாலத்துக்கு அருகில் கடற்படை வாகனம் மீது ஒரு கண்ணி வெடித் தாக்குதல் முயற்சி நடந்தது. கண்ணஇ வெடித்தும் முயற்சி வெற்றி பெறவில்லை.

இதேபோல மேலும் சில முயற்சிகள் பிசுபிசுத்தன.

புதிய பரிமாணம் ஸ்தம்பித நிலைக்குச் சென்றுவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருநெல்வேலிக் கண்ணிவெடிக்குப் பின்னர் எமது விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு திருப்புமுனைகள் நிகழத் தொடங்கிவிட்டன. இதில் இந்தியத் தலையீட்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்திய அரசின் அழைப்பை ஏற்று தமிழ்நாடு சென்ற தலைவர் அவர்கள், அங்கிருந்தவாறு போராட்டத்தை வழிநடாத்தத் தொடங்கினார்.

இதேவேளை தமிழீழமெங்கும், குறிப்பாக, வட தமிழீழத்தில் நிகழ்த்தப்பட்ட தொடரான கண்ணிவெடித் தாக்குதல்கள், சிங்களப் படைக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தின. அதேவேளை, அரச படைகளுக்கு எதிரான கெரில்லாப் போர்முறையும் உயர்ந்த பரிமாணத்தை நோக்கி வீறுநடை போடத் தொடங்கியது.

அதுவே போராட்டப் பாதையில் ஒரு தடைக்கலாகவும் மாறிவிட்டது.

இந்த நிலையை வளரவிட்டால் போராளிகளின் மனவுறுதி சிதைந்துவிடும்; அது இராணுவத்துக்கு வாய்ப்பாக அமைந்து போராட்டத்தைப் பாதித்துவிடும் என்று உணர்ந்த தலைவர் அவர்கள், கண்ணிவெடித் தாக்குதலொன்றைத் தானே நெறிப்படுத்தி, நேரடியாகக் களத்தில் நின்று வெற்றிகரமாகச் செய்துமுடித்துப் போராட்ட வண்டியை நகர்த்திவிட முடிவெடுத்தார்.

எமது விடுதலைப் போரைச் சர்வதேச மயப்படுத்திவிட்டதும் சிங்கள அரசின் குரூர முகத்தை உலகிற்குப் புலப்படுத்திவிட்டதுமான 1983 யூலை 23 கண்ணிவெடித் தாக்குதலுடன், ஸ்தம்பிதமடைந்து நின்ற போராட்ட வண்டியை - திருநெல்வேலியில் வைத்து தலைவர் விரைந்தோடச் செய்தார்.

விளைவு: இராணுவம் முகாம்களுக்குள்ளேயே முடக்கப்பட்டது.

முடக்கப்பட்ட இராணுவத்தை அதன் முகாம்களுக்குள்ளேயே வைத்துத் தாக்கி அழிக்கும் திட்டங்களுடனும் போராட்டத்திற்கு எதிரான இந்திய அழுத்தங்களிலிருந்து தப்பிக்கவும் தலைவர் மீண்டும் தமிழீழம் வந்தார்.

வந்தவுடனேயே மினிமுகாம்கள் மீதான தாக்குதற் படலத்தை ஆரம்பித்து வைத்தார்.

பதுங்கித் தாக்குதல் என்ற கெரில்லாத் தாக்குதற் போர்முறையின் ஆரம்ப வடிவம், கொமாண்டோ தாக்குதல்களாகவும் அதிரடிகளாகவும் பரிமாணம் கண்டது. சிங்களப் படையணிகள் இராணுவத் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கின. போராட்டம் புதுவேகத்துடன் விரைந்தது.

இந்த உண்மையை உணர்ந்த இலங்கை - இந்திய அரசுகள் எமது போராட்டத்திற்கு எதிராகக் கைகோத்தன.

இந்திய அரசின் அனுசரணையுடன் சிங்களப் படைகள் 'ஒப்பரேசன் லிபரேசனை' நடாத்தி வடமராட்சியை ஆக்கிரமித்தன.

அத்துடன் நிற்கவில்லை.

ஆனையிறவிலிருந்து படை நடாத்தி வந்து அதன் துணையுடன் வலிகாமத்தையும் கைப்பற்ற முயற்சிகள் நடந்தன.

யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கை யிழந்தனர்.

போராட்டவண்டி பெரியதொரு நெருக்கடிக்குள் மாட்டிக் கொண்டது.

எனவே புதிய போர்முறை ஒன்றை அறிமுகப்படுத்தி, சிங்களப் படைத்துறைக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, விடுதலைப் போரை ஒரு புதிய - உயர்ந்த - பரிமாணத்துக்குள் கொண்டு செலத் தலைவர் முடிவெடுத்தார்.

கரும்புலிகள் போர்முறையை வரைந்தார்.

மில்லர் என்ற வீரப்புலியை கரும்புலியாக்கி எதிரியின் கூடாரத்துக்குள் அனுப்பி, ஆக்கிரமிப்புப் புற்றுநோய்க்கு அறுவைச் சிகிச்சை செய்தார்.

சிங்களப் படைகள் திகைத்தன.

மீண்டும் போராட்ட வண்டி நெல்லியடியில் இருந்து முன்னேறத் தொடங்கியது.

ஆனால், இந்திய இலங்கை அரசுகள் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், சூழ்ச்சிகள் வரைந்தன.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற ஒரு சதித்திட்டத்தை தீட்டி, இந்தியத் துருப்புக்களைத் தமிழீழத்திற்குள் கொண்டு வந்தன.

ஒரு வல்லரசுடன் மோதுவதைத் தவிர்க்கவும், அமைதி இழைகள் கொண்டு பின்னப்பட்ட சூழ்ச்சி வலைக்குள் தமிழினம் சிக்கிவிடாது தவிர்க்கவும் அரசியல் சதுரங்கத்தைத் தலைவர் அவதானமாக ஆடினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இந்திய அரசோ அரசியல் விளையாட்டுகளுக்கு அப்பால் நரபலி எடுக்கத் தொடங்கியது. தமிழருக்கு உரிமை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாகத் தமிழீழ தேசியத்தைக் கொன்று விடுவதிலேயே இந்தியா குறியாக இருந்தது.

இந்திய இராணுவ பலத்திற்கு அடிபணிவதன் மூலம், இரத்தம் சிந்தி நாம் வளர்த்தெடுத்த தமிழீழ தேசியத்தை இந்தியா கொலை செய்ய அனுமதிப்பதை விட, எதிர்த்துப் போராடி அதைப் பாதுகாக்க முனைவதே சிறந்தது என, தலைவர் முடிவெடுத்தார்.

இந்திய - புலிகள் போர் தொடங்கியது.

ஒரு மாதத்தில் யாழ். மாவட்டம் வீழ்ச்சியுற்றது. மற்றைய மாவட்டங்களும் இந்தியச் சிப்பாய்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது.

ஆயினும், தமிழீழத்தின் இதயத்துக்குள் புகுந்துகொண்ட தமிழீழத் தேசியக் காவலன், இந்தியச் சிப்பாய்களிடம் சிக்கிவிட்ட போராட்ட வண்டியை மீட்டெடுக்க, ஒரு மீட்புப் போரைத் தொடங்கினார்.

ஆனால், தலைவரைக் கொல்லும் இலக்குடன், தமிழீழத்தின் இதயம் மீதே இந்திய அரசு ஒரு பெரும் படையெடுப்பை நடாத்தியது. வெள்ளம் போல் வரும் இந்தியச் சிப்பாய்களிடமிருந்து உயிரைப் பாதுகாக்க பணிந்து போவதே சிறந்தது என்று, தலைவருக்குப் பலர் ஆலோசனை கூறினர்.

தலைவர் உயிருடன் இருந்தால் தான் போராட்டத்தை நகர்த்த முடியும் என்ற உண்மையை எடுத்துக்கூறி வாதிட்டனர்.

ஆனால், போராட்ட வண்டியை இழந்துவிட்டு தான் உயிர் வாழத் தலைவர் விரும்பவில்லை.

எனவே, போராட்ட வண்டியை மீட்டெடுப்பதற்காக இந்தியப் படையுடன் போராடி, அதன் மூலம் சாவு வந்தால் அதை எதிர்கொள்ளவே தலைவர் விரும்பினார்.

இதேவேளை இந்திய வல்லரசுடன் போரிட்டு வெல்லமுடியுமா என்ற அவநம்பிக்கை மக்களை மட்டுமல்ல, எமது மூத்த உறுப்பினர்கள், தளபதிகள் சாதாரண போராளிகள் என்று பலரையும் ஆட்கொண்டிருந்தது.

இந்த நிலையில், இந்தியப் படையுடன் போராடி எமது விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற மிகவும் துணிச்சலான - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - இந்த முடிவைத் தன்னந் தனியனாகவே நின்று எடுத்த தலைவர் அவர்கள், தீர்மானத்துடன் நின்றுவிடாது, தானே போர்க்களத்தை நேரடியாக வழிநடாத்தத் தொடங்கினார்.

**"இராணுவ சீருடைகளையும் கவச வாகனங்களையும் விமானங்களையும் கண்டு தமிழர் பயந்தோடிய ஒரு காலத்தை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால்.... தமிழனைக் கண்டு இராணுவ சீருடைகளும் கவசவாகனங்களும் விமானங்களும் பயந்தோடும் ஒரு காலத்தை, இப்போது பார்க்கிறேன்.**

**இது பிரபாகரன் உருவாக்கிய காலம்"**

கெரில்லாப் போர்முறையில் புதிய நுட்பங்களை - புதிய புதிய தந்திரோபாயங்களை - புகுத்திய தலைவர் அவர்கள் புலிகள் இயக்கம் சரித்திரம் படைக்க வழிகாட்டினார்.

மணலாற்றுக் காட்டுக்குள் தலைவரின் நேரடி வழிகாட்டலில் புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கிய புலிவீரர்கள், படிப்படியாக தமிழீழமெங்கும் இராணுவ சாதனைகளைப் படைக்கத் தொடங்கினர். இந்தியப் படைகளின் 'செக்மேற்;றை வெற்றி கொண்டதன் மூலம் மீட்கப்பட்ட எமது போராட்ட வண்டி, மணலாற்றுக் காட்டுக்குள்ளிருந்து புத்தூக்கத்துடனும் புதிய வேகத்துடனும் புறப்படத் தொடங்கியது.

தோல்விச் சகதிக்குள் இந்தியப் படை மாட்டிக்கொண்டது.

'இழப்புக்கள்' என்ற தேரேறி தோல்வியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்திய படைகளை மேலும் விரைவாகத் தோற்கடிப்பதற்காக, ஒரு இராஜதந்திர வியூகம் வகுத்த தலைவர் அவர்கள், சிங்கள அரசின் 'ஒத்துழைப்பையும்' பெற்று, அரசியல் - இராணுவ ரீதியில் பெருவெற்றி ஒன்றைத் தமிழனத்துக்குப் பெற்றுக் கொடுத்தார்.

இன்று 'இரண்டாவது ஈழப் போர்' என்ற பகுதியூடாக எமது போராட்ட வண்டி, சிங்களப் படையணிகளுக்கு பேரிழப்புகளை ஏற்படுத்திக்கொண்டு - எமது நிலங்களை விடுவித்துக்கொண்டு - உறுதியான ஒரு தளத்தில் இறுதி வெற்றியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிப் பகுதியையும் தந்தை செல்வா காலத்தின் முழுப்பகுதியையும் நேரடியாகத் தரிசித்து விட்டு இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும், எமது சமூகத்தின் மூத்த உறுப்பினர் திரு. நாக. பத்மநாதன் அவர்கள், பலாலி வான் தளத்தினுள் கரும்புலிகள் புகுந்து நடாத்திய வீரச் சாதனையை பத்திரிகையில் படித்துவிட்டுச் சொன்னார்....

"இராணுவ சீருடைகளையும் கவச வாகனங்களையும் விமானங்களையும் கண்டு தமிழர் பயந்தோடிய ஒரு காலத்தை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால்.... தமிழனைக் கண்டு இராணுவ சீருடைகளும் கவசவாகனங்களும் விமானங்களும் பயந்தோடும் ஒரு காலத்தை, இப்போது பார்க்கிறேன்.

இது பிரபாகரன் உருவாக்கிய காலம்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனப்பிரச்சினையும் அதன் சர்வதேச பரிமாணமும்

உடனடித் தொலை தொடர்பு வசதிகளாலும், விரைவான போக்குவரத்து அனுகூலங்களாலும் உலகம் வெகுவாகச் சுருங்கி வருகின்றது. 21ம் நூற்றாண்டினுள் நுழைகின்ற இத்தகைய காலகட்டத்தில், சர்வதேச நிலைமைகளையும், எமது போராட்டத்தோடு அவற்றின் பொருத்தப்பாடுகளையும் சீர்தூக்கிப் பார்த்தல் அவசியமாகிறது. மேலும் பல்வேறு உடனடி காரணிகளும் இத்தகு ஆய்வை வலியுறுத்துகின்றன. தற்போது தாயகத்தில் சிறீலங்கா அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைக் கண்காணிக்க கனடா, நெதர்லாந்து, நோர்வே நாட்டுப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு, கண்காணிப்புக் குழுவின் தலைவர்களாக இரு பகுதியாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நாடுகளின் பிரதிநிதிகள், பின்னர் நடக்கவிருக்கும் அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையிலும் பார்வையாளர்களாகவோ, மத்தியஸ்தர்களாகவோ இருத்தல் சாத்தியம் என்பதை இது சூசகமாக வெளிப்படுத்துகிறது. இந் நாடுகள் பொதுநலவாய அமைப்பு, ஐரோப்பிய கூட்டமைப்பு, வட அத்லாந்திக் ஒப்பந்த அமைப்பு ஆகிய அரசியல், பொருளாதார, இராணுவ அமைப்புக்களில் அங்கம் வகிப்பதையும், மேற்குலக நாடுகளாக அமைவதையும் அவதானிக்கலாம். இவ்விடயத்தில் பிராந்திய வல்லரசாகும் அவாவுடைய இந்தியா புறக்கணிக்கப்பட்டுள்ளதையும், தனது அயல் நாட்டில் வெளிநாடுகளின், குறிப்பாக மேற்குலக நாடுகளின் தலையீட்டை ஜீரணிக்க முடியாமல் திணறுவதையும் அவதானிக்கலாம்.

இந்தியா, விடுதலைப் புலிகள் - அரசாங்கம் பேசுவதையே விரும்பவில்லை. தான் தலையிடமுடியாத கையறு நிலை அதற்கு மேலும் ஆத்திரத்தை ஊட்டுவதாக இருக்கிறது. அதனைவிட, வெளிநாடுகளின் பங்குபற்றுதல் அதனை வெறுப்பின் உச்சிக்குக் கொண்டு சென்றிருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ஆயினும், வெளிப்படையாக பேச்சுவார்த்தைக்கு ஆதரவு போல நடித்துக் கொண்டிருக்கும்

> **இந்தியா, விடுதலைப் புலிகள் - அரசாங்கம் பேசுவதையே விரும்ப வில்லை. தான் தலையிடமுடியாத கையறு நிலை அதற்கு மேலும் ஆத்திரத்தை ஊட்டுவதாக இருக்கிறது. அதனைவிட, வெளிநாடுகளின் பங்குபற்றுதல் அதனை வெறுப்பின் உச்சிக்குக் கொண்டு சென்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.**

இந்தியா, பேச்சுவார்த்தையைக் குழப்ப முயல்வதும், விடுதலைப் புலிகளையும், அவர்களது விடுதலைப் போராட்டத்தையும் நசித்து விடும் நோக்குடன் நாசவேலைகளில் திட்டமிட்டு, இரகசியமாக, அவதானமாக செயற்பட்டு வருகின்றது என்பதும் கண்கூடு. இந்தியாவின், மேற்குலகின் முதலீடுகளை நோக்கிய, பொருளாதாரத் திறப்பு, தாராளவாதக் கொள்கை என்பனவும், உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மையும் வெளிநாட்டுத் தலையீட்டைக் கட்டுப்படுத்த முடியாமல் இந்தியாவின் கைகளைக் கட்டிப்போட்டிருப்பதாகக் கூறலாம். இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தின் முன்னர் மேற்கத்தைய நாடுகள், எமது பிரச்சினையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் தலையிட்டன. அவ்வேளை இந்தியா, இப்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை வலியுறுத்த முற்பட்டு, சிறீலங்காவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அழுத்தம் கொடுத்து, இலங்கை- இந்திய ஒப்பந்தத்தையும் செய்தது. தனது படைகளை அனுப்பி, அவ் ஒப்பந்தத்தை நிறைவேற்றவும் முற்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் மேற்குலக நாடுகள், குறிப்பாக அமெரிக்கா தனது ஆசீர்வாதத்தை வழங்கி, இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை அங்கீகரித்தது. தற்போது மீண்டும் சமாதான ரீதியாக ஒரு நேரடியான, மேற்குலகத் தலையீடு ஏற்பட்டுள்ளதை இந்தியா கையாலாகாத நிலையில் கவனித்து வருகின்றது.

இத் தலையீட்டுக்கு வசதியாக, சிறீலங்கா அரசாங்கத்தால் சில முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளதையும், அவை இலங்கையின் இனப்பிரச்சினையோடு தொடர்புபடுவதையும் நுணுகிப் பார்க்கலாம். அதாவது, இரண்டு நியமனங்களைக் குறிப்பிடலாம். ஒன்று, தற்போதைய சிறீலங்காவின் சபாநாயகர் திரு. ஓ. ட. ரத்நாயக்கா, பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற அமைப்பின், இவ்வருடத்துக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந் நியமனம், கனடாவில் இடம்பெற்ற 40 வது பொதுநலவாய பாராளுமன்ற மகாநாட்டில் இடம்பெற்றதும், கனடா மோதல் தவிர்ப்பு கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றுள்ளதும் தற்செயலான விடயங்களல்ல. மேலும், முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர், திரு. K.A.J. விஜயதாசா, பொதுநலவாய செயலகத்தின் பிரதி செயலாளர் நாயகமாக இவ்வருடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதையும் நோக்கலாம். இன்னொன்றையும் நாம் கவனத்தில் எடுத்தால், அதன் வழி, மூலத்தைக் கண்டு முடிச்சை அவிழ்க்கலாம். அதாவது, பிரிட்டிஷ் அரசாங்கம், முன்னாள் குடியேற்றவாதி, நீண்டகாலமாக

**- வளவன் -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

இனப்பிரச்சினையில், தனது ஆழ்ந்த கவனத்தை செலுத்திக்கொண்டிருப்பதும், அண்மைக் காலத்தில் நேரடியாகவே தலையிடத் தீவிரமாக முயன்று கொண்டிருப்பதும், அதனைப் பொதுநலவாய அமைப்பின் பின்னணியில் செய்ய முனைவதுமே ஆகும். பிரிட்டன் NATO அமைப்பில், அமெரிக்காவின் அதி நெருங்கிய விசுவாசி என்பதும் அனைவரும் அறிந்ததே.

இச்சந்தர்ப்பத்தில், இன்னொரு விடயமும் முக்கியம் பெறுகிறது. ரணவில, அமெரிக்க ஒலிபரப்பு நிலையத்தை (VOA) அமைப்பதற்கு உள்ளூரில் எழுந்துள்ள எதிர்ப்பாகும். இதில் கூடுதலாக கிறிஸ்தவ மதபீடங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துத் தலைமை தாங்குவதும் அனைவரும் அறிந்ததே. இந்நிலையம், இராணுவ ரீதியாக, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், கடல் கண்காணிப்பு, கடல் அடிக் கண்காணிப்பு ஆகியவற்றுக்குப் பயன்படும் என்று குற்றம் சாட்டப்படுகிறது. மேலும், நிக்கரகுவாவையும், சோவியத் யூனியனையும் அடிபணிய வைக்க இத்தகு பிரச்சார ஒலிபரப்புகள், கோஸ்ரோரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இயங்கியதாக அறியவருகின்றது. எனவே, இந்த VOA நிலையம், பிரதானமாக தன்னையே குறியாகக் கொண்டுள்ளதாக இந்தியா கருதுகின்றது.

இலங்கைத் தீவில் மேற்குலக நாடுகளின் தலையீடு, இந்தியாவின் தலையீடு, அவற்றிற்கிடையிலான போட்டி இடம் பெறுவதையும், அவை உள்நாட்டுப் போர் வழங்கிய சந்தர்ப்பத்தினால் தீவிரம் அடைவதையும் காண்கிறோம். சமாதானத் தீர்வு முயற்சிகளிலும் அவை வெளிப்படுவதை அவதானிக்கிறோம். இந்தியா எமது விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைத்து, சிறீலங்காவை அடிபணிய வைத்து தனது மேலாதிக்கத்தை இத்தீவின் மீது செலுத்தத் தருணம் பார்த்துள்ளது. இந்தியாவை வளைத்துப் போடவும், இப்பிராந்தியத்தில் சந்தைப் பொருளாதாரம், சுதந்திரவர்த்தக வலயம், பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றை மேற்கொள்ள மேற்கு உலகம் விரும்புகிறது. ஆனால், இத்தீவின் சிங்கள, தமிழ் மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் தம் இறைமையை எவருக்கும் காவு கொடுக்காமலும் வாழவே விரும்புகிறார்கள்.

## சந்திப்பு



பல வருடங்களாக பிரிந்திருந்த எனது நண்பன் ஒருவனை சந்திக்கின்றேன். பலவருட கதைகள் எம்மிடையே பாக்கியாக உள்ளன. இடையில் ஏற்பட்ட அனுபவங்கள், சந்தித்த விசித்திரமான குணச்சித்திரங்கள் - எல்லாவற்றையும் இரவு இரவாகவே உட்கார்ந்தபடி பேசித் தீர்த்துக் கொண்டிருந்தோம்.

"என்னடாப்பா படுக்கயில்லையே"

நண்பனின் அத்தான் கடிகாரத்தை பார்த்தபடி இடைநித்திரையில் எழும்பி வந்து கேட்டார்.

"மெதுவாக கதையுங்க; கீழ் வீட்டுக்காரன் போய் சொல்லிப் போடுவான், ஊர் எண்டால் பிரச்சினை இல்லை. இங்க எத்தனை பேருக்கு பயப்பட வேண்டிக் கிடக்கு"

சொல்லியபடியே மீண்டும் நித்திரை தேடிப் போய்விட்டார்.

என்ன உலகம். பேசக்கூட முடியாது. கீழ் வீட்டுக்காரன், அயல் வீட்டுக்காரன், எல்லோரிடமும் சுதந்திரம் பறிபோய்விட்டது - என்ற உணர்வு எங்கள் முகங்க்ளில் தெரிந்தது.

எமது முன்னைய வாழ்வு எவ்வளவு சந்தோசமானது. ஊர்க்குருவிகள் நாங்கள். எல்லா இடமும் எங்கள் இடம். பாடுவோம்; ஆடுவோம்; ஓடுவோம் - எத்தகைய இன்ப பூமி எங்கள் தேசம்.

"என்னடாப்பா கடுமையாய் யோசிக்கிறாய்"

"இல்லை மச்சான், பழசை நினைச்சுப் பார்த்தன்"

"உண்மையில நாங்க எங்கட மண்ணை விட்டு வந்திருக்கக் கூடாது மச்சான்"

"நானும் அதை தாண்டா அடிக்கடி யோசிக்கிறனான். அவசரப்பட்டு வந்ததுதான் மிச்சம்"

"என்ன செய்வது என்று தெரியாம கிடக்கு"

"ஊர்ல போய் இறங்க ஒருத்தரும் மதிக்க மாட்டினம். அதுகள் கஷ்டப்பட நாங்க ஓடி வந்திட்டம்"

"சரி வந்த நாங்க போகேக்க ஏதாவது பிரயோசனப் படுற மாதிரியாவது போகவேணும். இல்லாட்டி போயும் நிம்மதி இருக்காது."

"அதை விடு மச்சான்; கிருபா என்ன செய்யிறான்"?

"அவன் உதவி அரசாங்க அதிபராக இருக்கானாம். கிட்டடியில ஒரு கடிதம் போட்டிருந்தான். நான் அவன்ர மனப்பாட்டை அறிய, 'இங்க வாவன்' என்று எழுதியிருந்தனான்"

"என்ன எழுதினான்?"

"பூக்களை நுகர்வதை விடுத்து, புழுக்களை நுகர அழைக்கின்றாய்" என்று சுடும்படியாய் எழுதியிருந்தான்.

"உண்மைதான் மச்சான் யோசித்துப் பார் நாங்கள் எவ்வளவு தவறை செய்துகொண்டு இருக்கின்றோம். உண்மையில் அவன் சொன்னது சரி. இந்த மூன்று வருடமும் என்னத்தைச் சாதிச்சம். அகதி முகாமும், அகதிக் காசும் - எத்தனை அவமானம். குறிப்பிட்டு சொல்ல, சந்தோசப்பட ஏதாவது ஒரு நிகழ்வு உண்டா? அவன் புத்திசாலி. எங்களை விட மண்பற்று கொண்டவன். சொந்த மண்ணின்ர பெருமையை உணர்ந்தவன். மனிதனாய் தலைநிமிர்ந்து வாழ்கிறான். இறந்தாலும் மனிதனாக இறப்பான்"

கண்கள் கலங்க, விழிகளைத் துடைத்தபடி "படுப்பம் மச்சான்" என்று கூறிக்கொண்டே படுக்கச் சென்றான் நண்பன்.

படுத்தால் தான் தூக்கம் வருமா. விடியும் வரை.

மணிவண்ணன் - டென்மார்க்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியட்நாம் போரைப் பற்றிய பலவகையான உணர்வுகள்

## (யு. எஸ். ஏ. இன்ரநஷனல் எடிசன் - 7.6.1994)

வியட்நாம் போரைத் தான் கண்டித்ததைப் பற்றி கவலைப் படவில்லை என்றும் ஆனால் தனக்கு போர்ப்பயிற்சி இருந்திருக்க வேண்டுமென்று பல முறை விரும்பினாரென்றும் சனாதிபதி கிளின்ரன் கூறினார்.

50 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க - பிரித்தானியப் படைகள் பிரான்சின் கரைமீது இறங்கிய நாளை நினைவு கூர்வதற்காக கிளின்ரன் ஐரோப்பாவில் இருந்த பொழுது வியட்நாம் போரைத் தவிர்க்குமாறு அவர் கல்லூரியில் ஆர்ப்பாட்டஞ் செய்தது தொடர்பாக ஓய்வுபெற்ற படைத்துறை வீரர்கள் கொண்டுள்ள வெறுப்புப் பற்றி சில செய்தித்தாள் நிருபர்கள் அவரிடம் திரும்பத் திரும்பக் கேட்டார்கள்.

"நான் வியட்நாம் போரையும், அதைப்பற்றிய எங்களுடைய கோட்பாட்டையும் எதிர்த்தது பற்றி வருந்தவில்லை" என்று கிளின்ரன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு (NBC) தெரிவித்தார். "அதை முடிவுக்குக் கொண்டுவர கௌரவமான முறையில் என்னால் இயன்றதைச் செய்தேன். நான் அதைப்பற்றி முறையாக நடந்து கொண்டேன் என்று இன்னும் எண்ணிக் கொண்டிருக்கின்றேன்" என்றார்.

"எனக்கு இந்த அனுபவம் இருந்திருக்க வேண்டுமென்று நான் பலமுறை எண்ணினேன். ஏனென்றால் நான் இரண்டாம் உலகப் போரில் பிறந்த பிள்ளை. நான் போர்த் திரைப்படங்களைப் பார்த்து வளர்ந்தேன். அந்தப் படங்களில் நடித்தவர்கள் ஜோன் வேயின், ஜோன் கொடியாக்கும் றொபெட் மிச்சுமூ ஆகியோராவர்கள். என்னுடைய தகப்பனார் இரண்டாம் உலகப்போரின் போது அணிந்த சீருடையுடன் ஒரு படத்தில் அவரைக் கண்ட நினைவுடன் நான் வளர்ந்தேன்" என்று கிளின்ரன் கூறினார்.

இவரது தகப்பனார் வில்லியம் ஜெபர்சன் பிளித் இத்தாலியில் பணியில் ஈடுபட்டிருக்கும் போது சனாதிபதி கிளின்ரன் 1946 ஆம் ஆண்டு பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு வாகன விபத்திலே சாவடைந்து விட்டார்.

கிளின்ரன் தன்னுடைய வளர்ப்புத் தந்தையின் பெயரை வைத்துக் கொண்டார். வியட்நாம் போருக்காகிய படைத் தெரிவில் ஈடுபடாதிருக்க எடுத்த முயற்சியைப் பற்றித் தனக்குக் குழப்பமான உணர்வுகள் இருந்ததாகவும் கூறி, அந்தத் தெரிவில் உள்ளிடுவதற்குத் தடுமாற்றமடைந்து முயற்சித்ததாகவும் சி.பி.எஸ். செய்திச் சேவைக்கு கிளின்ரன் தெரிவித்தார். "ஆனால் அந்த நேரத்தில் நான் சிறந்ததைச் செய்தேன். இப்போதும் சிறந்ததைச் செய்கிறேன்" என்றும் கூறினார்.

இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் இருக்கும் போது 1963 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சேவை புகுமுகக் கடிதம் கிடைத்த பின்பு அதைப் பின் போடும் வகையில் ஆர்கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் அடுத்த கோடைகாலத்தில் ஆர்.ஓ.ரி.சி. (ROTC) படிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஆனால் அவர் அதற்குப் போகாமல் ஒக்ஸ்போட்டுக்கு இரண்டாவது ஆண்டுப் படிப்பிற்காக திரும்பவும் சென்றார். ஆர்.ஓ.ரி.சி. படிப்பிற்கு போகாதபடியால் புகுமுகத் தெரிவிற்குப் பின்பும் தகுதியடைந்தார். ஆனால் அந்த நேரத்தில் ஒரு சீட்டிழுப்பு முறை அமுலில் இருந்தது. கிளின்ரனுக்கு ஒரு உயர்வான எண் இருந்தபடியால் அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.



**"இன்னமும் அநேகமான மேன்மையான மக்கள் தங்கள் நாட்டை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்களென்பதையும் ஆனால் போரை வெறுக்கிறார்கள் என்பதையும் தங்களுக்குத் தெளிவாக விளங்கும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்"**

வியட்நாம் போரின்போது அவருக்கு வந்த தெரிவை விலக்கிக் கொண்டபடியால் அவரின் பிரதம படைத் தளகர்த்தர் பதவியை பற்றி சந்தேகங்கள் எழவில்லையா? என்று அமெரிக்கச் செய்திச் சேவையினர் கேட்டார்.

"நாங்கள் வரலாற்றைத் திரும்பவும் எழுதமுடியாது" என்று கூறிய அவர் "நாங்கள் ஒரு காலத்தில் ஓர் இடத்தில் தான் வாழமுடியும். அதில் நானும் நீங்களும் திறமையாகவே வேலை செய்யவேண்டும். நான் எனது கடமையான படைமுதற் பெரும் தலைவர் பதவியைத் திறமையுடன் ஆற்றிடுவதுடன் நம்பிக்கையுடனும் இருப்பேன். அதற்குக் கடுமையாகச் செயற்பட்டேன். நான் படையினரிடமிருந்து திறமையான கருத்துக்களை இயலுமட்டும் பெற்றுத் தினமும் செயலாற்றுகிறேன். இப்போது நான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்னுடைய பணியைச் செய்ய வேண்டியுள்ளது மற்றவர்களுடைய கருத்துக்களால் தடுக்கப்படமாட்டேன்" என்றார். "சில ஓய்வுபெற்ற வீரர்களின் மனக் கசப்பை நான் அறிவேன். ஆனால், எனக்குச் சார்பாகவிருந்தார்களென்று கூறிய ஓய்வுபெற்ற இரண்டாம் உலகப் போர் வீரர்களின் எண்ணிக்கையையிட்டு நான் அதிர்ச்சியுற்றேன்" என்று அவர் தேசிய செய்திச் சேவைக்கு கூறினார்.

"எங்களுடைய நாடு வியட்நாமிலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டது. சமமான பார்வையில் எமது பங்கு உலகுக்கு நன்மையிலும் பார்க்கப் பெருமளவு தீமையையே விளைவித்தது என்று கருதுகிறேன். எங்களுடைய எண்ணம் நல்லதாயிருந்தும் மற்றொரு வருடைய போரை, அவர்களுக்காகப் புரியக் கூடாது என்பது ஒரு பாடமாகும். அப்படிச் செய்யவும் முடியாது" என்றார். வியட்நாம் போரின் போது சேவை செய்வதைத் தவிர்ப்பது பற்றித் தீர்மானிப்பது அவருடைய வழித்தோன்றலுக்குக் கடுமையானது என்றாலும் "படையிற் சேவை செய்வதை நாங்கள் மிகவும் விரும்புகிறோம்" என்றார்.

சேமப் (Reserve) படையினருக்கு பயிற்சி அளிக்கும் ஆர்கன்சாஸ் பல்கலைக்கழகத்தின் மேலாளருக்குத் "தன்னை விடுவித்து காப்பாற்றியமைக்காக" நன்றி தெரிவித்து எழுதிய சர்ச்சைக்குரிய கடிதத்திலும் மெச்சத்தக்க அமெரிக்க - வியட்நாம் காலம் பற்றி எதிர்ப்புத் தெரிவித்து கிளின்ரன் தனது கருத்துக்களைக் கூறியுள்ளார். 1969 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் நாள் எழுதிய கடிதத்தில், "நான் கூறும் கருத்து இன்னமும் அநேகமான மேன்மையான மக்கள் தங்கள் நாட்டை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்களென்பதையும் ஆனால் போரை வெறுக்கிறார்கள் என்பதையும் தங்களுக்குத் தெளிவாக விளங்கும் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்" எனக் கூறியுள்ளார். ★

www.tamilarangam.net

# "இன்னும் ஒரு நாடு"

## - இணுவையூர் சிதம்பர செந்திநாதன் -

**01.10.1994ம் திகதி சனிக்கிழமை இரவு 7.00 மணிக்குத்தான் படம் ஆரம்பித்தது. இரவு 8.10க்கு என்னவோ படம் முடிந்தது. சனக்கூட்டத்தினூடாக ஊர்ந்து ஊர்ந்து வெளியே வர, முல்லை மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சங்கரண்ணர் எதிர்ப்பட்டார். அவருக்குக் கைகொடுத்து மகிழ்ந்து இயக்குனர் தாசனை தேடிக்கொண்டு கைலாசபதி அரங்கினை விட்டு வெளியே வந்தால் வெளியே மழை. மழையில் நனைந்தபடி மோட்டார் சைக்கிளைத் தேடத் தொடங்க கூட வந்த ஏழு வயது மகன் கேட்டான்.**

**"அப்பா கடைசியில செத்தது தளபதி தானே"**

**"இன்னுமொரு நாடு" படமாக இருந்தால் என்ன இதற்கு முன்னர் வெளியான தமிழோசை, தாயகக்கனவு, காற்றுவெளி போன்ற படங்களாக இருந்தால் என்ன, ஒளிவீச்சில் வெளியான குறும் படங்களாக இருந்தால் என்ன எல்லாமே எங்கள் மண்ணின் தனித்தன்மைகளை வெளிப்படுத்துகின்றன.**

**சினிமா என்கிற வலிமை மிக்க சாதனத்தை, காட்டுக்கத்தலாக, சர்க்கஸ் விளையாட்டுக்களாக, மூளை குழம்பியவர்களின் கூத்துக்களாக மாற்றாமல் உயிர்த்துடிப்புள்ள வெளிப்பாடாகநம்மவர்கள் பயன்படுத்தியுள்ளதை உணர்ந்துகொள்ள முடிகிறது.**

**ஒட்டுத் துணிகளில் உடைகளைத் தயாரித்து, வலிப்புக்காரர்களாக துடிப்புள்ளவர்களையும், முக்கிமுனகுபவர்களையும், படம் காட்டி கலை உலக மேதாவிகளாக மிளிரும் தமிழக சினிமா விற்பனர்களுக்கு போட்டுக்காட்ட வேண்டிய படங்களில் ஒன்று.**

**"இன்னும் ஒரு நாடு"**

**நாட்டை மீட்பதற்கான போராட்டம் நடத்துபவர்களே அரச நிர்வாகிகளாக, நீதியாளர்களாக, ஓவியர்களாக, எழுத்தாளர்களாக, நடிகர்களாக தொழில்நுட்ப விற்பனர்களாக வளர்ச்சிபெற்று உயர்வுநிலைக்கு வந்து கொண்டிருக்கும் உன்னதம் மிக்க போராளிகளைக் கொண்டது எங்கள் மண் என்று பெருமைப்பட முடிகின்றது.**

**உலக சினிமா தரங்ளையும், சிங்கள சினிமாக்களின் தரங்களையும் பற்றிப் பேசுபவர்கள் ஒன்றை மாத்திரம் புரிந்துகொள்ள வேண்டும். பொருண்மிய தடை உட்பட பல்வேறு தடைகளுக்கு மத்தியில் நாங்கள் நிமிர்ந்து நிற்பதே மிகப்பெரிய விடயமாகும்.**

**சகல வசதிகளும் எங்கள் கைகளில் வரும்போது சர்வதேச ரீதியாக எங்கள் படைப்புக்கள் முதன்மை பெறும். பரிசில்களையும் தட்டிக்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.**

**உடல் அசைவுக்கு ஏற்ப கமெராவில் ஏற்படும் அசைவால் படமெடுப்பதில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கக்கூடிய "ஸ்டடிகேம்" கமரா என்றும், (உடம்போடு பொருத்தக்கூடியது) சிறிய ஹெலி கொப்ரரில் கமெராவைப் பொருத்தி விட்டு 'ரிமோட் கொண்டோரலர்' மூலம் இயக்கக்கூடிய "ஹெலிகேம்" கமரா என்றும் சினிமா வளர்ச்சி பெற்றுவிட்ட நிலையிலும், கம்பியூட்டர் மூலம் உருவங்களை உருவாக்கி சாதனைகள் படைப்பதில் சினிமாக்கள் முன்னேறிவிட்ட போதும்.**

**ஒற்றைக் கமராவையும், நம்பிக்கையையும் வைத்துக்கொண்டு உருவாக்கி இருக்கும் இப்படம் தமிழீழ திரைப்பட வரலாற்றில் ஒரு திருப்பு முனை.**

**இப்படத்தில் குறைகள் இல்லையா என்று கேட்கலாம்? இப்போது அதுவல்ல பிரச்சினை. காலங்காலமாக அன்னிய இறக்குமதிச் சரக்குகளை பார்த்துப் பார்த்து புளித்துப்போன எங்களுக்குப் பல குறைபாடுகள் தெரியலாம்.**

**ஆனால், எங்கள் படங்களில் உள்ள உண்மையும், யதார்த்தமும் உயிர்த்துடிப்பும், அழகும், அற்புதமும் வேறு எங்கே கிடைக்கும்? சகல வளங்களும், வசதிகளும் கிடைக்கும் போது இன்று தெரியும் குறைபாடுகள் தெரியாமலேயே போய்விடும். நிவர்த்தி செய்யப்பட்டுவிடும்.**

**முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகத்தினரும் படத்தில் பங்குகொண்ட சகல கலைஞர்களும், இயக்குனர் பொ. தாசன் உட்பட சகலருமே பாராட்டுக்கு உரியவர்கள்.**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறுகதை

# முத்திரையிடப்பட்ட உறவுகள்

PAR AVION என முத்திரை இடப்பட்ட வெள்ளை நிற என்வலப் ஒன்றைத் தபால்காரனிடமிருந்து வாங்கிய கனகம்மாவிற்கு முகம் மலர்ந்தது. "அமெல்டா மூக்குக் கண்ணாடிக் கூட்டை எடுத்து வா" எனக் குசினிக்குள் இருந்த மருமகளை நோக்கிக் குரல் கொடுத்தபடி. முன் விறாந்தையில் இருந்த ஈஸி சேரில் சாய்ந்து கொண்டாள். சுமார் எட்டாயிரம் மைல்களுக்கு அப்பால் ஜெர்மனி




யில் இருக்கும் மகள் பரணியுடன் ஏதோ நேரடியாகப் பேசப் போகிறோம் என்ற உணர்வுடன் 'என்வலப்' கூட்டைத் திறந்தாள். நன்கு மடிக்கப்பட்ட காபன் பேப்பர் துண்டு முதலில் எட்டிப் பார்த்தது. அதனைப் பிரித்துப் பார்த்த போது 10 டொச் மார்க் நோட்டொன்று சிரித்துக் கொண்டிருந்தது.

"அத்தை ஆர் போட்ட கடிதம்" கேட்டுக்கொண்டு வந்தாள் அமெல்டா.

"பரணிதான் காசு அனுப்பி இருக்கிறாள். என்னத்தைச் செய்தாலும் தாய் தகப்பன் எண்ட பாசம் பெம்பிளைப் பிள்ளையளுக்குத்தான்."

கனகம்மாவின் கூற்றினால் அமெல்டாவின் மனம் சுருக்கென்றது. அவள் அவ்விடத்தைவிட்டு நகர்ந்து குசுனிக்குள் மீண்டும் புகுந்து கொண்டாள்.

'குமணன் இப்பவும் வெளி நாட்டிலை இருந்திருந்தால் எப்படியெல்லாம் காசு அனுப்பியிருப்பான்.

எத்தனை ஆயிரத்தைச் செலவழிச்சு இந்தச் சனியனை அனுப்பிவிட, இவன் ஏதோ இயக்கம் எண்டு திரும்பி வந்ததும் இல்லாமல் தன்ரை எண்ணத்துக்கு ஒரு கலியாணம்...' மனதில் எழுந்த எண்ண அலைகளை மூடி வைத்துவிட்டு கடிதத்தைப் படிக்கலானாள் கனகம்மா.

★★★

வெங்கடேசுவரன் வித்தியாசமான எண்ணங்களைச் சுமந்து கொண்டிருக்கும் மனிதர். ஒரு இலக்கியவாதி என அழைக்கப் படலாமோ தெரியாது. ஆனால் இலக்கிய வட்டங்களைச் சார்ந்த பிரமுகர்களிடையே பிரபலமானவர். யாருக்கும் பாடம் நடத்தி போதனை செய்தவரில்லை. எனினும் பலரும் 'ஆசிரியர் ஐயா' என்றே அவரை அழைக்கின்றனர். அறுபது வயதைக் கடந்து விட்ட போதிலும் இப்போதும் இளவட்டங்கள் பெரும்பாலும் அவரை மொய்த்துக் கொண்டிருக்கும். அவர் வீட்டில் முகாமிட்டிருக்கும் இளைஞர் கூட்டத்தை சமாளிப்பதில் திண்டாடிப் போபவர் பெரும்பாலும் கனகம்மாதான்.

வெங்கேடேசுவரன் - கனகம்மா தம்பதிகள் தங்கள் வாரிசுகளாகப் பெற்றுள்ளவை நான்கு ஆண் மக்களும் இரண்டு பெண் மக்களும். முத்திரைச் சந்தியிலிருந்து கச்சேரி நோக்கிச் செல்லும் தார் றோட்டின் அருகாமையில் மூத்த விநாயகர் கோவிலுக்குச் சமீபமாகவுள்ள இந்த வீடும், ஒரு சைக்கிளும், சுமார் ஒரு லட்சம் ரூபா கடனும் தவிர வேறு சொத்து எதுவும் வெங்கடேசுவரனுக்கு கிடையாது.

குமணன் படலையைத் திறந்து சைக்கிளை தள்ளிக்கொண்டு உள்ளே போகும் போது, வெங்கடேசுவரன் சாமி படங்களின் முன்பாக நின்று நாராயண ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கிறார். அதாவது மாலை நேரம் ஆறு மணியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

உடை மாற்றி, முகம் கழுவி, கை, கால் அலம்பி முன் விறாந்தைக் கதிரைக்கு வந்துவிட்ட குமணன் "அமெல்டா என்னப்பா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்யுறீர்" என்றான் செல்லமான அதட்டல் தொனியில்.

"இந்தாங்கோ உங்களுக்கு தேத் தண்ணி" என்றபடி தேநீர் கோப்பையுடன் வந்தாள் அமெல்டா.

"இதுக்குத்தானோ குசினிக் குள்ள இவ்வளவு நேரம்"

"இல்லையில்லை, இரவுக்கு சாப்பாடு செய்யிறன்"

"ஏன் அம்மா இல்லையோ"

"இல்லை. பரணி மச்சாளின்ரை கடிதம் வந்தது. அதை எடுத்துக் கொண்டு பவானி மச்சாள் வீட்டை போட்டா. பொழுதுபட முன்னர் வந்திடுவன் எண்டு சொன்னவா"

"என்னவாம் பரணி. என்ன எழுதியிருக்கிறா?"

"நான் கடிதம் பார்க்கேல்லை. ஆனா காசு அனுப்பியிருக்கிறா"

"அப்பிடியெண்டா ஏதும் சாமான்களும் வாங்கி அனுப்பச் சொல்லி எழுதியிருப்பாளே!" குமணன் அபிப்பிராயம் தெரிவிக் கவும். வெங்கடேசுவரன் தனது பிரார்த்தனையை முடித்துக் கொண்டு வெளியே வரவும் சரியாக இருந்தது.

"அவள் என்ன எழுதியிருக்கி றாளோ தெரியாது. நானும் இன் னும் கடிதம் பார்க்கேல்லை. ஆனால் அவளைப் பற்றித் தேவை யில்லாமல் கதைக்கத் தேவை யில்லை.... விளங்குதோ?"

தனக்கும் கணவருக்கும் இடை யிலான உரையாடலில் மாமன் வெங்கடேசுவரன் தலையிட்டதும் அவ் இடத்திலிருந்து விலகிக் கொண்டாள் அமெல்டா. குமணன் மௌனமானான்.

★★★

"பத்து டொச் மார்க்கை அனுப்பிப் போட்டு, பத்தாயிரம் ரூபாய்க்குச் சாமான் வாங்கி அனுப்பச் சொல்லி அவள் எழுது வாள். இவையளும் அதுதான் முக்கியமான வேலையெண்டு திரிவினம். இதுக்கு நான் என்ன செய்யிறது" தனிமையில் அமெல் டாவிடம் முணுமுணுத்தான் குமணன்.

"உங்கட தம்பி, உத்தமன் இண்டைக்கு வந்தவர். பரணி மச்சாள் கேட்ட சாமான்களை வாங்கி அனுப்ப எண்டு ஐநூறு ரூபா குடுத்தவர் அத்தைக்கு. பவானி மச்சாளும் இருநூறு ரூபா குடுத்தவவாம். மிச்சக் காசைத் தான் உங்களிட்டக் கேட்டவா" அமெல்டா கூறினாள்.

அந்த மெல்லிய ஒளியிலும் கூட அவனது முக மாற்றங்களை துல்லி யமாகத் தெரிந்துகொண்டாள் அமெல்டா.

"அவனுக்கு என்ன. அவன் என்ன செய்யிறான் எண்டு ஒருத்த ருக்கும் தெரியாது. எப்பாலும் இருந்து போட்டு ஐநூறு அல்லது ஆயிரத்தை விட்டெறிஞ்சு போட் டுப் போனா அவன் நல்ல பிள்ளை. உழைக்கிறான் எண்டு பேர்போட்டுவிடுவினம். அவன் மாதிரி கள்ளத் தொழில் செய்யிற தெண்டா நான் இப்ப கோடீஸ் வரன். இவையளுக்கு லட்சமென்ன கோடி குடுத்தாலும் பரவாயில்லை. ஆனால் நான் அப்பிடியில்லை. ஏதோ லட்சியத்தோட சீவிக்கத் தெண்டிக்கிறன். அதை இவையள் விளங்கமாட்டன் எண்டா நான் என்ன செய்ய."

"நீங்க சொல்லுறது சரிதா னப்பா. ஆனா என்ன செய்யிறது. பரணி மச்சாளின்ரை குழந்தைக் கும் ஏதோ சுகமில்லையாம். அதுக் குத்தானே ஆயுள் வேத மருந்துச் சாமான்களும், ஒரு வெள்ளி அருணாக் கொடியும் தானே வாங்கி அனுப்பச் சொல்லியி ருக்கிறா. கையில் கிடக்கிற காசு போக மிச்சம் ஐநூறு ரூபா தான் தேவையாம். இதைக் குடுக்கிறத விட்டிட்டு நாங்கள் கத்தப் போனால் ஒண்டுமில்லாமை வந்தவளாலைதான் தங்களுக்குக் கஷ்டம் எண்டு தானே தோபிப் பினம்." அமெல்டா தனது நியாயத்தை எடுத்துக் கூறினாள்.

"அப்பிடியில்லை அமெல்டா. பரணிக்குத் தேவையெண்டா அங்கேயே 'இண்டியன் சொப்பில்' வாங்கலாம். அப்பிடியில்லை எண்டால் அவளுக்கே காசு காணாது எண்டு எழுதலாம். இல்லாட்டி பரிசிலை இருக்கிற தம்பி பரதனிட்டை எழுதிக் கேக்க லாம். அதையெல்லாம் விட்டிட்டு என்னை ஏன் கஷ்டப்படுத்துவான். நான் இவையளை தவிக்க விடக் கூடாது எண்டுதானே வைச்சுப் பார்க்கிறன். மாதம் ஒன்றுக்கு இங்க எவ்வளவு செலவாகுது. இதுகளை எல்லாம் நான் கணக் குப் பார்த்துக் கேட்டனானே. இல்லைத் தானே. பிறகு ஏன் உம்மோடை கோவிக்கவேணும்." என்றான் குமணன்.

"உதெல்லாம் கதைக்கப் போனா உங்களுக்குத்தான் கரைச் சல் வரும். உங்களை வெளியில அனுப்புறதுக்குப் பட்ட கடனில இருந்து இப்ப கட்டின வட்டி வரைக்கும் கதை வளரும். வீண் பிரச்சினை வேண்டாம் உங்க ளுக்கு" அமெல்டா இதமாகக் கூறினாள்.

"என்னவோ நான் சொல் லுறதை சொல்லிப்போட்டன். நீர் என்னெண்டாலும் செய்யும். நான் நாளைக்கு முல்லைத்தீவுக்குப் போறன். வர ஒரு கிழமைக்கு மேலையாகும்." எனக் கூறியபடி அமெல்டாவை அணைத்துக் கொண்டான் அவன்.

★★★

"அம்மா, அம்மா" என்ற குரல் கேட்டு வாசற் படலையைத் திறந் தாள் கனகம்மா.

"என்னமம்மா. என்னைத் தெரி யுதோ" என்றான் கணேசலிங்கம்.

"ஓமோம். போனமுறை வரக்கை வந்திட்டுப் போனனீரெல்லே"

"ஓமோம் ஞாபகம் வைச்சிருக் கிறியள் என்ன?"

"எப்ப இனித் திரும்ப ஜெர்மனி போறது?"

"நாளைக்கு காலை இங்கிருந்து வெளிக்கிடுவன். எப்பிடியும் ஒரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழமைக்குள்ள ஜெர்மனிக்கு போயிடுவன். நீங்களும் ஏதோ சாமான்கள் அனுப்ப இருக்கிறியள் எண்டு அதை வாங்கிக்கொண்டு போகச் சொன்னவர் குமணன். அதுதான் வந்தனான்."

"தம்பி சொல்லிப் போட்டுத் தான் போனவன். கொஞ்சம் இருங்கோ வாறன்" என்று கூறி அறைக்குள் நுழைந்தாள் கனகம்மா.

அமெல்டா கொண்டு வந்த குளிர்பானத்தை வாங்கிப் பருகிக் கொண்டே கணேசலிங்கம் பேசிக் கொண்டிருந்தான்.

கனகம்மா பெரிய கடதாசிப் பெட்டியை கொண்டு வந்து கணேசலிங்கத்தின் முன் வைத்தாள். கணேசலிங்கம் திகைத்துப் போனான். எனினும் அதை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் இரு கைகளாலும் பெட்டியைத் தூக்கி "எத்தனை கிலோ இருக்கும்" வினாவினான்.

"பத்துக் கிலோவும் வராது" கனகம்மாவின் பதில். அதனைச் செவிமடுக்காது மளமளவென அட்டைப் பெட்டியை பிரித்துப் போட்டு "மிக முக்கியமான, அவசரமான சாமான்களை மட்டும் எடுத்துத் தாங்கோ" எனக் கூறி ஒரு சுங்கப் பரிசோதனை நடத்திக்கொண்டிருந்தான்.

தான் கொண்டு வந்திருந்த கைக்கு அடக்கமான பைக்குள் மட்டும் தெரிவுசெய்த பொருட்களை அடக்கிக்கொண்டு மிகுதியை அங்கேயே விட்டுவிட விரும்பினான். அதற்காக அவன் எடுத்துச் சொன்ன நியாயங்கள் எடுபடவில்லை. "மிளகாய்த்தூள், கோப்பித்தூள் போன்ற பொருட்கள் அங்கேயே தாராளமாக வாங்கலாம்." என்று கணேசலிங்கன் கூறியபோது கனகம்மாவிற்கு கிட்டத்தட்ட அழுகையே வந்து விடும் போலிருந்தது.

"நானே தெரிவு செய்து வாங்கி, நானே கஷ்டப்பட்டு பக்குவமாக வறுத்து இடித்தது இது. இதிலை எவ்வளவு அன்பு கலந்திருக்கும். கடையில வாங்கிறது அப்பிடியே. ஆனபடியா கட்டாயம் எடுத்துக் கொண்டு போங்கோ தம்பி" இரங்கினாள். 'அத்தையின் அன்பெல்லாம் கரன்சி நோட்டுக்குள் மட்டுமே அடக்கம்' எனத் தெரிந்து இருந்த போதும் அமெல்டா அத்தைக்காகப் பரிந்து பேசினாள்.

கேலியாகப் பேசும் விடாக் கண்டனான கணேசலிங்கன், "அப்படியெண்டால், நான் இதை எடுத்துக்கொண்டு போறன். ஆனால், என்ரை சாமான்களோடை இதுகளையெல்லாம் பிளைட்டில கொண்டு போகேலாது. எங்கடை இடத்திலை வைச்சிட்டுப் போனா பிறகு வாற ஆக்கள் ஆரிட்டையும் குடுத்துவிடுவான்கள் தானே" என்றான் கண்களைச் சிமிட்டியபடி.

"அது வேண்டாம். நீங்கள் கொண்டு போறதெண்டா கொண்டு போங்கோ. அதை வைச்சிட்டுப் போனா உங்கட ஆக்கள் மிச்சம் மீதி வைக்கமாட்டினம் என்றாள் அமெல்டாவும் பதிலாக.

என்ன... என்ன... எங்கட ஆக்களோ. ஏன் உங்கட ஆக்களும் தானே இருக்கினம். நான் குமணனிட்டையே குடுத்திட்டுப் போறனே" என்றான் கணேசலிங்கன் கிண்டல் கலந்த தொனியில்.

"எதுக்குத் தம்பி! வீண் பிரச்சினை. உம்மால ஏலாட்டா விடும். நீர் எடுத்ததுகளை மட்டும் கொண்டுபோய் குடும். மிச்சத்தை பிறகு நாங்கள் ஏதோ வழியில அனுப்பிறம்." என்றாள் கனகம்மா.

"அது கட்டாயம் செய்வன். அதுக்கு ஒண்டும் யோசிக்க வேண்டாம். நான் விசாரித்தனான் எண்டு குமணனிட்ட சொல்லுங்கோ. அமெல்டா வேறை என்ன போய் வரட்டுமோ" என்று விடைபெற்றுக் கொண்டான்.

★★★

கஷ்டப்பட்டுச் செய்த பொருட்களை அனுப்ப முடியவில்லையே என்று கனகம்மா கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கச் சகிக்கவில்லை வெங்கடேஸ்வரனுக்கு.

தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு எங்கெல்லாமோ சுற்றி ஒரு வழியாகத் தொடர்பு ஒன்று ஏற்படுத்திக் கொண்டார். பரணியின் புருசனின் தங்கையின் கணவரின் சகோதரி ஜெர்மனி செல்வதற்காக கொழும்புக்கு போயிருப்பது தெரியவந்தது. எனவே நாளை அல்லது நாளை மறுதினம் இங்கிருந்து புறப்பட்டால் கொழும்பில் அவர்களைச் சந்தித்து இந்தப் பொருட்களை அனுப்பிவிடமுடியும். பரணியுடன் தொலைபேசி மூலம் பேசிவிடலாம். அத்துடன் கடைசி மகன் அருந்தவத்தையும் கூட அழைத்துச்சென்றால் நல்லது. கொழும்பில் தெரிந்த நண்பர்களுடன் அருந்தவத்தை தங்கவைத்து விட்டால் அவனது பாதுகாப்புக்கு நல்லது. இங்கேயே அருந்தவத்தை வைச்சிருந்தா வீண் பிரச்சினைகள் வந்தாலும் வரலாம். குமணனைத் தேடி வாறவை அவனில்லை எண்டிட்டு, இவனை ஏதும் செய்தாலும் கஷ்டம். ஆனபடியால் இவனையும் கூட்டிக்கொண்டு நாளைக்கு வெளிக்கிட்டால் தான் சரி. வெங்கடேசுவரன் தனது திட்டத்தை மனைவி கனகம்மாவிடம் ஒப்புவித்தார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த கனகம்மா பரணியுடன் தொலைபேசியில் கதைக்க தானும் வரப்போவதாகக் கூறினாள். பரிசில் இருக்கும் பரதனின் கல்யாண ஏற்பாடுகள் தொடர்பாக அவனிடம் பேசவேண்டும் என வலியுறுத்திய கனகம்மா, இத்திட்டத்தை நிறைவேற்ற பணம் எப்படி? எனக்குத் தெரியாமல் ஏதும் காசு வைத்திருக்கிறீரோ? என வினாவினாள் கணவனிடம். "அதெல்லாம் நாராயணன் பார்த்துப்பான்" என்றார் வெங்கடேஷ்வரன் சர்வசாதாரணமாக.

★★★

இருள் விலகத் தொடங்கிய அதிகாலை நேரம் வெங்கடேஷ்வரனும் கனகம்மாவும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டு விட்டனர். பஸ் நிலையம் வரை சென்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களை வழியனுப்பிவிட்டு வீடு திரும்பிய அமெல்டாவை தேநீர்க் கோப்பையுடன் வரவேற்றான் அருந்தவம். மெலிந்த தோற்றம் - மிரண்ட விழிகள்- குழப்பம் நிறைந்ததொரு மனநிலை பிரதிபலிக்கும் முகபாவம். அனைத்தும் சேர்ந்து இருக்கும் அருந்தவத்தைப் பார்த்த போது அமெல்டாவுக்கு ஒரு வகை அனுதாபம் எழுந்தது. அத்தை, கனகம்மா புறப்படும் போது "பிள்ளைபிடிகாரர்களின்" பிரச்சினை தொடர்பாக அருந்தவத்தை எங்கேயும் வெளியிலை கடைக்குக்கூட விடவேண்டாம். வீட்டை விட்டு வேற எங்கேயும் அவனை அனுப்ப வேண்டாம் என்றெல்லாம் கூறிய ஆலோசனைகள், அவள் காதுகளில் இன்னமும் ரீங்காரித்துக்கொண்டிருந்தன.

"அப்பரும் அம்மாவும் திடீரென கொழும்புக்கு வெளிக்கிட்டினையே. இவையளிடம் இதுக்கு காசு ஏது?" கதிரையில் இருந்தபடியே அமெல்டாவிடம் கேட்டான் அருந்தவம்.

"இவனது கனத்த யோசனைகளுக்கு இதுதான் காரணமோ? இதற்கு என்னிடமிருந்துதான் பதிலை எதிர்பார்க்கிறானோ" எனத் தனக்குள்ளேயே எண்ணிக் கொண்ட அமெல்டா "மாமா, காசு கொஞ்சம் வைச்சிருந்தவர். அதோடை அத்தை என்ரை காப்பையும் வாங்கி அடைவு வைச்சவா" என்று கூறினாள்.

"அப்பா, அம்மாவை வைச்சுப் பார்க்கிறதும் போதாதெண்டு அவையள் நினைச்ச பாட்டிற்கு எல்லாம் செலவழிக்க வேண்டிக் கிடக்கு, பாவம் குமணன் அண்ணை" அருந்தவத்தின் சிந்தனை சுழன்றது.

'அண்ணி' என வியப்புடன் அவன் திரும்பிப் பார்த்த பார்வை 'ஏன் கொடுத்தீர்கள்? என்ன காரியத்தைச் செய்துவிட்டீர்கள்?' எனக் கேட்பது போலிருந்தமையால் தர்மசங்கடத்திற்கு உள்ளானாள் அமெல்டா.

"இல்லை. அருந்தவம்! பரணி மச்சாளோடையும் உங்கட அண்ணன் பரதனோடையும் அவசரமாய் போனில் கதைக்கவேணுமாம். மற்றது சாமான்களும் குடுத்து விடத்தானே வேணும். அதுதான் குடுத்தனான்" எனச் சமாளித்தவளாய், "ஏன் கொழும்புக்கு போக மாட்டன் எண்டு ஒத்தக் காலில் நிண்டனீர்" எனக் கேள்வி தொடுத்தாள்.

"இவையளுக்கென்ன? கொண்டு போய் விட்டிட்டு வந்திடுவினம். பரிசிலை இருந்து காசு வரும், ஜெர்மனியிலை இருந்து காசு வரும்" என்று நான் கனவு கண்டுகொண்டிருக்க வேண்டியது தான். அதுக்குப் பிறகு குமணன் அண்ணைக்குத்தான் கஷ்டம். இங்கு பள்ளிக்கூடமுமில்லை.

"இப்ப ரியூசன்களும் இல்லை. வீட்டோடை இருந்திட்டா பிரச்சினை வராது எண்டு நினைக்கிறன்! எதுக்கும் குமணன் அண்ணை வரட்டும் யோசிப்பம்" எனக் கூறியபடி அவன் வானொலிப் பெட்டியை திருகினான்.

★★★

கொழும்பு பஸ் குழிகளிலும், கிடங்குகளிலும் விழுந்து நிமிர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. பஸ்சில் இருந்த பிரயாணிகள் அனைவரிடையிலும் இனம் புரியாத ஒருவித அமைதி. ஒவ்வொரு சோதனைத் தடையையும் கடந்து செல்லும் போது ஒவ்வொரு வெற்றிபெற்ற உணர்வு.

காலை உணவுக்காக பஸ்கள் தரிக்க வைக்கப்படும் முறிகண்டியில், தனது தெரிந்த நண்பர்கள் யாரும் வேறு ஏதாவது பஸ்களில், வருகிறார்களா எனக் கண்களைச் சுழலவிட்டு தேடினார் வெங்கடேசுவரன்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பஸ் ஒன்றிலிருந்து இறங்கி தேநீர் கடைக்குள் நுழையப்போன சுப்பிரமணியத்தை கண்டார் வெங்கடேசுவரன். சுப்பிரமணியம் வெங்கடேசுவரனிடம் நெருங்கிய நட்புக் கொண்டவர் மட்டுமல்ல. அயல் வாசியும் கூட.

"என்னப்பா வெங்கடேசா! துலைக்கே பயணம்?" என ஆரம்பித்தார் சுப்பிரமணியம்.

"இல்லை கொழும்பு வரையும் போட்டு வரவேணும் மகளுக்கு இரண்டொரு சாமான் அனுப்ப வேணும். அதோட பரதனுக்கும் ரெலிபோன் பண்ணவேணும்" வெங்கடேசுவரன் சொன்னார்.

"எப்பிடி மக்கள் மருமக்கள் சுகமோ? ஊரிலை என்ன விசேசம்? நானும் கனகாலம் அங்கால வந்து."

"ஓ.... பரவாயில்லை. மகளுக்கு பெண் குழந்தை பிறந்திருக்கு, போட்டாவும் அனுப்பியிருக்கினம். பரதனுக்கும் பெம்பிளை பாக்கிறம், ஊர்க் கதையள் கண்டபடி இப்ப கதைக்கேலாது தானே" பெருமூச் செறிந்தார்.

"மூத்தவனுக்கு, குழந்தை குட்டி ஒண்டும் இல்லையே? அவன் எங்கை ஊரிலைதானே. நான் ஒருக்கால் அவனைக் காண வேணும்."

"அவனை நினைச்சால் தான் எனக்குப் பெரிய கவலை. எண்டைக்கு உருப்படப் போகுதோ? இதுகளை எல்லாம் விட்டுப் போட்டுத் திருந்தினால் தான் எனக்கு நிம்மதி. அதுக்காக திருப்பதியானுக்கு கூட நேர்த்தி வைச்சிருக்கிறன்." என்றார், சோகம் கலந்த குரலில்.

வழமையாக இவர் சொல்லுவது தானே இது. மெல்லியதாக புன்னகை ஒன்றை இழையோட விட்டார் சுப்பிரமணியம் தன் முகத்தில்.

"குமணன்தான் இவர்களின்ரை பிரச்சினையள் எல்லாம் பார்க்கிறான், செலவழிக்கிறான். ஆனா இவையளுக்கு அதிலெல்லாம் திருப்தி இல்லை. இவையளைத் திருப்திப்படுத்த ஒரு குமணன் இல்லை ஓராயிரம் பேர் வந்தாலும் போதாது." என நினைத்தபடியே, தேநீர்கடைக்குள் வெங்கடேஷ்வரனை அழைத்துச் சென்றார் சுப்பிரமணியம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாவீரர் நாள் 1994



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ் மக்களின் புனிதமான நிகழ்வு - மாவீரர் நாள் மாவீரர்களின் நினைவுகள் தேசத்தை வழிநடத்தும் உந்துசக்தியாக என்றும் இருக்கிறது. மாவீரர்களினை நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்துவிடாது தமிழீழ மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும் பண்பாட்டுக்குரியதாகவும் வளர்ந்து வருகிறது. இவ் உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வுபூர்வமாகவும் புனிதத் தன்மையுடனும் தமிழீழ மக்கள் கொண்டாடி வருகின்றனர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல் கவிஞர் சோ. பத்மநாதன்

## நேர்முகம்: கருணாகரன்



**தலைசிறந்த கவிஞராக விளங்கும் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள், ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் நிறைந்த ஆங்கில அறிவும் இணைந்த செயல்கள் மூலம் எம் மண்ணுக்குப் பெருமை சேர்பவர்களுள் ஒருவர். இவரது கவிதைகள் அழகும், பொருட் செறிவும், நெஞ்சில் வந்து சுருக்கெனக் குத்தும் வேகமும் கொண்டு திகழ்கின்றன. மரபில் தோய்ந்து புதியன தேடும் இவரின் வழித்தடத்தைப் பின்பற்றி பல புதிய கவிஞர்கள் உருவாக்கம் பெற்றுள்ளனர். கவியரங்குகளில் இவர் கவிதை சொல்லும் பாங்கு அலாதியானது.**

**விடுதலைக்காகப் போராடும் எமது மண்ணின் தேவை உணர்ந்து, உலகின் பல போராட்டக் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்து எமது போராட்டத்துக்கு வலு சேர்ப்பவர். ஆபிரிக்கக் கவிதைகளில் அலாதியான ஈடுபாடு மிக்கவர். நாடகம், விமர்சனம் போன்ற துறைகளில் இவரது பங்களிப்பு கணிசமானது.**

**இவர், இப்பொழுது பலாலி ஆசிரிய கலாசாலையின் உப அதிபராகவும், அங்கு ஆங்கில விரிவுரையாளராகவும் கடமை யாற்றுகின்றார். மனித நேயமும் சமூக அக்கறையும், எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைவும் கொண்ட இவரிடமிருந்து இன்னும் ஏராளமானவற்றை இந்த மண் எதிர்பார்த்து நிற்கின்றது.**

**★★ ஈழத் தமிழ் கவிதை உலகின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவராக மிளிரும் தங்களின் வாழ்க்கைப் பின்புலத்தையும், கவிதைத் துறைக்கு தாங்கள் வந்த வழித்தடத்தையும் அறிய விரும்புகிறோம்.**

✪ முன்னணியில் இருக்கிறேனா இல்லையா என்பதைக் காலந்தான் நிர்ணயிக்கவேண்டும். எனது பின் புலத்தைச் சொல்லலாம். தமிழ்ப் புலைமை வாய்ந்த அல்லது எழுத் துத்துறையில் ஈடுபட்ட குடும்பப் பின்னணி எனக்கு வாய்த்ததில்லை. என் தாய்மாமனாருடைய சுருட் டுக் கொட்டில் நான் வளைய வந்த களம். வாழ்க்கையின் அடிமட்டத்தைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளர்கள் புராண இதிகா சங்களை நன்கு தெரிந்து வைத்தி ருந்தார்கள். அங்கே 'படிப்பு' நடக்கும். இரத்தின நாயகர் அன் சன்ஸ் 'பெரிய எழுத்துப்' பாரதக் கதையை ஒருவர் ராகத்தோடு வாசிப்பார். வசனந்தான். ஆனால் புராண படன பாணியில் வாசிப் பார். 14, 15 வயதில் எல்லாம் பாடசாலை விடுமுறை காலத்தில் நானே வாசிப்பதுமுண்டு. என் பெரியதகப்பனார் ஒருவர்; மகா விவேகி. பாரதம், ராமாயணம் எல்லாம் தலைகீழ் பாடம். அவர் கதை சொல்லும் பாணி அற்புத மாக இருக்கும். மற்றைய தொழிலா ளர்கள் அவரைத் தூண்டிவிட்டு, ஆவலோடு காத்திருப்பார்கள். வெற்றிலையைத் துப்பிவிட்டு மனி சன் கதை சொல்லத் தொடங்கி னால் கேட்டுக்கொண்டே இருக் கலாம். இத்தனைக்கும் அவர் ஒரு பகுத்தறிவுவாதி. கந்தபுராணம் படிப்பார். ஆனால் சிலகட்டங்கள் வரும்போது "எப்படிப் புளுகு!" என்று கேட்டுச் சிரிப்பார்.

என் மாமனார், பெரியதகப் பானர் எல்லோரும் கிருபானந்த வாரியாருடைய ரசிகர்கள், எனக்கு 10 வயதிருக்கலாம். வாரியார் யாழ்ப்பாணத்தில் மாதக்கணக்காக் தங்கியிருந்து ஊர்தோறும் பிரசங் கம் செய்துவந்தார். எங்கு பிரசங் கம் நடந்தாலும் மாமனார் என்னையும் கூட்டிச்செல்வார். (அப்பொழுது கேட்டதொன்றும் நினைவில்லை) ஆனால், 1954-1955 காலப்பகுதியில் வாரியார் செய்த விரிவுரைகளைக் கேட்டுக் குறிப் பெடுத்திருக்கிறேன். இன்று திரும் பிப் பார்க்கையில், அத்தகைய 'நாவன்மை, சந்த விகற்பங்கள்' என்னைப் பெரிதும் கவர்ந்த துண்மை. வாரியார் பேச்சு எனக்கு தமிழிலக்கிய அறிமுகம் ஆயிற்று என்று சொல்லவந்தேன். அடுத்த பின்னணி யாழ். இந்துக் கல்லூரிப் படிப்பு. அங்கேதான் வித்துவான் கார்த்திகேயனிடமும் ஏரம்பமூர்த்தி மாஸ்ரரிடமும், சிவராமலிங்கம் அவர்களிடமும் தமிழ்படிக்கக் கிடைத்தது. நல்ல கவிதையை என் காதில் போட்டுவைத்தார்கள் அவர்கள். எனக்கு ஆங்கிலம் கற்பித்த மு. கார்த்திகேசன் பொது வுடமைவாதி; மாபெரும் மனிதாபி மானி. வாழ்க்கையைப் பற்றிய என் நோக்கில் அவர் செல்வாக்கும் இருந்தே தீரும். நான் ஆசிரியத் தொழிலுக்கு வந்தபிறகு சந்தித்த மேதை கலாநிதி கு. சிவப்பிரகாசம். பெரிய பெரிய படிப்பாளிகளை யெல்லாம் சந்தித்திருக்கிறேன். சிவப்பிரகாசத்தைப் போன்ற ஒரு சிந்தனையாளன் ஒருவனை நான் கண்டதில்லை. என் பின்புலத்தில் இவர்களும் இன்னும் சிலரும் இருக்கிறார்கள்.

**★★ பழந்தமிழ் இலக்கியத்துடன் உங்களுக்கு ஈடுபாடு அதிகம்; புலமை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உண்டு. இவை தங்களின் கவிதை உருவாக்கத்தில் எப்படி உறுதுணையாகின்றன?**

நாம் சூனியத்திலிருந்து தோன்றியவர்களல்ல. நீண்டதோர் இலக்கிய மரபின் வாரிசுகள், சங்க இலக்கியம், நீதி நூல்கள், பக்தி இலக்கியம், நாட்டார் இலக்கியம், பாரதி என்றெல்லாம் பன்முகப்பட்ட தமிழ் இலக்கியத்தோடு ஓரளவேனும் பரிச்சயம் இருப்பது எனக்கு அனுகூலம். பழந்தமிழ் இலக்கியத்தில் காலூன்றி நிற்கிறேன். "என் பாட்டன் பார்த்த உலகம் ஒன்று. என் அப்பன் பார்த்த உலகம் வேறொன்று. பாட்டன் தோளிலும், அப்பன் தோளிலும் ஏறி நான் பார்த்த உலகம் பிறிதொன்று" நான் முந்தையர் தோள்களில் நிற்கிறேன். நீண்ட தூரம் தெரிகிறது.

**★★ இலக்கியம் படித்தவர்களால் தான் சிறந்த கவிதைகளைப் படைக்க முடியும் என்று சொல்லுகிறீர்களா?**

அல்ல. திருகோணமலைக் கவிராயர் என்று ஒருவர். ஒரு தொழிலாளி. அதிகம் படித்தவர் அல்ல. அநாயசமாகக் கவி பாடுவார். சு. வில்வரத்தினம் எவ்வளவு பெரிய படிப்பாளி என்பதை அவர் கவிதை சொல்லும். சு. வி. புதுக்கவிதைதான் எழுதுகிறார். அதற்குள் லயம் இருக்கும். செந்நெறிப்பாங்கான அவருடைய மொழியாட்சியை ரசிக்கிறவன் நான்.

**★★ தங்களின் கவிதைகளுக்கு அலாதியான வீச்சும், அழகும், மரபில் தோய்ந்த இறுக்கமும் இருப்பதாக நாம் கருதுகிறோம். இந்தப் புலமைப் பின்னணியையும், புதுக்கவிதை பற்றிய தங்களது கருத்தையும் சொல்லுங்கள்.**

மரபுவழி வடிவங்களையே நான் பெரிதும் கையாளுகிறேன். அவற்றினூடு சமகாலப் பிரச்சினைகளைச் சொல்வதில் எனக்குச் சிரமமில்லை. பழைய வடிவங்களில் பழைய செய்திகளையே சொல்லிக் கொண்டிருக்கும் பண்டிதர்களும் தோற்றுப் போகிறார்கள். மரபும் தெரியாமல், புதுக்கவிதையின் பண்பும் புரியாமல் சொற்றொடர்களை அடுக்கும் "பாமரர்களும்" தோற்றுப் போகிறார்கள்.

**★★ புதுக்கவிதைகள் பற்றி....?**

யாப்பு விதிக்கும் கட்டுப்பாடுகளை பொருட்படுத்தாதது புதுக்கவிதை. அலங்காரம் எதுவுமின்றி, புனைவு இன்றி, கவிஞன் தன் கருத்தை சுயம்புவாகத் தருவது புதுக்கவிதை எனலாம். பதுக்கவிதையாளர் உருவகங்களையும் படிமங்களையும் அடுக்குகிறார்கள். புதுக்கவிதை பற்றி என் கருத்தைக் கேட்கிறீர்கள். பண்டிதர்கள் பலர் எப்படி யாப்பு என்ற சட்டத்தை (Frame) வைத்துக்கொண்டு சொற்களை அடுக்குகிறார்களோ, அப்படியே பெரும்பாலான புதுக்கவிதைக்காரர்கள் சட்டகமின்றியும்- தெளிவான கருத்தின்றியும் - வெற்றுத் தொடர்களையே அடுக்குகிறார்கள். இரண்டுமே கவிதையில்லை.

**★★ கவிதை என்றால் என்ன?**

மிகச் சிறிய வடிவத்தில் அதிகம் சொல்லக்கூடியது கவிதை. கவிதை சொல்லும் செய்தியை விட சொல்லாத செய்தியே அதிகம். இதை, குறிப்பால் உணர்த்தும் உத்தி (Suggestion) என்பர். எல்லாவற்றையும் வெட்டவெளிச்சமாகச் சொல்லும் வேலையை உரைநடை செய்யும்; அதற்குக் கவிதை தேவையில்லை. செய்யுளைப் பலர் கவிதை என்று நினைக்கிறார்கள். நமது நிகண்டு, வாகடம் எல்லாம் செய்யுள்; கவிதை அல்ல. இளங்கோவும் பாரதியும் தருவதே கவிதை.

**★★ மரபு, புதுமை என்ற குரல்கள் இன்று வழக்கழிந்து போனாலும் ஒரு எல்லைக்குள் வரம்புகட்டி நிற்கும் மரபுக்கவிதைக்கு இருக்கும் வீச்சிலும் பார்க்க உடைத்துப் பீறிடும் புதுக் கவிதைகள், கவிஞனுக்கும் வாசகனுக்கு மிடையே நெருக்கமான உறவை ஏற்படுத்துவதாக சொல்லப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?**

முன்பே சொல்லிவிட்டேன்; மரபுக்கவிதை, புதுக்கவிதை இரண்டிலும் போலிகள் உள. மரபுக் கவிதைய விட புதுக்கவிதைக்கு




வீச்சு அதிகம் என்ற வாதத்தை ஒப்புக்கொள்ளமாட்டேன். "கல்வெட்டு" எழுதுபவர்களால் மலினமாக்கப்பட்ட அகவற்பாவில், புதுவை இரத்தினதுரை ஆற்றலுள்ள கவிதை தந்திருக்கின்றார். ("எழுக என் தங்காய், எழுக என் தங்காய்") கட்டுப்பாடுகள் மிகுந்த வெண்பா யாப்பில் முருகையன் "அது அவர்கள்" என்ற நெடும்பா பாடியுள்ளார். கட்டளைக் கலிப் பாவில் பாரதி "சுயசரிதை பாடியிருக்கிறான்; மகாகவி", "ஒரு சாதரண மனிதனது சரித்திரம்" பாடியுள்ளார். காமராசனும், மேத்தாவும், வைரமுத்துவும் தம் புதுக்கவிதைகளில் நிற்கிறார்கள். இப்பொழுது எழுதுபவர்களில் பசுவையா, கல்யாண்ஜி, மனுஷ்ய புத்திரன், பழைமலை வாசுதேவன், முரளீதரன் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். அதேவேளை கவிதைப் பண்பு எதுவுமில்லாத போலிகள் புற்றீசலாய் புறப்பட்டவண்ணம் இருக்கின்றன. வெற்றிபெற்ற புதுக்கவிதைகள் பல ஓசைநயம் வாய்ந்தவை.

"வாகைமரம் பூச்சூடும்
வயல்வரம்பை நெல்மறைக்கும்
மஞ்சள் வெயில் தெரியாது
மழைமுகில்கள் கவிந்துவரும்"

இது புதுக்கவிதை என்று நினைத்தால் ஏமாந்தீர்கள். இது யாப்பமைதி பேணும் மரபுக் கவிதை. கவிஞனுக்கும் வாசகனுக்கும் எப்படியும் நெருக்கமான உறவு இருக்கவே செய்யும். திருவாசகமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அருட்பாவும் காலம் கடந்து மக்கள் இதயங்களைத் தொட்டே வருகின்றன.

கவிஞன் - வாசகன் உறவுக்கு ஒரு பொதுவான தளம் வேண்டும். வாழ்க்கை பற்றிய கவிஞனுடைய நோக்கும் வாசகனுடைய நோக்கும் சந்திக்கையில் இந்த உறவு ஏற்படும். உதாரணமாக "மாநிலம் பயனுற வாழ்தல்" பாரதியின் நோக்கு. சாதாரண மனிதனின் மேன்மையைப் பாடுவது "மகாகவி"யின் நோக்கு.

**★★ கவிதையின் காலப்பணி....?**

● கவிஞர்கள் தீர்க்கதரிசிகளாகக் கொண்டாடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சமூகத்தில் தோய்ந்தும் தோயாமல் விலகியும் நின்று பார்க்கிறார்கள். (அவர்களுடைய உணர்வுகள் மிகவும் நுண்மையானவை.) அவர்கள் காலத்தின் குரலாய் ஒலிப்பார்கள்; பிறர் காணாததைக் காண்பார்கள்; பிறர் காட்டாததைக் காட்டுவார்கள்.

**ஆங்கில மொழிப்புலமை நிறைந்த தாங்கள், பிறநாட்டுக் கவிதைகள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளீர்கள். குறிப்பாக போராடும் தேசங்களில் புலர்ந்த கவிதைகளை அறிமுகம் செய்துள்ளீர்கள். அந்தக் கவிதைகளுக்கும் எமது கவிதைகளுக்குமுள்ள ஒப்பியல்புகளையும் வேறுபாடுகளையும் அறிய விரும்புகிறோம்?**

● ஆங்கிலம் வாயிலாக நான் பிறநாட்டுக் கவிதைகளைப் படிக்கிறேன். ஆங்கில இலக்கியம் ஆங்கிலேயர்களுடைய இலக்கியம் என்ற நிலை இன்றில்லை. ஆபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து வருபவையும் ஆங்கில இலக்கியம் என்ற அங்கீகாரம் பெறுகின்றன. இவற்றுள் என்னைப் பெரிதும் கவருவது ஆபிரிக்க இலக்கியமே!

**★★ அதற்கான காரணமென்ன?**

● ஆபிரிக்காவுக்கும், ஆசியாவுக்கும் பொதுவான அம்சங்கள் பல. புவியியல் அமைப்பில் இருந்து சமயம், சமூகக்கட்டமைப்பு, பண்பாடு என்பவற்றில் ஒற்றுமைகள் அதிகம். குடியேற்ற ஆட்சியின் கீழ் இருசாராரும் ஒரேவிதமான அனுபவத்தைப் பெற்றவர்கள். சொல்லப்போனால் ஆபிரிக்கர்கள் ஆங்கிலேய, பிரெஞ்சு, பெல்ஜிய வல்லாதிக்கத்தோடு மோதித் தம் தனித்துவத்தை இழந்திருக்கிறார்கள். அதை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இங்கே எமது தனித்துவத்தை, அடையாளத்தைக் காக்க ஒரு போராட்டம் நடக்கிறது. இந்நிலையில், ஆபிரிக்க இலக்கியம் எமக்கு எழுச்சி தரும், எம்மைத் தூண்டுமென்று நம்புகிறேன். நான் மொழிபெயர்ப்பதில் முக்கியமானவை ஆபிரிக்கக் கவிதையே!

வேறுபாடு பற்றிச் சொல்வதானால், ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சில் ஆபிரிக்கர்கள் எழுதுகிறார்கள். பலருக்கு அவை முதலாம் மொழிகள். இங்கே எமக்கு ஆங்கிலம் இரண்டாம் மொழிதான். அந்நிய மொழியில் தொடர்ந்து எழுதத்தான் வேண்டுமா என்று மாநாடுகளில் அலசுகிறார்கள். இதே கேள்வியை லக்தாஸ விக்கிரமசிங்க என்ற (ஆங்கில) கவிஞர் கேட்டிருக்கிறார்.

**தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு?**

● ஓம். சொல்ல மறந்து போனேன். எமது எழுத்துக்களை ஆங்கிலத்தில் பெயர்க்கும் வேலையும் எனக்கு உவப்பானதே. என் மொழிபெயர்ப்புக்கள் Journal of South Asian Liteature என்ற அமெரிக்க ஏட்டிலும், அண்மையில் வந்த Penquin "New Writimg in Sri Lanka" என்ற பெங்குவின் பதிப்பிலும் இடம்பெற்றுள்ளமை ஓர் அங்கீகாரம் எனலாம். யாழ். பல்கலைக்கழகம் வெளியிடும் "The Theird Eye" இல் சில மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்துள்ளன. மொழிபெயர்ப்பில், மூலத்தின் தனித்தன்மையில் ஒரு கூறு (பகுதி) போய்விடுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒன்று சொல்லவேண்டும்; நானோ மற்றவர்களோ செய்யும் மொழிபெயர்ப்புக்கள் போதுமானவை அல்ல. மிகச்சிலரே இத்துறையில் ஈடுபடுகிறோம். குறிப்பாக தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு.

**★★ கவியரங்கு காலாவதியாகி விட்டது என்ற குரல் சிலரால் அடிக்கடி எழுப்பப்படுகின்றது. தங்களைச் சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் இந்நாடு ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே இது பற்றிய உங்கள் கருத்தென்ன?**

● கவியரங்கு காலாவதியாகி விட்டது என்பது தவறு. கவிதை காதுக்கே உரியதாகத்தான் இருந்தது. ஏட்டில், அச்சில், படிப்பதற்குரியது என்ற நிலை வந்த பிற்பாடு, அதை வைத்துக்கொண்டு 'கவிதை கட்புலமாகிவிட்டது' என்று சிலர் கூறுகிறார்கள். "ஏன் எங்களுடைய காதுகளைக் கழற்றி வைத்து விட்டோமா?" என்று முருகையன் ஒருமுறை கேட்டார். அச்சில் இருந்தாலும் கவிதையை வாசிக்கும் போது மனசுக்குள் ஓர் ஓசை எழும். வெளியே ஒலிக்கவில்லை என்பதால் ஓசையில்லை என்பதாகாது.

கவியரங்கக் கவிதைகள் காதால் கேட்கப்படுபவை. அவற்றை ஓசை அழகுபடுத்தும். மிக இறுக்கமான நல்ல கவிதைகள் 'சப் ' என்று இருப்பதும் உண்டு. கலைஞர் மு. கருணாநிதியின் கவிதை இந்த வகை. கவியரங்கு என நான் எழுதும் கவிதைகளில் ஓசை நயம் இருக்கும். கேட்போரோடு உரையாடுவது போன்ற ஒரு நடையை நான் பின்பற்றுகிறேன். ஒரு கவியரங்கில் நான் கவிதை பாடிவிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமர்ந்ததும் கவிஞர் மு. பொன்றனம்பலம் சொன்னார்; "மகா கவியைப் போல இருந்தது" என்று. எனக்குக் கிடைத்த உச்சமான அங்கீகாரம் அது என நினைக்கிறேன்.

**★★ கவிதா நிகழ்வுகள் பற்றி ....?**

◉ நுஃமான் , சேரன் முதலியோர் 1981 அளவில் இந்தப் பரிசோதனையைச் செய்யத் தொடங்கினார்கள். ஒரு கவிதையை எடுத்து நாடகம் போலக் கூறுபோட்டு வாசிக்கும் புதுமையைத் தவிர அதில் வேறொன்றுமில்லை. ஒருவன் தன் கவிதையை தானே வாசிக்கும் போது அதில் தொனிக்கும் சத்தியம், விசுவாசம், personal tocuch இதில் இல்லை.... 'பார்க்க' வடிவாய் இருக்கும்!

**★★ நல்ல கவிஞன் சிறந்த பாடலாசிரியனாக முடியும். ஆனால் சிறந்த பாடலாசிரியன் நல்ல கவிஞனாக முடியாது என்ற கருத்துப்பற்றிய உங்கள் எண்ணம் என்ன?**

◉ மெத்தச்சரி. கவிதை எழுதினாலும் அதில் பண்பு இருந்தால் நம் நெஞ்சைத் தொடும். தாகூரின் கீதாஞ்சலி வசனம்தான்; கவிதையாய்த் தித்திக்கும். கண்ணதாசனுடைய புஷ்பமாலிகாவுக்கு கவிதையின் வீச்சு உண்டு. நல்ல கவிஞன் எழுதும் இசைப்பாவில் கவிதைப்பண்பு இருக்கும். வெறுமனே சொற்கூட்டமாக நிறையப் பேர் எழுதுகிறார்கள்; இசை கூட்டிப்பாடவும் செய்கிறார்கள்.

**★★ பாரதிக்குப் பின்னர் கவிதை எழுதாதவனே நல்ல கவிஞன் என்று சிலர் வாதாடுகின்றனரே!**

◉ பாரதி ஒரு யுகசந்தி. அவனுக்கு முன் வாழ்ந்த எந்தக் கவிஞனையும் விட விசாலமான பார்வை அவனுக்கு இருந்தது. கவிஞன் ஒரு தீர்க்கதரிசி என்று முன்பு சொன்னேனே. அது பாரதிக்கு அற்புதமாகப் பொருந்தும். ஆனால் பாரதிக்குப்பின் தமிழ்க்கவிதை வீழ்ந்துவிட்டது என்பதனை ஏற்றுக்கொள்ளமாட்டேன். பாரதிதாசன் சில அம்சங்களில் பாரதியை விஞ்சிவிடுகிறார். வேறுசில கொடுமுடிகளைத் தொட்டவர் நம் "மகாகவி".

**★★ தங்களைக் கவிதை எழுதத் தூண்டும் காரணிகளையும் 'கவிதை எழுது' என்று பிடித்துலுப்பலும் சூழ்நிலையையும் கூறமுடியுமா?**

◉ கவிஞனுக்கு, கலைஞனுக்கு கூர்ந்து நோக்கும் பண்பு அவசியம். தன்னைச் சூழ நடப்பவற்றால் முதலில் பாதிக்கப்படுபவனும், அதிகம் பாதிப்படைபவனும் கவிஞனாகத்தான் இருப்பான். படையினர் நயினை நாகபூஷணி தேரை எரித்து கோயிலுக்குள்ளே புகுந்து நகைகளை களவாடி, வழிபாடு செய்து கொண்டிருந்த பெண்ணொருத்தியையும் சுட்டபொழுது, நான் பாடியது "தாயின் மங்கல நாணை அறுத்தவன்" 1991ல் போர் தொடங்கியதும் கறுப்புச் சந்தைக்காரர் பொருட்களைப் பதுக்கி மக்கள் வயிற்றில் அடித்த போது "கறுப்புச் சந்தைக்காரர்களே!" போக்குவரத்துச் சீர்குலைந்த நிலையில் சைக்கிள் Taxi ஆகிவிட்டது. சிறுமியர் தம் அன்னையரைப் பின்னால் ஏற்றிக்கொண்டு சைக்கிள் ஓடுவது என் நெஞ்சைத் தொடும். "உன்னி உன்னி உழக்குகிறாய்" - அதன் விளைவு - இவை ஒருவகை.

அநாதரவாய் விடப்படும் பெட்டை நாய்க்குட்டிகள் என் மானுடத்துக்குச் சவால்விட நான் எழுதியது; "பெண்ணாய் எடுத்த பிறவி" என்னை உலுப்பும் எதுவும் என் கவிதைக்குப் பொருள் ஆகலாம்.

**★★ நூற்றுக்கணக்கான கவிதைகளை நீங்கள் எழுதிய போதும், இன்னும் தங்களது கவிதைகள் ஒன்றும் நூலுருப் பெறவில்லையே. இது ஏன்?**

◉ என் "பாடுகளை" அறிந்த நீங்களே கேட்கிறீர்கள். சொல்லத் தான் வேண்டும். விழித்தருக்கும் பொழுதெல்லாம் பணி செய்கிறேன். ஆங்கிலம் கற்பிக்கும் தொழில். பொதுப்பணிகள் சில. குடும்பப் பொறுப்புகள், இவற்றுக்கு அப்பால்தான் எழுத்தும் பேச்சும். கடந்த வாரம் ஒரு கல்லூரியின் ஆங்கிலத் தினத்திலும் மற்றொரு கல்லூரியின் தமிழ்த்தினத்திலும்



பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினேன். இந்த வாரமும் இரண்டு நூல்களுக்கு முன்னுரை எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஐந்து நூல்களைப் படித்து தரம்பிரித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு தந்திருக்கிறேன். என் சக்திக்கு மிஞ்சிய இப்பணிகளோடு மல்லாடுகையில் உதிரியாகக் கிடக்கும் கவிதைகளைத் தொகுக்க, செப்பனிட எது நேரம்? ஈராண்டாக ஒரு வெளியீட்டாளர் எனக்காகக் காத்திருக்கிறார்.

**★★ தமிழ்க் கவிதைப் பரப்பில் சுவடு அழிந்து போகாத கவிஞராக உங்களைக் கருதுகிறோம். இதை நிலைநிறுத்திக் கொள்ள நீங்கள் நினைத்திருக்கும் எதிர்காலப் பணி குறித்துக் கூறமுடியுமா?**

மனிதனுக்கு எப்போதுமே, தன் சுவட்டை விடடுப்போவதில் அக்கறையுண்டு. ஒரு கவிஞனாக நான் நினைவுகூரப்பட விரும்புகிறேன். நான் இதுவரை எழுதிய பலதரப்பட்ட கவிதைகளின் தொகுதி ஒன்றும், ஆபிரிக்கக் கவிதைத் தொகுதி ஒன்றும், இசைப்பாத் தொகுதியொன்றும் வெளியிட ஆசை. அதற்குமேல் வாழ நேர்ந்தால், சொபோகிளீஸ் இல் ஒன்றும், ப்றெஃக்ற் இல் ஒன்றுமாக இரு நாடகங்களை மொழிபெயர்ப்பேன். ஆபிரிக்க நாவல் ஒன்று தமிழுக்கு கொண்டு வரவேண்டும். அதற்கு மேலே... ஆழ்வார்களை, கம்பனை, திருவாசகத்தைப் படித்தபடி போய்விடவேண்டும் - சந்தடியின்றி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்னிந்திய சினிமாப் படங்களை ஏன் தடைசெய்யவேண்டும்?




**தென்னிந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் தமிழ் சினிமாப் படங்களை தடைசெய்வது பற்றி சமூகத்தின் பலதரப்பட்டவர்களுடனும் கலந்துரையாடிய போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகிறோம்.**

**தமிழகத்து தமிழ் சினிமாவை தமிழீழத்தில் தடைசெய்வது பற்றிய தங்கள் கருத்து என்ன?**

### பண்டிதர் வீ. பரந்தாமன் (வயது 50) ஆசிரியர்

சினிமா ஒரு ஆற்றல் வாய்ந்த கலை ஊடகம். அது செவி வழியாகவும் கட்புலனூடாகவும் ஒரே நேரத்தில் மக்களைச் சென்றடைகிறது. அத்துடன் அதிக மக்களை ஈர்க்கும் வடிவமும் சினிமாவே தான். இத்தகைய ஆற்றலுள்ள ஊடகம் ஒரு சிறிய இலட்சியப் போக்குடனும் கலை உணர்வுடனும் தொழிற்படுமானால் அதன் சிறப்பை சமூகம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் இன்றைய தமிழகத்துச் சினிமா ஏதாவது இலட்சிய இலக்குடன் செயற்படுகின்றதா? எனறால் இல்லை. மக்களுடைய கீழ்மட்டமான ஆசைகளுக்குத் தீனிபோட்டுத் திருப்திப்படுத்தி அவர்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் முயற்சியாகவே உள்ளது. எம்மைப் பொறுத்தவரை, பல வகையிலும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் மக்களின் மிக முக்கியமான உடனடித் தேவைகளுக்கு அப்பால் இந்தச் சினிமாக் கவர்ச்சி இட்டுச் செல்கிறது. இன்று யுத்தத்தினால் குழம்பிப் போயிருக்கும் மக்களுக்கு ஒரு மனச்சுமை இறக்கமாக இந்தச் சினிமா அமையும் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் இது அந்த வேலையைச் செய்வதிலும் பார்க்க அவர்களை வேறு திசையில் திருப்பி மேலும் சீரழிக்கிறது. இதை நோக்கும் போது, முன் குறிப்பிட்ட நியாயம் பொருத்தமற்றுப் போகிறது. வேண்டுமானால் மக்களுக்குரிய இலட்சியத்தைக் குறிக்கும் படங்களை நாம் தயாரிக்கவேண்டும். இந்த முயற்சி இன்று நடந்து வருகின்றது. உண்மை வாழ்வைப் பிரதிபலிப்பதாகவே எந்தக் கலை ஊடகமும் இருக்கவேண்டும். அதுவே சிறந்த கலையின் தொழிற்பாடுமாகும். ஆனால் தமிழ் சினிமா என்பது தமிழக மக்களின் வாழ்வையோ அல்லது உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களின் உண்மை வாழ்வையோ பிரதிபலிப்பதாக என்றுமே இருந்ததில்லை. எனவேதான் இவ்வாறான சினிமா எமக்கு அவசியமற்றுப் போகிறது. ஆகவே இந்தச் சினிமாவைத் தடைசெய்வது பற்றி மகிழ்ச்சிதான் ஏற்படுகின்றது.

❋

### திரு. த. செல்வரத்தினம் (வயது 45) விவசாயி, புத்தூர்.

ஜீரணிக்க முடியாத அளவுக்கு இந்தச் சினிமாவில் ஆபாசம் நிறைந்துள்ளது. சுருக்கமாகக் கூறுவதானால் இளைய தலைமுறையை இந்தப் படங்கள் சீரழிக்கின்றன. அவர்களின் எதிர்காலத்தையே பாழாக்குகின்றன. எமது மண்ணில் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதியுன்னதமான போராட்டத்தை உணர்ந்துகொள்ள முடியாதவாறு சிந்தனையை மழுங்கடிக்கிறது இந்தச் சினிமா. எனவே இந்தச் சினிமாவைத் தடை செய்வது வரவேற்கவேண்டியதே. எங்கள் போராட்டச் சூழ்நிலையில் மிச்சப்படுத்தவேண்டிய பொருளாதாரம் இந்தச் சினிமா மோகத்தின் மூலமாக வீண்விரயம் ஆக்கப்படுகின்றது.

❋

### செல்வி தி. ஜீவராணி (வயது 26) தட்டச்சாளர், நீர்வேலி.

மிக் மோசமான நிலையில் தமிழ்ச் சினிமா சென்றுகொண்டிருக்கிறது. அதைப் பொதுவாகப் பார்க்கமுடியவில்லை என்றே சொல்லலாம். தரக்குறைவான பாடல்கள், மோசமான பாடல்கள், நம்பமுடியாத கதையமைப்பு என்பவற்றுடன் நமது சூழலைச் சீரழிக்கின்ற எல்லாத் தன்மையையும் இந்தச் சினிமா கொண்டுள்ளது. கலாச்சாரச் சீரழிவு கூட இந்தச் சினிமாவினால் ஏற்படுகின்றது. அனேகமாக இளந் தலைமுறையினர், குறிப்பாக மாணவர்கள் இந்த மாயையில் சிக்கித் தம்மை அறியாமலே சீரழிகின்றனர். இப்படி இருக்கும் போது தென்னிந்திய

> **"தமிழ் சினிமா என்பது தமிழக மக்களின் வாழ்வையோ அல்லது உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்களின் உண்மை வாழ்வையோ பிரதிபலிப்பதாக என்றுமே இருந்ததில்லை."**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சினிமா எமக்குத் தேவையில்லை என்றே சொல்லலாம்.

❀

**திரு. வ. வசந்தகுமார் (வயது 21) அளவெட்டி.**

தென்னிந்தியச் சினிமாப் படங்கள், சுருக்கமாகச் சொல்லப் போனால் ஒரு கிருமி நாசினி வகையினை ஒத்ததாகவே கருத வேண்டும். ஏனெனில், எமது மண்ணில் எத்தனையோ இடர்கள் சூழ வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களை தனது கவர்ச்சியன்பால் ஈர்த்து, கவர்ந்து கொண்டதோடு மட்டுமன்றி, அவர்களின் மனோ ரீதியிலான மாற்றத்திற்கும், நடப்பியலுக்கும், எதிராகவே செயற்பட்டு, அவர்களை எதிர்காலத்தின் கீழ்நிலைக்கு வழிநடத்திச் செல்கிறது. சினிமா என்கின்ற போதைக்கு, மக்களில் வயது வேறுபாடின்றி எல்லாத் தரத்தினரும் அடிமையாகி, சினிமாவின் மாய உலக கற்பனையிலும் போலியி

> **"எழுச்சியும், தியாகமும் நிறைந்து நிற்கும் இந்தப் போராட்ட காலத்தில் மக்களின் மனத்தினை ஊடறுத்துச் சென்று, மிகவும் கீழ்த்தரமான நம்பகமற்ற வாழ்நிலைக்கு ஊன்று தளமாக இந்தச் சினிமா இயங்குகின்றது."**

லும் தங்கி வாழும் மன நிலையில் மக்கள் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது. எழுச்சியும், தியாகமும் நிறைந்து நிற்கும் இந்தப் போராட்ட காலத்தில் மக்களின் மனத்தினை ஊடறுத்துச் சென்று, மிகவும் கீழ்த்தரமான நம்பகமற்ற வாழ்நிலைக்கு ஊன்று தளமாக இந்தச் சினிமா இயங்குகின்றது. எனவே இந்த சினிமா மோகத்தில் இருந்து விடுபட்டு, உண்மையான உணர்வுகளை நேசித்துணர்ந்து கொண்டு வாழ்ந்து வெற்றிபெற, இந்த கீழ்த்தரச் சினிமா ரசனையை அகற்ற, தென்னிந்திய சினிமாப் படங்களை தடைசெய்வது மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாகும்.

❀

**பேராசிரியர் அ. சண்முகதாஸ் யாழ். பல்கலைக்கழகம்**

தரமற்ற தமிழ்ச் சினிமாப் படங்களை தடைசெய்வதிலே எவ்வித பிழையுமில்லை. அந்நியருடைய ஆட்சியாலும் பண்பாட்டினாலும், நாம் எம்முடைய பண்பாட்டின் எத்தனையோ கூறுகளை இழந்து நிற்கிறோம். இந்நிலை இனியும் ஏற்படா வண்ணம் எம்முடைய சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும். வர்த்தக நோக்கு ஒன்றையே மனத்திற்கொண்டு மலினப்பட்ட உணர்வுகளுக்குத் தீனிபோடும் பல தமிழ்ப் படங்கள் விரைவாகவும் பெருந்தொகையாகவும் தயாரிக்கப்படுகின்றன. பொதுமக்கள் பொழுதுபோக்கை விரும்புபவர்கள். இதனைப் பயன்படுத்தி இத்தகைய திரைப் படங்களைத் தயாரிக்கின்றார்கள். இவற்றால் மக்கள் தங்களை அறியாமலே தங்கள் மனம் பழுதடைய வைத்துவிடுகிறார்கள். எப்படி ஒரு தாய் பிள்ளையைக் காப்பாற்ற முயலுவாளோ, அது போலவே மானிட நேயமுள்ளவர்கள், எம்முடைய பண்பாட்டுப் பாரம்பரியத்தை நன்கு உணர்ந்தவர்கள், எங்கள் மக்களைத் தரமற்ற, சீரழிவு மிக்க தமிழ்ப் படவுலகிலிருந்து மீட்க விரும்புகின்றனர். இதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

❀

**திரு. சு. மகேந்திரன் (வயது 47) ஆசிரியர், சண்டிலிப்பாய்.**

தடைசெய்வது சரியானது என்றுதான் கூறவேண்டும். மிக முக்கியமாக எங்கள் போராட்டச் சிந்தனை மழுங்கடிக்கப்படுகின்றது. இளம் சிறார்களினதும், இளைஞர்களினதும் சிந்தனை பல திசைகளிலும் செல்கிறது. சினிமா என்ற நல்ல ஊடகம் பற்றிய தவறான மதிப்பீட்டை தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் தருகின்றன. இவை ஏனைய நல்ல படங்களை நிராகரிக்கும் மனப்பாங்கை உருவாக்குகின்றன. உதாரணமாக 'காற்று வெளி' இங்கே மிக அண்மையில் தயாரிக்கப்பட்ட 'இனி' என்ற படம் போன்றவை மிகத் தரமானதாக இருந்தும்கூட ஆர்வமுடன் ரசிக்கும் மனநிலையில் சிலர் இருக்கவில்லை என்பதை அந்தப் படங்களைப் பார்க்கும் போது அவதானிக்க முடிந்தது.

❀

**திரு. செம்பியன் செல்வன் (வயது 48) எழுத்தாளர்**

தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட தடை என்பது திடீரென்று ஏற்பட்டதொன்றல்ல. தணிக்கை என்ற பெயரில் தடைக்கான முன்னாயத்தங்கள் செய்யப்பட்டன. தென்னிந்தியப் படங்களில்

> **"சினிமா என்ற நல்ல ஊடகம் பற்றிய தவறான மதிப்பீட்டை தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்கள் தருகின்றன"**

முக்கியமாக இடம்பெறுவதென்ன? பாலியல், வன்முறை, இரட்டை அர்த்த வசனம், ஆபாச உணர்வினைத் தூண்டும் ஒலி, ஒளிப்பதிவுகள், யதார்த்தத்துக்கு மாறான சம்பவத் திணிப்புகள் என்பவற்றிற்கும் மேலாக தமிழீழத்தில் நிகழும் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வசனங்களும், (கிளைமாக்ஸ்) உச்சக்கட்டங்களும் இத்தடையை நியாயப்படுத்துவன. இன்றைய நிலையில் ஒரு பகுதி இளம் சந்ததியினர் பொறுப்பற்றவர்களாக படம் பார்த்து தம் காலத்தையும், வாழ்வையும் சீரழிக்கும் போக்கு காணப்படுகின்றது. இந்த நிலையை வளர்க்கவும், போராட்ட முனைப்பினை மழுங்கடிக்கவும் அரசு 'மண்ணெண்ணெய்' விலைக் குறைப்பினையும், தடைநீக்கத்தினையும் பயன்படுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முனைகிறது. தென்னிந்தியத் தமிழ் திரைப்படங்களில் எங்களது கலை உணர்வையோ, தொழில் நுட்பத்தினையோ வளர்ப்பதற்கான எந்த விதமான அம்சங்களும் இல்லாத நிலையில் 'வீடியோ கசெற்' மூலம் தமிழீழப்பணம் தென்னிலங்கை நோக்கிச் செல்வதும் இதனால் தடைப்படுவது வரவேற்கத்தக்கது.

❀

**ஓவியர் தயா**
**(வயது 26)**

உற்பத்தியாகும் இடத்திலேயே தணிக்கை சம்பந்தமான விழிப்பு ஏற்பட்டிருக்கும் நிலையில், இங்கு தடைசெய்வது சம்பந்தமான நிகழ்வு மகிழ்ச்சியளிக்கும் சங்கதியாகவே உள்ளது. யதார்த்தத்திற்குப் புறம்பான வெறும் கற்பனாவாதத் தன்மையுடன் வெளிவரும் தென் இந்திய வர்த்தக நோக்கு சினிமாப் படங்கள் மக்களிடையே பலவித சீரழிவுகளை விட்டுச் செல்கின்றன. வியாராரத்தைப் பிரதான இலக்காகக் கொண்டு தயார்செய்யப்படும் இப்படங்கள் மக்களைக் கவருவதற்காக எந்தெந்த விதிமுறைகளை கையாள முடியுமோ அவற்றை எல்லாம் கையாளத் தயங்குவதில்லை. அவை ஆபாசக் காட்சிகளாகவோ, வேறு வன்முறைக் காட்சிகளாகவோ இருக்கலாம். இவையெல்லாம் மக்களின் மனங்களில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதற்கான தூண்டலை வழங்குகின்றன. இது இறுதியில் பெரும் பண்பாட்டுச் சீரழிவிற்கு வழிவகுக்கும் என்பது தெளிவான விடயம். இவை தவிர, எமது போராட்டம் முனைப்புடன் நடைபெறும் தற்போதைய காலத்தில் மக்களின் போராட்ட உணர்வைச் சிதைத்து திசை திருப்புவதற்கும் தென்னிந்திய சினிமா துணை போகின்றது. இவ்வாறாக நச்சு விதைகளைத் தூவும் தென்னிந்திய சினிமா மீதான தடை அவசியமும் அவசரமானதும் கூட. இவற்றுடன் இதே தன்மையான வேற்று மொழிப் படங்களையும் தடை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

# கேள்வி - பதில்

**ஜீவா - பாரிஸ்.**

**★★ தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலிருந்து தமிழீழ அறிஞர்களை வெளியேற்றியது தமிழ்நாட்டு அரசா? மத்திய அரசா? ஏன்? என்று கூறுவீர்களா?**

✱✱ மத்திய அரசு யார் யார் என்று அடையாளம் காட்ட மாநில அரசு வெளியேற்றியது என்ற விடயம், வெளியேற்றம் தொடர்பான ஆவணத்திலேயே உள்ளமை குறிப்பிடத் தக்கது.

தமிழீழ அறிஞர்களையும், வெளிநாட்டு அறிஞர்கள் சிலரையும் அவை புலி ஆதரவாளர்கள் என்று கருதுவதே. தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழீழ ஆதரவு மாநாடாக மாற்றம் அடைந்துவிடுமோ என்று அவை பயந்ததும் இன்னொரு காரணம்.

**தாஸ் - பாரிஸ்.**

**★★ பீற்றர் சால்க் அவர்களையும் திருப்பி அனுப்பக் காரணம் யாது?**

✱✱ அவரும் புலி ஆதரவாளர் என்று அவை கருதியதே. ஆனால் தான், மாவீரர் தியாகம் பற்றியும், தமிழீழப் பெண்கள் பற்றியும், தமிழ் பௌத்தம் பற்றியும் ஆராய்வதை மட்டுமே செய்வதாகத் தெரிவித்துள்ளார்.

**கிருஷ்ணகுமார் - சுவிஸ்.**

**★★ இந்திய அரசு எமது பிரச்சினையில் தற்போது எவ்வாறான அணுகு முறையைக் கொண்டிருக்கின்றது என்று கூறுவீர்களா?**

✱✱ சமாதானப் பேச்சுவார்த்தையில் வெளியரங்கமாக தனது அங்கீகாரத்தை வழங்குவது போலவும், உள்ளரங்கத்தில் விடுதலைப் போராட்டத்தையும், அதன் தலைவர்களையும் அழிநத்து நசுக்க சதிநாச வேலைகளில் ஈடுபடுதாகவும் அதன் செயற்பாடு அமைந்துள்ளது.

**மகேஸ்வரன் - பாரிஸ்.**

**★★ உண்மையில் தமிழாராய்ச்சி மாநாடு என்பது அரசியல் கலப்படம் இல்லாத வகையில் எப்படி இடம்பெற வேண்டும்?**

✱✱ அரசியல் கலக்காத விடயம் உலகில் எதுவும் இல்லை. ஆனால், குறுகிய நோக்குடைய அரசியல் குறுக்கிட்டுக் குழப்பாமல் பார்த்தல் வேண்டும். அதேவேளை, தமிழ் தேசிய விடுதலை இன்றேல் தமிழ் வளர்ச்சியும் இல்லை என்ற உண்மையையும் நாம் உணர வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## மதிப்பீட்டுரை

# அடேல் ஆனின் "உடையாத விலங்குகள்"

# UNBROKEN CHAINS

- ADELE ANN -




**"இது ஒப்பனைகளை ஒத்தியெடுத்த யாழ்ப்பாணத்து உண்மை முகம்"**

**நிலாமகள்**

பெண் அடிமைத்தனத்தின் உடைபடாத விலங்காக யாழ்ப்பாண சமூக அமைப்பில் புரையோடிப்போயிருக்கும் சீதன முறைமையை தோலுரித்துக் காட்டும் ஒரு நூல் ஆங்கிலத்தில் வெளிவந்திருக்கின்றது.

'அடேல்' எழுதிய இந்தச் சமூக ஆய்வு நூல், சீதன முறைமையின் குரூர முகத்தையும், அதன் தோற்று வாய்களையும் துல்லியமாகப் புட்டுக்காட்டி - நீண்ட நெடுங்கால மாகவே எமது சமூகத்தில் நிலவி வரும் ஒரு சமூக அநீதியை விளக்கிக்கூறுகின்றது.

நிலப்பிரபுத்துவ சொத்துடமை யின் அறுபடாத வேராக நிலைத்து நிற்கும் பொருள் உறவுகளுடனும் - சாதியத்துடனும்; சீதன வழக்கம் பின்னிப்பிணைந்து கிடப்பதை சுட்டிக்காட்டும் நூலாசிரியை அதனை பெண் அடிமைத்தனத் தின் அசிங்கமான முகமாக விளக்க முனைகிறார்.

'உடையாத விலங்குகள்' என்ற இந்த நூல் இரு பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

முதலாவது பகுதி தேசவழமைச் சட்டம் பற்றியும், அதில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கும் தாய் வழிச்சொத்துடமை பற்றியும், இந்தச் சொத்துடமை கை மாற்றப் படும் வழிமுறைகள் பற்றியும் விபரிக்கின்றது.

இரண்டாவது பகுதியில்; சீதன முறைமையின் இன்றைய நடை முறைகள் பற்றியும், அது தமிழ்ப் பெண்களின் சமூக வாழ்வை எவ்வாறு பாதிக்கின்றது என்பது பற்றியும் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது.

யாழ்ப்பாண சமூகத்தின் சமூக வாழ்வைத் தீர்மானிக்கும் ஒரு நிர்ணயசக்தியாக - நீண்ட காலமா கவே - தேசவழமைச் சட்டம் இருந்து வருகின்றது. சமூகத்தின் பாரம்பரிய சம்பிரதாயங்களாக இருந்து வந்த வழமைகளைத் தொகுத்து தேசவழமைச்சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டத் தொகுப்பாக ஒல்லாந்தர்கள் உரு வாக்கிய வரலாறு பற்றி 'ஆன்' விபரிக்கிறார். இந்தச் சட்டத் தொகுப்பை ஆராயுமிடத்து நிலப் பிரபுத்துவ அம்சங்களும்- சாதிய உறவுகளும் பின்னிப்பிணைந்த ஒரு சிக்கலான பொருளாதாரக் கட்ட மைப்பைக் காணக்கூடியதாக இருக் கின்றது என்று 'ஆன்' கூறுகின்றார்.

சாராம்சத்தில் இந்தத் தேசவழ மைச் சட்டம் சொத்துடமை பற்றி யது. சொத்துடமையின் அடிப் படையில் எழும் சொத்துரிமைகள் பற்றியது. தேசவழமைச் சட்டத்தை நுணுக்கமாக ஆராயும் 'ஆன்' இந்தச் சட்டம் ஓரளவுக்கு பெண்க ளுக்கான சொத்துரிமையை நிலை நாட்ட முனைகின்றது என்கின்றார். இந்தவகையில் இந்தியாவில் தோன்றிய 'இந்து' சட்டங்களைவிட தேசவழமைச் சட்டத்தில் பெண்க ளுக்கு குறிப்பிட்டளவு சொத்துரி மைப் பாதுகாப்பு இருக்கின்றது என்பதை 'ஆன்' ஒத்துக்கொள் கின்றார். ஆயினும் தேசவழமைச் சட்டத்திலுள்ள சில விதிகள் பெண்ணின் சொத்துரிமை மீது ஆணின் அதிகாரத்தைத் திணிக்க முயல்கின்றது. பெண்ணின் சொத்தை நிருவகிக்கும் பொறுப்பை தேசவழமைச் சட்டம் ஆணுக்கே வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் கணவனின் சம்மதமின்றி மனைவி தனது சொத்தை பராதீனப்படுத்த முடி யாது என்று சட்டம் சொல்கின்றது. இவ்விதம் தேசவழமைச் சட்டம் யாழ்ப்பாணத்துப் பெண்ணின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொத்துரிமைக்கு விலங்கிடுகின்றது. இந்தவகையில் தேசவழமைச் சட்டம் ஆண்மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயல்வதாக 'ஆன்' கூறுகின்றார். இந்த அநீதியான சரத்தை தமிழீழ நீதிநிர்வாகத் துறையினர் சமீபத்தில் நீக்கியுள்ளதையும் 'ஆன்' பாராட்டுகின்றார்.

ஒரு சமூகத்தின் .கருத்து நிலையில் அச்சமூகத்தின் சட்டங்களும் கணிசமான அளவில் தாக்கங்களை விளைவிக்கின்றன. இந்தவகையில் தேசவழமைச் சட்டம் யாழ்ப்பாணச் சமூகத்தின் கருத்துநிலையை ஊடுருவி நிற்கின்றது. பெண்களின் தகமை, அவளின் உரிமை பற்றிய பழமைவாதப் பார்வைகள் இச்சட்டத்தில் பொதிந்து கிடப்பதால் இச்சட்டம் சமூக உறவுகளில் சமத்துவமற்ற தன்மையையும் - ஆண் ஆதிக்கத்தையும் நியாயப்படுத்த முனைகின்றது என்று 'ஆன்' விமர்சிக்கின்றார்.

"சீதனமுறைமையும் பெண் ஒடுக்குமுறையும்" என்ற தலைப்பின் கீழான இரண்டாவது பகுதி இன்றைய யாழ்ப்பாணத்தில் நிலவும் மிகவும் மோசமான சீதனவழக்க முறைமையை எடுத்து விளக்குகின்றது.

அரச ஒடுக்குமுறையால் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவுகள் ஒருபுறமும், இளைஞர் தலைமுறை ஒன்று பெருமளவில் நாடுபெயர்ந்ததால் எழுந்த சூழ்நிலை மறுபுறமுமாக சீதனக்கொடுப்பனவில் 'டொனேசன்' என்ற ஒரு புதிய அம்சம் தலைதூக்கியுள்ளது. இது காரணமாக தாய்வழிச் சொத்தாக பெண்ணுக்குச் சேரும் சொத்துடமை ரொக்கப் பணமாக மாற்றமடைந்து மணமகனுக்கும் அவனது உறவுகளுக்குமே நேரடியாகப் போய்ச்சேருகின்றது. இது தேசவழமைச் சட்டத்தின் வாயிலாக பெண்ணுக்கு ஓரளவுக்கேனும் இருந்த சொத்துரிமையை இல்லாமல் செய்வதுடன் பெண்களை, ஒட்டுமொத்தமாக, பிடிமானமற்ற தங்குநிலைக்குத் தள்ளிவிடுகின்றது. இந்த டொனேசன்களின் உச்சவரம்பு உயர்ந்து செல்வதால் பணவசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த பெருந்தொகையான பெண்கள் திருமணபந்தத்தை காணமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும் 'ஆன்' சுட்டிக்காட்டுகின்றார்.

சீதனத்தோடு பிணைந்து நிற்கும் பேச்சுத்திருமண முறையையும் 'ஆன்' சாடியுள்ளார். பேச்சுத் திருமண ஒழுங்கில், அனேகமாக,



"சீதன முறைமையை ஒழிப்பதற்குப் பரந்துபட்ட பெண்சமூகம் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்காக புரட்சிகரமான வேலைத்திட்டங்கள் செயல்ப்படுத்தப்பட வேண்டும்"

பெண்களுக்கு, தெரிவுசெய்யும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பெண்ணின் சொந்த விருப்புகள் - வெறுப்புகளுக்கு அப்பால் அவளது எதிர்கால வாழ்க்கையை மற்றர்வர்கள் நிர்ணயித்துவிடுகின்றனர். பல்வேறு அழுத்தங்களுக்குப் பணிந்துபோக அவள் நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். இந்தப் பேச்சுத் திருமண முறையில் சீதனம் மட்டுமன்றி சாதியம் - சாஸ்திரம் - அந்தஸ்து - அழகு இப்படியான பல்வேறு கட்டுக்களுக்குள் பெண் உரிமை முடக்கப்படுகின்றது. படித்த தொழில்புரியும் பெண்களும் கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்றும் 'ஆன்' விமர்சிக்கின்றார்.

தமிழ்ச்சமூகத்தில் பெண்களின் வாழ்நிலைத் துன்பங்கள் பற்றி விபரித்துச் சொல்லும் 'ஆன்' உலகெங்குமுள்ளது போல இங்கும் பெண்கள்புரியும் வீட்டுவேலையின் பெறுமானம் கருத்தில் கொள்ளப் படுவதில்லை எனச் சொல்கின்றார்.

வீட்டுவேலையில் செலவாகும் பெண்களின் தொழிலாக்க சக்தி குடும்ப பொருளாதாரத்திற்கு ஆதாரமானது என விளக்கும் 'ஆன்' வேலைபார்க்கும் பெண்கள் வீட்டிலும் வேலைபார்த்து இரட்டிப்புத் தொழிற் பளுவை சுமந்து நிற்பதாக சொல்கிறார்.

இறுதியாக, தனது முடிவுரையில், பெண்ணின் சொத்துரிமை சட்டரீதியாக பாதுகாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்துகின்றார். சீதன முறைமையை ஒழிப்பதற்குப் பரந்துபட்ட பெண் சமூகம் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். அதற்காக புரட்சிகரமான வேலைத்திட்டங்கள் செயல்ப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறார்.

எமது சமூகத்தில் சீதனப் பிரச்சினை கூர்மையடைந்து நிற்கும் இவ்வேளையில் இப்பிரச்சினை தொடர்பாக மிகவும் ஆழமான பார்வையுடன் இந்நூல் வெளிவந்திருக்கின்றது. சமூகவியல் பார்வையுடனும் பெண்ணிய நோக்குடனும் இந்த மதிப்பாய்வைச் செய்துள்ள 'ஆன்' சிந்தனையைத் தூண்டும் பல கருத்துக்களை இந்நூலில் முன்வைத்திருக்கின்றார். சீதனக் கொடுமைக்கு எதிராக போர்க் குரல் எழுப்பப்பட்டுவரும் இந்தப் போர்க்கால சூழலில் இப்படியானதொரு படைப்பு வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது.

கண்ணைக்கவரும் அட்டை இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றது.

எமது சமூகவியலாளர்கள் இதுவரை தொடாத அல்லது தொட விரும்பாத ஒரு சர்ச்சைக்குரிய சமூக நடப்பியலை நூலாசிரியை துணிவுடன் ஆய்வுக்குட்படுத்தியது பாராட்டுக்குரியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விடிவு

விடிவுதனை அறிவிக்கும்
வெண்கலத்து மணியோசை
தமிழீழத் தெருவெல்லாம்
தேனிசையாய்த் தூறுதடி.

படிப்படியாய் எம்பிணிகள்
பார்வியக்கப் பணிந்தாறித்
தமிழீழம் மலரும்நாள்
தேடியெமை நாடுதடி.

சமூகத்தைச் சீரழித்த
சாதிகளும் சீதனமும்
ஈழத்தை விட்டகன்று
இடுகாட்டில் வேகுதடி.

பெண்ணினத்தார் நாங்கள்
பெருமையுடன், சமமாகத்
தன்மானம் போற்றிவரத்
துணைவிதிகள் விரியுதடி.

பாலைவனம் போலிருக்கும்
பிரதேசம் முன்னேற
ஆலைகளைக் கட்டுவதும்
அண்ணன்மார் எண்ணமடி

ஆழ்கடலில் மீன்பிடித்து
ஆயிரம்கோடி பொன்கள்
சேகரித்தெம் ஈழமதைச்
சீரமைப்புச் செய்வமடி.

விஞ்ஞானத் தொழிற் பொறிகள்
வீட்டினிலே பூட்டிசைத்து
அம்மாமார் தொல்லைகளை
ஆற்றிடுவோம் வாருமடி

தமிழீழம் தன்னிறைவு
தான்பெற்று மேதினியில்
சிறப்புற்று மேலும்
செழிப்பதுவும் திண்ணமடி.

புதுயுகத்தை தோற்றுவித்த
பெரியண்ணா, மாமாக்கள்,
அண்ணன்மார், அக்காக்கள்
ஆண்டவரின் தூதரடி!

கோமதி
இங்கிலாந்து

(2ம் பக்கத் தொடர்ச்சி )

### அக்கறைப்பூக்கள்...

களிடம் வேகமான தாக்கத்தை ஏற் படுத்தி வருகின்ற நமது புரட்சிப் பாடகர் தேனிசை செல்லப்பா நமெக்கெல்லாம் பெரும் வாய்ப்பாக நினைத்து பெரும் மகிழ்ச்சி அடையவேண்டும்.

அவர்களுக்கு உலகத்தில் வாழும் தமிழர்கள் எல்லாம் வாழ்த்தவும் பாராட் டவும் கடமைப்பட்டவர்களே!

வாழ்க அவர் பணி! வெல்க தமிழீழம்!

அன்புடன்
தமிழ்ச்செல்வன்

பேரன்பின் இனிய தோழருக்கு, வணக்கம்!

உலகத் தமிழினத்திற்கு முகவரியை வரைந்துகொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் உண்மைச் செய்திகளைத் தாங்கி உணர்ச்சிப் பிழம்பாய் வெளிவந்து கொண்டிருக்கும் 'எரிமலை'யின் ஐப்பசி, கார்த்திகை மாத இதழைப் படித்தேன்.

"தமிழீழத்தில் எல்லாமே தூய தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டு வருகின் றன. இதற்கென விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகம் செயல்படுகிறது" என்ற செய்தியால் உள்ளம் பெருமகிழ் வெய்துகிறது.

"ஒரு மொழி ஓரினம் கொண்டதோர் நாடு" என முழங்கிய புரட்சிப் பாவலர் உள்ளிட தனித்தமிழ் அறிஞர்கள் பலரும் தோன்றி தூயதமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றினாலும் முழுப்பயன் இல்லை. தூயதமிழை நடைமுறைப்படுத்த தன் வாழ்நாள் எல்லாம் உணர்வு கொளுத்தும் பாக்களால் உழைத்த பாவேந்தரின் நூற்றாண்டு விழா முடிந்த பின்னும் கூட தமிழகத்தில் ஒரு விளைச்சலுமில்லை. தமிழகத்தை ஆளும் ஆதிக்கப் பார்ப்பனச் சாதியினரால், தமிழகப் பள்ளிகளில் கிழமைக்கு இரு நாட்கள் முழுச்செயல்பாடும் ஆங்கிலத் திலேயே நிகழ்த்தவேண்டும் என்று அரசாணை.

தவறியும்கூட தமிழ் பேசக்கூடாது அந்த இரு நாட்களில். மீறினால் தண்டனை. இப்படிப்பட்ட வெட்கங் கெட்ட சூழலில் யாம் வாழ்ந்து வருகிறோம்.

ஈழத்தின் செய்திகளைக் காணும் போது எம் தலை நிமிர்கிறது. போர்க் கோலம் பூணும் ஆசை மிகுகிறது. ஈழத்தில் பிறக்கவில்லையே என்ற ஏக்கம் எழுகிறது. ஆனாலும்.... தமிழனாகப் பிறந்ததிலே பெருமகிழ்வு சுரக்கிறது.

94, கார்த்திகை இதழில்....

தோழர் சக்தி அவர்களின் ஓவியம் கண்டேன். தனது சின்ன அகவையிலே..., தமிழக மண்ணில் தனது ஓவியத்தின் மூலமாக தமிழ் மொழி - இன - நாட்டு விடுதலை உணர்வை ஊட்டிவரும் தோழர் சக்தியை உலகுக்கே வெளிப் படுத்திய தங்கட்கு எம் உள்ளார்ந்த நன்றி.

எத்தனை இடர்வரினும் கடுகத்த னையும் எம் தாயக உரிமை மீட்புப் பணிக்கே! என்றெண்ணி, புதிய 'புலிநானூறு' படைத்துவரும் புலிகளின் வீரியம் மிக்க போர்த்திறத்தால்... எம் தாயக விடுதலைக்காக யாமும் புத்தெழுச்சி பெறுகிறோம்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்குகின்ற - தமிழ் மொழி இன, நாட்டு விடுதலையுணர்வை உள்வாங்கிக் கொண்டு வீறுநடைபோடுவோம்.

மலரட்டும் தமிழீழம்

தோழமையுடன்
தமிழவேங்கை

பெருமதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

தற்செயலாக எனக்கு தங்கள் கார்த்திகை மாத எரிமலை கிடைத்தது. உலகில் தமக்கோர் சொந்த நாடு இல்லாமல் அடிமைத் தளத்தில் உழலும் எம் இனத்திற்குரித்தான சுதந்திரப் போர் ஒன்று நடைபெறுகிறது. தமிழினமாகிய நாம் இதை உணர்ந்துகொண்டு போராட்டத்திற்கு உரமூட்டவேண்டியது கட்டாயமாகும். எமது கலை கலாச்சார பழக்கவழக்கங்களை நிலைநிறுத்திக் காப்பதற்கும், தாயகமண்ணின் நிகழ்வை அறிவதற்கும், பல்வேறு மட்டத்திலும் சிதறியுள்ள தமிழினத்தை ஒன்றிணைப் பதற்கும் எரிமலை ஓர் வரப்பிரசாத மாகும். தமிழின வரலாற்றிலேயே எரிமலை இதழ் ஒரு மாபெரும் வெற்றியை நோக்கிய திருப்புமுனை. இதனையிட்டு தமிழினமே பேருவகை அடையவேண்டும். இதை வெறும் இதழாய் நோக்காமல் போற்றிப் பாது காக்கவேண்டிய வரலாற்று பதிவேடு எனக்கொள்ளலாம். அந்த முறையில் என்னை கவர்ந்து தவழ்ந்து திரியும் எரிமலை இதழை மாதந்தோறும் அனுப்பிவைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ம. முகுந்தன்
குவைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# தமிழீழத்தில் செஞ்சோலை மலர்வு விழா 22-10-94









## எதிரியின் சூழ்ச்சியை வென்று எமது மண்ணின் வேரென ஆனவர்கள்.

எதிரி எம் இனத்தை அழித்தொழிப்பதற்கு எத்தனை கொடிய யுத்தங்களை சூழ்ச்சிகளை கட்டவிழ்த்து விட்டான். அவனின் ஆக்கிர மிப்புப் படையால் எத்தனை குழந்தைகள் பெற்றோர்களை இழந்தனர். எத்தனை பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இழந்தார்கள். படர்கின்ற சிறு கொடி கொழு கொம்பின்றி போனதைப் போல இந்தக் குழந்தைகள் பாதுகாப்பாளர் அற்றுப்போய் விட நேருகின்ற நிலையை வென்று அவர்கள் செஞ்சோலையில் மலர்ந்தார்கள்.

புதியவர்களாக, ஆரோக்கியம் மிக்கவர்க ளாக, செயற்திறன் மிக்கவர்களாக, நற்சிந்தை மிக்கவர்களாக, பொறுப்புணர்வு மிக்கவர்க ளாக வளர்ந்து வருகின்றார்கள். அவர்களது ஆற்றல்களை, ஆளுமைகளை வெளிக் கொணரும் வண்ணமாய் இக் கலைநிகழ்வு அமைந்திருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சர்வதேசங்களிலும் கிட்டண்ணா மற்றும் தோழர்களினதும் இரண்டாம் ஆண்டு நினைவெழுச்சி நிகழ்வுகள் இடம்பெற்றன. அந்நிகழ்வுகளின் சில காட்சிகள்**











சுவிஸில்

பாரிசில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்மை இங்கு புலியானதால் புறநானூறு புதிதாய் எழுதப்படுகிறது!

“பெண்ணான மாயப் பிசாசு”
சித்தர்கள் திருவாய் மலர்ந்தனர்.

“தூமகேதெனப் புவிமிசை தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வரும்
காமமில்லையேல்....”
சொன்னவன் கம்பன்.

“அரக்குமங்கையர் அழகுடல் தழுவியும்...”
பக்தி இலக்கியப் பாவலர் முத்தமிட்டனர்.

“பட்டங்களாள்வதும், சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்”
சொல்லுக்கு வெடிமருந்துபூசி தீமூட்டினான் பாரதி.

“தாயென்றார்” இராமகிருஷ்ண பரமஹம்சர்.
“சக்தி” என்றான் பாரதிதாசன்.
“பேய்” என்றார்கள் இன்னும் சிலர்.

பூசித்தும் தூசித்தும்
பெண்களைப் புரட்டியெடுத்தனர்;
எங்கள் காப்பியக் கவிஞர்கள்.
“ஐயிரண்டு திசைமுகத்து” ஐயன் மனைவி
மண்டோதரியும் போர்க்களம் போனாள்.
குருதிக்கடலில் குளித்த கணவனுக்கு
உருகி அழவின்றி.... போராட அல்ல.
கர்ணன் வீழ்ந்து கண்மூடும் நேரத்தில்
குந்திதேவி ‘குருதிஷேத்திரம்’ போனாள்
போராட அல்ல.... மகனென்று பிரகடனப்படுத்த.
புறநானூற்றுப் பாடலிலும்
ஒருதாய் போர்க்களம் ஒடினாள்
போராட அல்ல...
மகனுக்கு அம்பு மார்பில்பட்டதா?
முதுகில்பட்டதா?
பட்டிமன்ற விவாதத்துக்குப் பதில்சொல்ல.
“கோதாண்டம்” இராமனுக்கு,
“கோடாரி” பரசுராமனுக்கு
“சக்கரம்” கிருஷ்ணனுக்கு
“கதாயுதம்” வீமனுக்கு,
“காண்டீபம்” அருச்சுனனுக்கு
காவியங்களெல்லாம் கண்களை மூடிக்கொண்டு
ஆண்களை ஆயுதங்களுடனேயே
அவதரிக்கச்செய்தது.
மீசைமுளைத்த தேகத்தில்தானே வீரம்விளையாடும்,
ஆகவே ஆண்மைதான் அதிகாரம் மிக்கது.

## உலைக்களம்

**- வியாசன் -**

பஞ்சப்புலவன் பாரதியின் காலம்வரை
பழைய சாதமே எங்களுக்குப் பரிமாறப்பட்டது.
நேற்றுவரை பெண்மைப் புயல்கள்
அடுப்புக்குள்ளே புகையூதிக்கிடந்தன.
வேலித்துவாரத்திநூடேதான் வெளியுலகைப் பார்த்தன.
அடிவளவுக்குப் போகவும் அடுத்தவரின்
துணைநாடின.
எப்படி எழுந்தார்கள்?
கனவிலும் காணாத நிமிர்வு.
நேசிக்கும் காதலனுடன் பேசிமுடிக்க முன்னர்
நூறுமுறைகள் கூனிக்குறுகியவர்,
உரலை உருட்டக்கூட பலமற்றவர்களென்று
கேலிப்பொருளாகிக் கிடந்தவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டெறும்பு கடித்தால் போதுமே
அட்டதிக்கும் அதிரக் கத்தியவர்.
கண்ணுக்கு மை காலுக்குக் கொலுசு
சின்ன இடையினுக்கு.... சிங்காரப் பொன்னாரம்
பட்டுச்சேலை... பவளவாய்ச்சாயம்
மொட்டுவிரியாத முல்லை மலர்மாலை
இந்தளவும் போதுமென இருந்தவர்களைத்தான்
"வல்வைப் பிள்ளை" நிமிரச் செய்தான்.
பெண்களுக்குச் சரியாசனம் கொடுத்தவன் பாரதி.
இன்று; அரியாசனம் கொடுத்தவன் பிரபாகரன்.
எப்படி எழுந்தார்கள்?
கனவிலும் காணாத நிமிர்வு.
பூத்துக்குலுங்கிய நந்தவனத்துக்குள்ளே



வானரச்சேனையை ஏவி
பூவையும், பிஞ்சையும் பொசுக்கினான் ஒருவன்.
ஆத்தாள் கண்திறந்தாள்.
மறத்தமிழ் மாதொருத்தி
அரக்கனின் நெஞ்சில் நெருப்பினில் வெடித்தாள்.
எப்படி எழுந்தார்கள்?
கனவிலும் காணாத நிமிர்வு.
கருமேகம் கிழிந்து மழைநீர் சரமான நேரத்தில்
மூச்சுவிட்டால் எதிரியின் முதுகில் படும் தூரத்தில்
காலில் இடறும் கண்ணிவெடிகளைத் தாண்டி
பகைவர்பாடிய படைத்தளத்துள்ளே
எங்கள் தங்கையர் புகுந்தனர்.
'கொற்றவைக் கூத்து' முடிந்தபோது
விடிந்தது.
வெற்றி இவர்களின் கையில் வீழ்ந்தது.
எப்படி எழுந்தார்கள்?
கனவிலும் காணாத நிமிர்வு.
தொட்டுவிட யாருண்டு? என்ற துணிவில்
பகைவனின் ஒரு கட்டளைக் கப்பல்
எங்கேயும் நிற்பேன் என்ற திமிரில்
நங்கூரம் பாய்ச்சிக் கிடந்தது;
பரந்தகடலில் எவர்போனால் இது பார்த்துவிடும்.
பிறகென்ன?
பக்கத்தில் படுக்கும் படகுகள் உயிர்க்கும்.
மணலை மீனுக்கு வலை விரித்தவன் பிணமாவான்.
மறுநாள் ஊதிப்பெருத்த உடல் கரையொதுங்கும்
இந்தக் கப்பலுக்கு இலக்குவைத்து
வேள்விக்குத் தயாரானாள் வீரமகளொருத்தி.
வெடிமருந்து சுமந்து மீன்குஞ்சு நீந்தியது.
நேரம்கரைந்து காற்றுக் குளிர்ந்தது.
எதிரியின் நெஞ்சுக்கூட்டையும்,
அவனின் இரும்புக் கோட்டையையும்,
தங்கை தவிடுபொடியாக்கினாள்.
கட்டளைக் கப்பலையும் காணவில்லை;
அங்கயற்கண்ணியும் திரும்பவில்லை.
எப்படி எழுந்தார்கள்?
கனவிலும் காணாத நிமிர்வு.
'சாகரவர்த்தனா'
பகைவன் உலாவந்த 'கடல் மிருகம்'
தமிழனின் குருதி இதற்குத் தனிருசி.
நளாயினியும், மங்கையும் போர்க்கோலம் பூண்டனர்.
வெடியதிர்ந்து கப்பல் கண்மூடியபோது
மீசைமுளைத்த "கப்பலின் கப்டன்"
உயிர்ப்பிச்சை கேட்டுக் கைகளை உயர்த்தினான்.
ஆண்மை அதிகாரம் மிக்கதா?
யார் சொன்னது?
பெண்மை இங்கு புலியானதால்
புறநானூறு புதிதாய் எழுதப்படுகிறது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எத்தனை செல்வங்களை இழந்தோம்

சத்தியத்துக்கு வழிகாட்டிய
மகாத்மா காந்தி பிறந்த மண்....

இந்திய அரசே! அன்று
எங்கள் தியாகி திலீபன்
அண்ணா
அன்னை பூபதி இருவரும் - உன்
அதிக்கப் பசிக்கு
இரையாயினரே.

குமரப்பா, புலேந்தி அம்மான்
ஏனைய
புலிவீரரின் சாவுக்கு
சிங்கள அரசோடு துணை
போனாயே!

உன் பேச்சை உண்மையென
நம்பி வந்த ஜொனி வீரனை
ஏமாற்றினாயே! எமை அழிக்க
வந்தாயே!
உன் அதிகாரத்தைத்தான்
அடக்க யாருமில்லையோ!
இந்திய அரசே உன்
அதிகாரத்துக்கு எல்லையே
இல்லையா?

தளபதி கிட்டண்ணா ஒன்பது
தோழர்களும்
சர்வதேசக் கடலில் சமாதானப்
புறாவாக
தமிழீழத்தை நோக்கி பயணம்
செய்த வேளையில்
உன் அதிகாரத்தைக் கொண்டு
கைதுசெய்ய முயன்றாயோ?

எட்ட நின்று கட்டளை வேறு
போட்டாயோ?
சரணடை சரணடை என்று.
புலிகளுக்கு கட்டளையிட யார்
நீ?
சர்வதேசச் சட்டத்தையும்
மீறினாயோ?
உலக நாடுகளெல்லாம் கண்மூடி
இருந்தனவோ?
உன் அதிகாரத்தைக் கேக்க
யாரும் இல்லையோ?
எங்களுக்கு நீதி சொல்ல யாரும்
இல்லையோ?

செ. அசோக்
சுவிஸ்

# போராட்ட வளர்ச்சி

நிறைந்த கல்வி
செயல்திறன்
(புலிகளின் சிவில் நிர்வாகம்)

துணிவு
பணிவு, வாய்மை
புலிகளின் மக்கள் ஆதரவு

ஆற்றல் அறிவு
புலிகளின் போராட்ட வளர்ச்சி

வேகம் விவேகம்
பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பு

திறமை மனஉறுதி
கரும்புலித் தாக்குதல்

கேள்வி
ஒப்பரேசன் யாழ்தேவி

பதிலுக்குப் பதில்
பூநகரி கூட்டுப்படை முகாம்
தாக்குதல்

கடந்தகால அடிமைத்தன
நிகழ்காலப் போராட்டம்
எதிர்காலச் சுதந்திரம்
வெல்க தமிழீழம்
வாழ்க தமிழீழம்

நிமல் ராஜேஸ்வரன்
சவுதி அரேபியா

தான் தாய்மண்ணிற்கு திரும்பிச் செல்வதற்கான காரணத்தைப் பதிந்து வைத்தபோது.



நண்பனே!
எனக்கும் ஒரு
ஏ. கே. தா
நீ மட்டும்
தனித்து நின்று
எதிரியை
வீழ்த்துகிறாய்....
ஏன்?
என்னால் கூட
அது முடியும்
வருகிறேன் உன்னுடன்
களத்திற்கு ஓர் நாள்
அங்கே
ஒரு கை பார்த்திடுவோமே

எத்தனை பகைவரை
நீ முடிப்பாயோ
அத்தனை பகைவரை
நான் பிடிப்பேன்
உயிருடன்.
இல்லையேல் என் உயிர்
காற்றுடன் கலக்கும்.
அப்போ நீ
எனக்குத் தந்த
ஏ. கே. ஐ எடுத்துக்கொள்.
ஏனெனில்
மீண்டும் மீண்டும்
நான் மறுபிறப்பு எய்துவேன்.

- யாதவன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லை கடந்த நேயம்




தமிழர் பிரச்சினை தொடர்பான 'யாழ்ப்பாணம் திரும்புதல்' (RITORNARE A JAFFNA) எனும் நூலை இத்தாலிய மொழியில் எழுதிய திரு. பிலிப்போ ஜிகாந்தி அவர்களுக்கு சர்வதேச எழுத்தாளர் மட்டத்திலான விருது கிடைத்துள்ளது.

வருடாவருடம் நடைபெறும் PIETROMIGNOS என்ற விருது வழங்கலில் 17.12.94 சனிக்கிழமை தியேட்டர் 'லெல்லி' அரங்கு, பலர்மோ, இத்தாலியில் நடைபெற்றது. மாலை 6.30 மணி, இத்தாலியின் பிரபல்யமான எழுத்தாளர்கள், அறிவுஜீவிகளால் அரங்கம் நிறைந்து காணப்பட்டது. முதலில் றோம் நகரைச் சேர்ந்த இத்தாலிய எழுத்தாளர் கௌரவிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து திரு. பிலிப்போ ஜிகாந்தி அவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டார். மேடைக்குச் சென்ற அவர் தனது இரு கைகளையும் கூப்பி தமிழர் பண்பாட்டுக்கமைய மேடையிலிருந்தவர்களுக்கும் ஏனைய பார்வையாளர்களாக வந்திருந்த எழுத்தாளர்களையும் நோக்கி வணக்கம் செலுத்தினார். நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர், இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இனப்பிரச்சினையையும், இனப் படுகொலையையும் மனித உரிமை மீறல்களையும் எடுத்து விளக்கினார். மேலும், திரு. பிலிப்போ ஜிகாந்தி அவர்களிடம் புத்தகத்தினை எழுதத் தூண்டியதற்கான காரணத்தைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

திரு. பிலிப்போ ஜிகாந்தி தன்னுடைய வீட்டில் வேலைக்காக நண்பர் ஒருவர் மூலம் அருள் என்ற தமிழ் வாலிபர் கிடைத்ததாகவும் அவ் வாலிபனின் அறிவுத்திறனையும் நல்ல பழக்கவழக்கங்களையும் பண்பாட்டினையும் கண்டு வியந்ததாகவும், ஆனால் அவன் உள்ளத்தில் வேதனையையும் வாலிபனது ஏக்கங்களையும் அவர் மூலமாக அறிந்துகொண்டதாகவும் வசதி படைத்த அந்த வாலிபன் இங்கு கஷ்டப்படுவதையும் தனது தாய்நாட்டையும், தனது தாய், தந்தையர், சகோதரர்களை பற்றி நினைத்து வாடுவதையும் தனது நெஞ்சத்தை தொடும் நிகழ்வாக அமைந்துவிட்டது என்றும் வாலிபனின் மூலமாக இங்கு வாழ் தமிழ் மக்கள் யார்? அவர்கள் ஏன் தங்கள் நாட்டை விட்டு, இங்கு வந்து இந்த வாழ்க்கை வாழ்கின்றார்கள். அவர்களுடைய சிரித்த முகங்களுள் எவ்வளவு சோகம் உள்ளது என்பதை நான் மாத்திரம் அறிந்தால் போதாது, ஏனைய இத்தாலிய மக்களும் அறியவேண்டும் என்பதற்காக கடந்த 4 ஆண்டுகளாக கொஞ்சம், கொஞ்சமாக செய்திகளை சேகரித்து நூல் வடிவில் கொண்டுவந்து தமிழர் பிரச்சினை ஓரளவிற்காவது வெளியில் தெரியச் செய்துள்ளேன் என்றார்.

நீங்கள் மேலும் தமிழர்களுக்கு ஏதாவது செய்யப் போகின்றீர்களா என்று கேட்டதற்கு,

“ஆம், மிக விரைவிலே பத்திரிகையாளர்களோடும், தனியார் சங்கங்களோடும், தொழில் ஸ்தாபனங்களோடும் உரையாடப் போகிறேன்” என்று கூறினார்.

அடுத்த புத்தகம் எழுதும் எண்ணம் உண்டா? என்று கேட்டதற்கு,

“நிச்சயமாக. என் நெஞ்சைத் தொடும் வகையில் சம்பவங்கள் ஏற்படுமாயின் எழுதுவேன்” என்று கூறினார்.

பலத்த கரகோசத்துக்கு மத்தியில் அவருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இவ்வைபவத்திற்கு இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டு கலந்து கொண்டு சிறப்புறச் செய்தனர். அவர்கள் கருத்துக் கூறுகையில் சர்வதேச ரீதியில் எமது தாயக உரிமையும், அதற்கான நியாயமான போராட்டம் பற்றியும் தெரியப் படுத்தி வரும் இவ் வேளையில் இப் புத்தக வெளியீட்டு வைபவம் ஒரு படிக்கல்லாக அமைகிறது என்று கூறினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னை அழவிடுங்கள்!

- பிலிப்போ ஜிகாந்தி -

என்னை அழவிடுங்கள்!
பூநகரியில் இறந்துபோன
அந்த (450) நானூற்றிஜம்பது பேரும்
என்னுடைய பிள்ளைகள்

வேதனைகளுடனே நான்
அவர்களைப் பெற்றெடுத்தேன்
அவர்கள் சின்னஞ் சிறுவர்கள்
அந்த 450 பிள்ளைகளையும்
பள்ளிக்கு அனுப்ப முன் நான்
ஆடைகள் அணிவித்தேன்
தலைவாரிப் பூச் சூடினேன்
வண்ண வண்ண சட்டை தைத்தேன்
முழு நாளும்
வகை வகையாய் சமைத்துப்
போட்டேன்
போசாக்காய் வளரவென்று....
ஆனால்! இப்பொழுதோ
அவர்களது கிழிந்த உடைகளிலே
காயங்களும் இரத்தமுமே
அவர்களுக்கு உணவளித்த
வளமான கருநிலமும் இப்போ
செந்நிறக் கழியாகிவிட்டது.

நான் அறிவேன்
அந்த 450 "மாவீரர்களும்"
தேவனோடு இருக்கிறார்கள்
வீரத்தின் உதாரணங்களாக
மேலும் நானூற்றி ஐம்பதுபேர்
தாய் மண்ணில் முளைத்துவிட்டார்கள்.
என்பதுவும் நான் அறிவேன்.
அனேக நோக்கங்களும்
அனேக காரணங்களும்
அவர்களுக்கு உண்டென்பதும்
எனக்குத் தெரியும்.

ஆனாலும்
அன்று
எனக்கு நானூற்றிஐயம்பது பிள்ளைகள்
இருந்தார்கள்
இன்றோ
எனக்கு நானூற்றி ஐம்பது
சவப்பெட்டிகள் தான் உள்ளன.
இந்த வேதனையால் நான்
அழுகிறேன்.
என் உதரமோ மலடாகிவிட்டது.
எனக்கு இனிப் பிள்ளைகள் இல்லை.
அம்மா! என்று என்னை அழைக்கும்
குரலை நான் இனிக் கேட்பேனா?

இளமையும் வலுவும் மிக்க
அவர்களது முகங்களை
வருடி விடவும் முத்தம் கொடுக்கவும்
எனனால் இனி முடியாதே.

இந்த வாழ்க்கையில் அவர்கள்
என்னத்தை அறிந்துகொண்டார்கள்
சமாதானத்தை அடைந்தார்களா?
அன்பையும் காதலையும்
சுவைத்தார்களா?
அஸ்தமனத்தின் பலிபீடத்தில்
அவர்களது இதயங்கள் கக்கிய "தீ"
ஒவ்வொரு மாலையும்
வானில் வண்ணப் பூச்சடிக்கும்
அவர்களது இறுதி மூச்சின் ஓசையை
ஆவேசக் காற்றும் எதிரொலிக்கும்.
அது எனக்காகத்தான் என்பதும்
எனக்குத் தெரியும்.

இலைகளும் மலர்களும் நிறைந்த
நானூற்றிஜம்பது
பச்சை மரங்களைக் கொண்ட
காடு ஒன்று இருந்தது.
வேதனையாலும் மரணத்தினாலும்
முதிர்ச்சி அடைந்த
ஒரேயொரு கனியையே அக்காடு
தியாகம் செய்தது.

வரண்டு பாலைவனம் ஆகிவிட்ட
இந்த மண்ணுக்காக
என் கண்ணீர் அருவியாய் ஓட
என்னை அழவிடுங்கள்.

வதைபட்டு அழுகின்ற
நானூற்றிஜம்பது அன்னையரின்
கண்ணீரையும் சேர்த்து
நானே அழுது தீர்க்க
என்னை அழவிடுங்கள்.

இந்த அன்னையர்கள்
சோகம் ததும்ப - தங்கள்
ஒளியிழந்த விழிகளினால்
கருமை சூழந்த வானத்திலே
புதிய நானூற்றிஜம்பது
நட்சத்திரங்களைக் காண்கிறார்கள்.

பூநகரியிலே இறந்துவிட்டார்கள்!
என்னை நம்புங்கள்
அவர்கள் எல்லோருமே
நான் பெற்ற பிள்ளைகள்

★★★

ஓ! புனித யாகப்பர் தேவாலயமே!
உன் வெண்மையான பலிபீடம்
மாசு மறுவற்ற சுவர்களும் எங்கே!
நம்பிக்கையுடனும்
உன்னிடம் வந்து செபித்தனரே!
பெண்கள், குழந்தைகள்,
முதியோர், இளைஞர்கள்
உன் பீடத்தின் முன்பாக
மௌனமாக முழந்தாளிட்டு...
இப்பொழுதோ நீ (பூநகரியில்)
இறந்துபட்ட ஒரேயோரு
சாம்பல் நிறச் சமாதியாய்
மாறிவிட்டாயோ!
உன்னிடம்
மணியும் இல்லை மலரும் இல்லை.

★★★

திரு. பிலிப்போ ஜிகாந்தி அவர்களின் நெஞ்சைத் தொட்ட நிகழ்வின் நிகழ்வாக இக்கவிதை இருக்கிறது. 450 க்கு மேற்பட்ட போராளிகளை இழந்த தமிழீழத் தாய் எப்படித் துயருறுவாள் என்று அவர் எண்ணிப் பாடுகிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் தடைச் சட்டம் சரியில்லாதது, நெறியில்லாதது!

அரசியல் என்பது நேர்மையின் அடிப்படையில் நடைபெறவேண்டும் என்று ஒவ்வொரு காலத்திலும் அறிஞர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படியானால், ஒவ்வொரு காலகட்டத்திலும், நேர்மையற்ற முறையிலும் நியாயம் தவறிய திசையிலும் ஆட்சிகள் செயல்பட்டு வந்திருக்கின்றன என்பது பொருள். அந்த நிகழ்ச்சிகளின் வரிசையிலே ஒன்றுதான் அண்மையில் மத்திய அரசு மேற்கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை என்கின்ற நடவடிக்கை. இந்த நடவடிக்கைக்கு அரசு என்னவோ காரணங்களைச் சொல்லிக் கொண்டாலும், இந்திய அரசிலும் தமிழக அரசிலும் ஊடுருவிக் கிடக்கும் தமிழ் இன எதிர்ப்பு உணர்வே இதற்கு மூல காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்து தான் இருக்கிறது.

### கொஞ்சிய முஞ்சிகள்

சிறீலங்கா அரசுக்கு எதிராக, ஒரு காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தட்டிக் கொடுத்துத் தடவிக் கொடுத்து வளர்த்து எடுத்தது இந்திய அரசு. மற்றக் கட்சிகளின் அரசு கூட அல்ல, காங்கிரஸ் கட்சியின் அரசுதான் இதைத் தடபுடலாகச் செய்து வந்தது! கோடி கோடியாகப் பணம் கொடுத்தும், இந்தியாவில் அங்கங்கே களங்கள் அமைத்துப் போர்ப்பயிற்சி கொடுத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஊக்கப்படுத்தி வளர்த்து வந்தது இந்திய அரசாங்கம். அதாவது, இன்றைக்கு “இந்தியாவிலும் தமிழகத்திலும் உள்ள ஈழ விடுதலைப் புலிகள் ஆதரவு அமைப்புக்களைத் தடை செய்வோம், அவர்களுக்கு ஏழு ஆண்டுச் சிறைத் தண்டனை வழங்குவோம்” என்ற முழக்கத்தோடு புறப்பட்டிருக்கின்ற இந்திய அரசாங்கம்தான், ஈழப்புலிகளுக்கு ஆதரவளித்த மிகப்பெரிய இந்திய அமைப்பு. இன்று பிறந்துள்ள ஈழவிடுதலைப் புலிகள் தடைச் சட்டம் சரியாக அமுல் படுத்தப்பட வேண்டுமானால், இந்திய அரசாங்கம் அதன் கெழுதகை நண்பனாகிய தமிழக அ.தி.மு.க. அரசாங்கமும்தான் முதலிலே குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்பட வேண்டியவர்கள். ஏனெனில் இந்த இரண்டு பேருந்தான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வரவேற்பு, பாராட்டு, பொற்கிழி, படைப்பயிற்சி என்று வகை வகையாக வழங்கி விடுதலைப் புலி ஆதரவாளர்களின் பெரிய வாத்தியார்களாக விளங்குகிறார்கள்.

அள்ளி, அள்ளி தழுவி உச்சி மோந்தும் உள்ளம் உருக நட்புப் பாராட்டிய இந்த வாத்தியார்கள் திடீரென்று விடுதலைப் புலிகளுக்குத் தடை என்ற சட்டத்தை ஏன் பிறப்பித்தார்கள் என்றால், அதிலே தான் வழக்கமான அரசியல் நேர்மைக் கொலை என்னும் வஞ்சகத்தின் முகம் முழுமையாக மறைந்திருக்கிறது. விடுதலைப் புலிகளை ஆதரித்தபோது, அவர்களை வைத்துக்கொண்டு சிறீலங்கா அரசை மிரட்ட வேண்டும் என்னும் ஒரே நோக்கம்தான் இந்திய அரசுக்கு இருந்தது. விடுதலைப் புலிகளின் உயிர் இலட்சியமாகிய தனித் தமிழ் ஈழம் என்பதை அப்போது இந்திய அரசு ஒரு பொருட்டாகவே கணிக்கவில்லை. அதே போல, உலகெங்கும் படர்ந்து பரவியுள்ள ஏழு கோடித் தமிழர்கள் மத்தியில் ஒரு புதிய இன எழுச்சி அலை எழுந்துவிடும் என்பதும் அந்தக் கடிவாளக் குதிரைகளின் கருத்தில் அப்போது தட்டுப்படவே இல்லை. இத்தகைய கட்டைத்தனமாகவும் குட்டைத்தனமாகவும் அரசியல் நிகழ்ச்சிகளை நடத்தி அவைகளின் விளைவான பெரிய சிக்கல்களில் மாட்டிக் கொள்வதே இந்திய அரசுகளின் வரலாறாக இருந்து வந்திருக்கிறது. இந்த மண்ணில் படர்ந்த அந்நிய அரசுகளானாலும் சரி, இந்த மண்ணிலே பிறந்து மாயாவாதம் பேசும் பண்டாரம் பரதேசிகளின் ஆட்சியானாலும் சரி, எப்போதுமே இந்திய அரசுகளின் நடைமுறை இதுவாகத்தான் இருந்திருக்கிறது.

சான்றாக, இந்தியாவை அடக்கியாண்ட வெள்ளையன், தன் கைவசமிருந்த வளர்ச்சி இல்லாத வெறும் மண் திட்டுகளை வயல் வெளிகளாகவும் மாநாகரங்களாகவும் விரித்து எழுப்ப முயன்றபோது, இந்தியர்களைக் கூலிகளாக இழுத்துச் சென்ற அந்த நாடுகளிலெல்லாம் புதிய இனப்பிரச்சினைக்கு விதை ஊன்றி நீர்பாய்ச்சி வைத்தான். அவனுக்குப் பிறகு வந்த காந்திச் சுதந்திர இந்திய அரசு தன் மாநிலங்களுக்குள்ளேயே ஓரவஞ்சனை நாடகமாடி, இந்தியப் பெருநிலத்தின் மூலக்குடிகளும் முதன்மைக் குடிகளுமான தமிழ் இனத்தையே அவமதித்து வருகிறது. குட்டக் குட்டக் குனிகிறவனாக இருந்தாலும், அவன் எப்போதும் அப்படியே இருக்க மாட்டான், என்றைக்காவது ஒருநாள் இதயம் கொதித்து எழுந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிற்பான். இந்த இயற்கை நியதிக்குத் தமிழ் இனத்தானும் விதிவிலக்கு அல்லன் என்பதை மறந்து செயல் பட்டு, இந்த மண்ணின் அரசியல் அமைதியையே இவர்கள் குலைத்து விட்டார்கள்! தமிழர்கள் என்ற பெயரில் இங்கே நடமாடும் தமிழ் இன எதிரிகளான பார்ப்பனர்க ளைத் துணைசேர்த்துக் கொண்டு இந்திய அரசாங்கத்தார் இந்தத் தவற்றைத் தொடர்ந்து செய்து வருகிறார்கள். இந்தத் தவறின் வரிசையிலே ஒன்றுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்திய அரசு விதித்துள்ள தடை.

ஈழ விடுதலைப் புலிகள் இயக் கம் ஓர் இன விடுதலை இயக்கம் என்பதைப் புரிந்துகொள்ளாமல், அவர்களைத் தங்கள் அரசியல் சூதாட்டத்தில் பகடைக் காய்களா கப் பயன்படுத்த முனைந்த அரசாங்கத்தில் உள்ள மந்த மதியினரும் அவர்களின் வழிகாட் டிகளான பார்ப்பனர்களும், கொஞ் சக் காலத்துக்குப் பிறகுதான் அந்த உண்மையைப் புரிந்துகொண்டார் கள். அந்த எழுச்சியின் விளைவாக இந்தியத் தமிழகத்திலும் இன எழுச்சி எதிரொலிகள் கேட்குமே என்பதையும், காலங்கடந்தே இவர் கள் புரிந்துகொண்டார்கள். அதன் விளைவாகத்தான் எரியும் நெருப் பிலே எண்ணெயை ஊற்றுவது போல, இவர்கள் "தடை" யைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டிருக் கிறார்கள்.

### கட்சி மாறினார்கள்!

இதிலே, இந்திய ஆளும் வர்க்கத் தின் சிறுபிள்ளைத் தனத்தைக் கோடிட்டுக் காட்டும் கிளைக்கதை ஒன்றும் இருக்கிறது. விடுதலைப் புலி இயக்க வீரர்களைக் காட்டி சிறீலங்கா அரசை மட்டந்தட்டப் புறப்பட்ட இந்திய அரசாங்கத்தார், திடீரென்று இடையிலேயே வீணத் தனமும் எட்டப்பதனமும் புரியக் கிளம்பி விட்டார்கள்! ஆமாம்; விடுதலைப் புலிகளின் பக்கம் நின்று சிறீலங்கா அரசுக்கு 'வெவ்வே' காட்டிக்கொண்டிருந்த இந்திய அரசாங்கம் என்னும் சிறுபிள்ளை, இரவோடு இரவாகக் கட்சிமாறி, "விடுதலைப் புலிகளைப் பிடித்துத் தருகிறோம், அதற்குப் பதிலாக நீங்கள் என்ன தருவீர் கள்?" என்று இலங்கை அரசுடன் அசிங்க அரசியல் பேரம் பண்ணத் தொடங்கிவிட்டது! தோழமை பேசித் துணைநின்ற இந்தியத் துணைக்கண்டம் தூய்மையல்லாத அரசியல் தடத்தில் இறங்கி விட்ட தைக் கண்டு வியப்படைந்த விடுத லைப் புலிகள், இனம் இனத்தோடு என்பது போல இந்திய ஆரியனும் இலங்கை நாட்டு ஆரியனும் ஒன்றுகூடிக் கொண்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்ததோடு புதிய தொரு விழிப்பும் அடைந்தார்கள்.

தங்கள் பழைய எதிரிகளான சிங்களவர்களோடு தற்காலிக ஒப்பந்தம் ஒன்று செய்துகொண்டு, தங்களுக்குப் புதிய எதிரியாக முளைத்த இந்தியாவின் படை யையே "தண்ணிகாட்டி"த் திருப்பி அனுப்பிவிட்டார்கள் விடுதலைப் புலிகள். இந்த நிகழ்ச்சி இந்திய காங்கிரஸ் ஆட்சிக்காரர்களின் இதயத்தில் பெரிய குரோதத்தையும் பழிவாங்கும் கொடூரத்தையும் எழுப்பி விட்டிருக்கிறது. இதன் காரணமாகவும் இந்திய ஆட்சியா ளர்கள், அரசியல் நேர்மை என்ன ஆனாலும் சரி, எங்களை அவமதித் தவனைப் பழிவாங்கியே தீருவோம் என்று துள்ளிக் குதிக்கிறார்கள். 'உடையவன் பொறுத்தாலும் அவன் வீட்டு நாய் பொறுக்காது' என்பது போல, தமிழகத்து அரசி யல் வாதிகள், இந்தியாவின் இந்தத் தவறான வெறிக் கோப நெருப்பில் நெய்வார்த்துக்கொண்டு இருக்கி றார்கள்!

ஓர் இனத்து மக்களிடையே நிலவுகிற அடிப்படைப் பாசம் என்பது பெற்றோருக்கும் குழந்தைக ளுக்கும் இடையே உள்ள பாசம் போன்றது. காலத் தடைகளாலோ, இடைத்தடைகளாலோ, கத்தி நீட்டும் தாக்குதல்களாலோ இந்தப் பாசத்தை வெட்டிப் பிரித்திட முடியாது. காலச் சூழ்நிலைகளால் பல இடங்களில் சிதறுண்டு கிடந்தாலும் ஓர் இனத்து மக்களின் பாசப்பிணைப்பு இடை வற்றாமல் இருந்தே வரும் என்பதை உலக வரலாறு காட்டிக்கொண்டு இருக் கிறது. இதற்குப் பல எடுத்துக் காட்டுகள் உண்டென்றாலும், தங்கள் மண்ணையே மறந்து தலை முறை தலைமுறைகளாக உலகின் பல நாடுகளுக்குள் சிதறிக் கிடந்த இஸ்ரவேலர்கள் நாடக உருவான வரலாறு ஒன்றிணைந்து புதிய இஸ்ரவேல் நாடாக உருவான வரலாறு அண்மைக்கால நிகழ்ச்சி என்பதால், அதை யாரும் மறந்து விடக்கூடாது. தமிழர்கள் நாட்டு எல்லைகளைத் தாண்டி, ஒருவரை ஒருவர் அள்ளித் தழுவிக் கொள்ளு கிறார்களோ இல்லையோ, தங்கள் நாடுகளின் எல்லைக்குள் நின்ற படியே அயல் பகுதிகளில் வாழும் தங்கள் தமிழ் இனத்தவர்களுக்காக அவர்கள் நெஞ்சம் உருகுவதை மனித மனத்தின் இயற்கை என்று தெரிந்துகொண்டு அதற்கு ஒரு மரியாதை கொடுக்கவேண்டும். இந்த எளிய இயல்பான உண்மை யைக் கூட இந்திய ஆட்சிக்காரர் கள் மறந்து போனது பெரிய வியப்பாகவே இருக்கிறது.

உலகத்தின் மற்றப் பகுதிகளில் வாழும் தமிழர்களை விட இந்தியா வில் வாழும் தமிழர்கள், ஈழத் தமிழர்களுக்கு மிக அருகில் இருக்கி றார்கள். எங்கோ வங்காள தேசத் திலிருந்தும் திபெத்திலுருந்தும் ஆப்கானிஸ்தானத்திலிருந்தும் அபலைகளாக ஓடிவரும் அகதிக ளுக்காகக் கூடக் கசிந்து உருகிக் கண்ணீர் வடிப்பவர்கள் தமிழர்கள். கஞ்சித் தண்ணீருக்கு வழியில்லாத போதுகூட, அண்டை அயலில் கடன் வாங்கியாவது அந்த அகதிக ளின் பராமரிப்புக்கு உதவிக்கரம் நீட்டுபவர்கள் தமிழகத்துத் தமிழர் கள்! அவர்களின் இனத்தவர்க ளான ஈழத்தமிழர்கள் அல்லல் பட்டு ஆற்றாது அழுது புலம்புகிற போது, இவர்கள் வாயையும் மனத்தையும் மூடிக்கொள்ளும் வன்நெஞ்சக் கொடியவர்களாக இருந்திவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பது - அப்படி யார் எதிர்பார்த்தாலும் அது, வடிகட் டிய அறியாமையாகும். இந்த அறியாமை தடித்துப் போனதா லேயே, இந்திய அரசு, விடுதலைப்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் இயக்கத்திற்கு தடை என்றும், அந்த இயக்கத்தை ஆதரிப்பவர்களுக்குச் சிறை என்றும் மனித நேயத்தையே எரித்துச் சாம்பலாக்கும் சட்டத்தைப்பிறப்பித்திருக்கிறது.

## நேற்றை மறந்து விடுவதா!

இந்திய அரசு சிந்திக்க வேண்டும்; தனது நாட்டு வரலாற்றையே மீட்டு எடுத்துச் சிந்திக்கவேண்டும். நாமும் ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்தினோம். 45 ஆண்டுக ளுக்கு முன்புதான் அந்தப் போராட்டம் ஒருவகையில் முற்றுப்பெற்றது. நம்முடைய இனத்தாரும் உறவினரும் அல்லாத பல நாட் டினர் நம்முடைய போராட்டத்துக்கு ஆதரவுவேண்டும் என்று அன்றைக்கு நாம் விரும்பினோம். ஒவ்வொரு நாட்டின் தலைவ ரையும் சந்தித்து உதவிகோரினோம். சிலர் உதவினார்கள், சிலர் உதவவில்லை. இத்தகைய போராட்ட வரலாற்றுக்கு உரியவர்களான நாம், இன்றைக்கு, தனிநாடு கோரும் உரிமைப் போரில் ஈடுபட்டுள்ள ஈழத்தவர்களுக்கு அவர்களின் இனத்தவர்களான இந்தியத் தமிழர்கள் ஆதரவு தரக்கூடாது - தந்தால் சிறையில் பிடித்து அடைப்போம் என்று சொல்லுகிறோமோ, இது நியாயந்தானா என்று இந்திய ஆட்சியாளர்கள் சிந்திக்கவேண்டும். அற்பனுக்கு பவிசு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் என்பது போல நமக்குச் சுதந்திரம் வந்துவிட்டது என்பதால் அதைத் தாறுமாறாகப் பயன்படுத்தக்கூடாது. மற்ற வர்களின் சுதந்திரப் போராட்டங்களை முடக் கக்கூடிய செயல்களில் நாம் ஈடுபடவே கூடாது.

## நமக்குப் பெருமையில்லை!

அரசியல் என்பது மிக நாகரிகமாக நடைபெறவேண்டிய ஒரு பொது நிகழ்ச்சி; அப்படியே தொடரவேண்டிய நிகழ்ச்சி. அதிலே பெரியதனங்களும் பெருந்தன்மைகளும் அரிய வரலாற்று ஓர்மையும் இணைந்து மிளிர வேண்டும். தனி மனிதர்களுக்கோ ஒரு மனிதக் கும்பலுக்கோ ஏற்படக்கூடிய பழிவாங்கும் உணர்ச்சியும் அதன் விளைவான இழிவான செயல்களும் நல்ல அரசியலில் தலைகாட்டவே கூடாது. சிறுபிள்ளைத்தனம் என்பதற்கோ, ஒரு நாட்டின் அரசியலில் இடமே கிடையாது! 'பரதநாடு பழம் பெருநாடு' என்று பறையடித்து மகிழ்கிறவர்கள், ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு நாம் விதித்திருக்கிற தடை அந்தப் பழமைக்கும் பெருமைக்கும் உகந்ததுதானா, அவகளை மேலும் உயர்த்தக்கூடியதுதானா என்று சிந்திக்கவேண்டும்; ஆழ்ந்து ஆழ்ந்து சிந் திக்க வேண்டும்; பன்முறை நெஞ்சிலே கைவைத்துச் சிந்திக்க வேண்டும்.

நன்றி: "வீரநடய் அறிவியக்கம்"

# அருந்தமிழ் தலைவா வாழி!

அமிழ்தெனத் திகழ்ந்த எங்கள்
அருந்தமிழ் வளர்ச்சி குன்றி
அமிழ்ந்தது; தமிழர் மானம்
அழிந்தது. உலகம் எல்லாம்
இகழ்ந்திட சிறுமையுற்று
இழிந்தது. முன்னோர் வீரம்
அகழ்ந்திட முடியா வண்ணம்
ஆழ்ந்தது; வீழ்ச்சி யுற்றோம்.


தேக்கமுற்றிருந்த வாழ்வின்
திசையினைத் திரும்பி விட்டாய்.
போர்க்கலை கற்றாய் மீண்டும்
புதுக்கினாய் தமிழர் வீரம்.
யார்க்கிது வாய்க்கும் எங்கள்
இனம் பெற்ற தவத்தின் செல்வ!
வார்த்தைகள் இல்லை; நீதான்
வரலாற்றின் நெடிய பாடம்!
குடிசெயல் வகையின் நோக்கைக்
குறித்தளம் வள்ளு வன்சொற்
படியொரு படையைக் கண்டாய்
பருவத்தை எண்ணி எண்ணி
மடிசெய்து கிடந்தாய் இல்லை.
மண்ணிலே புலிகள் வீரம்
இடியென முழங்க வைத்தாய்
எதிரிகள் ஓடுங்கிப் போனார்!
கூற்றெனக் குதிப்பார், மாற்றார்
குருதியில் குளிப்பார்; நாளும்
வேற்றவர் பிடித்திருந்த
விளைநிலம் மீட்பார், முற்றா
நாற்றென இருந்தார் கூட
நானிலம் வியக்கும் வண்ணம்
ஆற்றலின் வடிவ மானார்!
அவன்படை மாட்சி என்னே!
கரும்புலி என்றாய்! பாயும்
கடற்புலி என்றாய்; சீறி
வரும்புலி கூட்டத்தாரில்
வான்புலி ஈதோ என்றாய்
பெரும்புலி வரிசைக்குள்ளே
பெண்புலி முதன்மை பெற்றார்.
அரும்புலித் தலைவ! எங்கள்
ஆண்டகைப் பல்லாண்டு
வாழ்க!

- ஆசைத்தம்பி

(சென்னை மத்தியச் சிறையில் தடா கைதிகள் கொண்டாடிய, தம்பியின் பிறந்தநாள் விழா கவியரங்கில் படிக்கப்பட்ட கவிதை)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தென்னாபிரிக்கா இன்று முழுமையான சுதந்திரத்தை நெருங்கிக்கொண்டிருப்பதை யாவரும் அறிவர். அதன் பூரண சுதந்திர இலட்சிய வெற்றியை, இவ்விடைக் காலத்தில் உடைத்துவிடலாம் என எவரும் கனவுகூட காணமுடியாது. இத்தகைய வெற்றிக்குத் தலைவனாக வழிகாட்டிய நெல்சன் மண்டலாவை நாம் போற்றிய போதிலும், அவருக்கு உறுதுணையாகச் செயல்பட்டு அடித்தளம் இட்டவர்களில், தென்னாபிரிக்க பொதுவுடமைக் கட்சியின் செயலாளர் நாயகமாக விளங்கிய கிறிஸ் ஹானி குறிப்பிடத் தக்கவர். இவரது பொதுவுடமைக் கட்சி, நெல்சன் மண்டலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டது. இக் கூட்டமைப்பின், ஆயுதக்குழுவின் தளபதியாக நாம் கிறிஸ் ஹானியையே குறிப்பிடலாம்.

இவர், 1993ம் ஆண்டு, ஏப்ரல் 10ம் திகதி, வெள்ளை நிறவாதி ஒருவனால், அவரின் வீட்டின் முன்னால் வைத்து கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார். பூரண சுதந்திரத்தை ஆபிரிக்கா நெருங்கிக்கொண்டிருந்த காலகட்டத்தில், அதனைக் காணாமலேயே, அதற்காக அயராது, இரவு பகலாகப் போராடிய ஒரு விடுதலைத் தலைவனின் உயிர் பறிபோனது.

அத்தகைய மாவீரனின் மரணம் பற்றி, அவரது விடுதலைத் தோழன் தாமி மாலியால் ``CHRIS HANI The Sun that set before Dawn'' என்ற நூல் எழுதப்பட்டது. விடியலின் முன் மறைந்த சூரியன் என்பதே அதன் அர்த்தம்.

1985ம் ஆண்டு, கொக்கிளாய் இராணுவ முகாம் மீது எமது போராளிகள் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலின் போது 16 போராளிகள் வீரச்சாவடைந்தனர். அவர்களின் நினைவாக ஒரு நூல் ஒன்று தமிழீழத்தில் எழுதப்பட்டது. அந்த நூலின் பெயர் **"விடியலுக்கு முந்திய மரணங்கள்."**

"இத்துணை கஸ்டங்களைப் பட்டா இந்த முகாமை நீங்கள் தகர்த்தீர்கள்?" என்று பலர் கேட்டிருக்கின்றார்கள். காடுகளுக்குள்ளால் படையணி நகர்ந்து செல்கின்றபோது பட்டதுயரங்கள் கொஞ்சமல்ல. தமிழீழ போராட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் இம் முகாம் தகர்ப்பு ஒரு முக்கியத்துவம் திகழ்ந்ததாக, போர் நிகழ்வாக விளங்கியது. ஒரு நம்பிக்கைச் சூரியன் உதயமானான். மக்களுக்கு அசைக்க முடியாத உறுதியை இத் தாக்குதல் அளித்தது. இந்தத் தாக்குதலில் பங்கு கொண்ட போராளிகளைப் பற்றிய நினைவுகள் இன்னும்தான் பசுமையாக இருக்கின்றது. "டேய் பொடியங்கள் சாகிறாங்களடா" என ஓடிப்போய் எதிரியோடு போரிட்ட **சைமன்**. அவனோடு களத்தில் "இந்த முகாமை அழித்துவிட்டு உள்ள பொலிஸ் நிலையங்களை எல்லாம் அழித்தொழிப்போம்" என்று கூறிய **பழசு**. இந்த மனிதர்களை நாம் இழந்துவிட்டோம். இருந்தும் எம் தேசத்தால் இவர்கள் இன்னும் உயிர்ப்போடு எண்ணப்படுகிறார்கள். இவர்கள் நடந்த பாதையில், வலிமையும் திடமும் மிக்கதான பெரிய படையணிகள் விடியலை நோக்கி விரைந்து கொண்டு தான் இருக்கின்றது.

சத்திய வேள்வியில் தீக் குளித்தபடி புதிய புதிய சூரியன்கள் உதயமாகியதால், அவர்களது எண்ணங்கள் கனலாக - வீரர்கள் அணிவகுத்தபடிதான்.

இந்தப் பதினாறு பேரினதும் இழப்பால் தமிழீழ மக்கள் துயருற்றார்கள், துடித்தார்கள்.

பதினாறு செல்வங்களைப் பறிகொடுத்து விட்டோமே என்று பதறினார்கள்.

மக்களின் நேயத்திற்கும் அன்புக்கும் உரியவர்களாக இருந்த விடுதலைப் புலிகள், கொக்கிளாய் இராணுவ முகாமை நோக்கி நடந்த போர்ப் பயணம் மெய்சிலிர்க்க வைக்கும் ஒன்றே.

இந்தப் போர் நடைப் பயணத்தின் போது எவ்வளவு சந்தோஷமாக பாடிக் கொண்டு நடந்தார்கள். காட்டில் பறந்த பட்சிகளைப் போல, காட்டில் எறித்த சூரியனைப் போல, காட்டில் அவர்களோடு உரசிக் குலவிய அந்தக் காற்றைப் போல அவர்கள் இருந்தார்கள் என்பது கற்பனை அல்ல. இந்த வீரர்கள் எமது போர்ப்பூமியின் கதை மாந்தர்கள். பத்து ஆண்டுகள் ஆகிறது! இன்றும் இளமையோடும் உயிர்ப்போடும் எங்கள் எண்ணங்களை நிறைக்கின்ற இந்த வீரர்களின் நினைவில் நனைவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீர வணக்கம்



விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் ஒரு வீர காவியம் படைக்கப்படுகிறது. கொக்கிளாய் இராணுவ முகாம். காட்டின் நடுவே ஒரு கற்கோட்டை. சுற்றிலும் முள்வேலிகள். மண்மூட்டை அரண்கள். பாதுகாப்பு அகழிகள். நிலக்கண்ணிப் பொறிகள். இயந்திரத் துப்பாக்கி பொருத்திய பாதுகாப்புக் கோபுரங்கள். இத்தனைக்கும் மத்தியில் இளம் புலிகள் களம் குதிக்கின்றனர். பயங்கரச் சண்டை மூள்கிறது. அஞ்சா நெஞ்சம் படைத்த எமது வீரர்கள் மூர்க்கத்துடன் முன்னேறித் தாக்குகின்றனர். எதிரியின் பாதுகாப்பு அரண்கள் நொறுங்குகின்றன. எதிரிப் படை சிதறடிக்கப்படுகிறது. எஞ்சியோர் பின்வாங்கி ஓட்டம் பிடிக்கின்றனர். ஒரு பெரிய போர்ச் சாதனை நிலைநாட்டப்படுகிறது.

இந்த வீர காவியத்தைப் படைத்து களத்தில் பலியான தியாகிகளே! உங்கள் வீரத்திற்கும் தியாகத்திற்கும் எமது வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.











மேலிருந்து இடம் வலமாக

**கனகரத்தினம் ரஞ்சன்**
(சைமன்) பொத்துவில்

**குணசிங்கராசா துவாரகன்**
(மதூரன்)

**பொன்னையா சந்திரகுமார்**
(காந்தரூபன்) மட்டக்களப்பு

**கதிரவேலு செல்வராசா**
(மகான்) கம்பர்மலை

**நமச்சிவாயம் தருமராசா**
(ரவி) செம்மலை

**சண்முகராஜா பிரபாகரன்**
(ஜெகன், இடிஅமீன்) திருகோணமலை

**சதாசிவம் அன்ரனி**
(சொனி) சாவகச்சேரி

**பொன்னையா சண்முகநாதன்**
(சஞ்சன், மாறன்) கண்டாவளை

**தியாகராஜா வரேந்திரன்**
(தளபாலன்) பரந்தன்

**துரைசாமி சிறீமுருகன்**
(காந்தன்) சாவகச்சேரி

**கனகசபை செல்வராசா**
(கென்டி) மட்டக்களப்பு

**முதுங்கொடுவ உடுகம கேமசிறி**
(பழம், வின்சன்ற்) பருத்தித்துறை

**கந்தையா ஜெயந்தன்**
(நிமால்) பருத்தித்துறை

**பாலசுந்தரம் பாலகணேசன்**
(சங்கர்) வல்வெட்டித்துறை

**கனகு இராசநாயகம்**
(வேதா, சிவா) கண்டாவளை

**கந்தையா பரமேஸ்வரன்**
(காந்தி, பாலன்) தம்பலகாமம்







சிதறிய உனது ரத்தம்
பிறந்த மண்ணில் சிந்தியதும் சுடரானது
ஆயிரமாயிரம் மனங்களில் கலந்தது
பற்றியெரிந்து பகையதிர மனம் சிதற
வெளியெங்கும் வெடித்தெழுகிறது பெருந்தீ
நீ கனிந்து சூரியனால் விடியும்
உன் தாகம் மலர்களாய்ச் சிரிக்க
கனவுகள் உயிர்த்துப் பறவைகளாகும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## "எத்தனை நாள் துயருற்றிருப்பேன்"

www.tamilarangam.net

### கவிதைப் போட்டி

எரிமலை வாசகர்களே, இந்தப் புகைப்படம் சொல்லுகின்ற காதையை சொல்லுவீர்களா? முதல் மூன்று இடம்பெறும் கவிதைகள் எரிமலையில் பிரசுரிக்கப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்